श्री श्रीकृष्णप्रेमि प्रणीता

॥ श्री वैष्णवसंहिता ॥

(दशम भागः)

ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச் செய்த

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதை

(பத்தாவது பாகம் - தமிழ் உரையுடன்)

प्रकाशकः

श्री टि. सी. श्रीनिवासः

अध्यक्षकः, प्रेमिक ग्रन्थ प्रकाशक सभा, परनूर्,

मुगयूर् (मार्ग), एस्. ए. जिल्ला, तमिल् नाडु.

வெளியிடுபவர் :

ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸன்

தலைவர்

ப்ரேமிக க்ரந்த ப்ரகாசக ஸபா

பரனூர், முகையூர் (வழி)

தென்னாற்காடு ஜில்லா, தமிழ் நாடு.

1975.

ப்ரேமிக கிரந்த ப்ரகாசக ஸபாவின்
19 வது வெளியீடு.

प्रचार मूल्यम् रू. ३-००
मार्गव्ययः पृथक्

பிரசார விலை ரூ. 3-00.
தபால் செலவு தனி.

लक्ष्मी विजयम् मुद्राशाला, तिरुवल्लिक्केणि, मद्रास.
லக்ஷ்மி விஜயம் பிரஸ், 2, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600005.



MITTADAR
BRAHMASRI C. VEMBAYYAR
KRISHNAPURAM—KADAYANALLUR

ஸ்ரீ ஹரி:

முகவுரை

பெரியோர்களே!

கலியின் கொடுமையை அடக்கவல்ல அவதார புருஷர்களின் வைபவத்தை விரிவாகக் கூறும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகம் இம்மலருடன் முடிவு பெறுகிறது. நமது ஸ்ரீ அண்ணா ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் நூல்களுள் இந்தக் கிரந்தமே மிகப் பெரியதாகும். மிகப்பெருமை வாய்ந்ததுமாகும். சுத்தமான பாகவத தர்மத்தையே கலிக்கு ஏற்றதெனக் கருதி ஸ்ரீ அண்ணா பல நூல்களை அருளிச் செய்துள்ளார். அவை நூற்றுக் கணக்கானவை. காவியம், நாடகம், அலங்காரம், ஸ்தோத்திரம், வேதாந்தம், இதிஹாஸம், புராணம், வியாக்கியானம், கீதங்கள் என்கிற முறையில் பல நூற்றுக்கணக்கான கிரந்தங்களை உலகில் நமக்கு வாரி வழங்கியுள்ளார். அவைகளைப் பிரசுரித்து பாகவதர்களுக்கு சுலபமாகக் கிடைக்கும்படி ஒரு கைங்கரியம் நடத்துவதற்காக 'பிரேமிக கிரந்த பிரகாசக ஸபை' என்னும் ஒரு ஸ்தாபனம் சில ஆண்டுகளாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதில் சேர்ந்துள்ள நண்பர்களின் சந்தா மூலமாகவும், ஆஸ்திகர்கள் அளிக்கும் நன்கொடை மூலமாகவும் பல கிரந்தங்களை வெளியிட்டு வருகிறோம். பேப்பர், அச்சுக்கூலி முதலியவை அதிகமாகிக்கொண்டே வருவதால் பிறர் செய்யும் பொருளுதவியின்றி புத்தகத்தின் அடக்கவிலையால் மட்டும் இந்த ஸ்தாபனத்தை நிர்வஹிக்க முடியாது. ஆனால் இந்த பக்தி நூல் பிரசாரத்தில் எங்களை இயக்குவித்து ஊக்குவிக்

கும் சந்தாதாரர்களுக்கு நன்றிகூறுவது நம் குடும்பத்திற்கு நாமே நன்றி கூறுவதைப்போல்தான் ஆகும். பொதுவாக சந்தாதாரர்களின் ஒத்துழைப்பு இல்லாவிடில் இந்த மாபெரும் கிரந்தம் சிறுகச் சிறுக வெளிவந்திராது என்பது திண்ணம்.

ஸ்ரீ வைஷ்ணவஸம்ஹிதை நமது பாரத நாட்டின் சிறந்த இதிஹாஸமாகும். ஸ்ரீ ராமாயணம், பாரதம் இரண்டும் திரேதா யுகத்திலும், துவாபர யுகத்திலும் அவதரித்த மஹாபுருஷர்களின் கதையைப் பேசுகிறது. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையோ இந்தக் கலியில் அவதரித்தவர்களின் பெருமையைக் கூறுகிறது. ஆதிசங்கரர், ராமனுஜர், மத்வர், கிருஷ்ணசைதன்யர், ஸ்ரீ வல்லவர், நிம்பார்கர், ஹரிவம்சர், ஸமர்த்த ராமதாஸ், ராமானந்தர் போன்ற சிறந்த அவதார புருஷர்களுடையவும், அவர்கள் காட்டிய வழியில் சென்ற மெய்யடியார்களுடையவும் ஆத்மகுணங்களைக் காட்டும் வரலாறுகளை இந்த வைஷ்ணவ ஸம்ஹிதை தொகுத்துத் தருகிறது. மேலும் நம்நாட்டில் வாழ்ந்து வந்த கிருஷ்ணதேவராயர், சிவாஜி, அக்பர், காந்திஜி முதலிய சிறந்த ராஜரிஷிகளுடைய தெய்வபக்தியும், தேசபக்தியும், அவர்கள் மதாசார்யர்களிடம் காட்டிய நன்மதிப்பும் இந்த வைஷ்ணவஸம்ஹிதையில் காணப்படுகிறது. எனவே இது பாரதநாட்டின் சிறந்த இதிஹாஸம் என்பதில் தடையில்லை.

பகவானின் அவதாரங்களைப் பாட வால்மீகியும் வியாஸரும் தோன்றியதுபோல், பாகவதர்களின் அவதாரங்களைப் பாடவே நம் ஸ்ரீ அண்ணா ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி அவர்கள் தோன்றியுள்ளார் என்று சொல்லுவது மிகையாகாது. ஸ்ரீ பாகவதமும் ஸ்ரீ ராமாயணமும் எப்படி அருட்பிரவாகத்தால் தோன்றிய அத்புதமான காவியமோ, அதேபோல்

தான் ஸ்ரீ வைஷ்ணவஸம்ஹிதையும் அருட்பிரவாகத்தால் அதுவாகத் தோன்றிய திவ்யமான கவிதையே அன்றி, படித்த ஸாமர்த்தியத்தால் எழுதியது அல்ல. பல்லாயிரம் சுலோகங்கள் உள்ள இம் மாபெரும் நூலை ஒருவன் படித்த ஸாமர்த்தியத்தால் எப்படி எழுதிவிட முடியும்? இது திவ்ய கவிதையே. எனவே இதைப் படிப்பதாலும் கேட்பதாலும் எல்லாவித நன்மைகளும் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஸ்ரீ பாகவதம், ஸ்ரீ ராமாயணம் இவைகளைப் பாராயணமும் உபந்யாஸமும் நடத்துவதுபோலவே இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையையும் பாராயணமும், உபன்யாஸமும் ஆங்காங்கு நடத்தி எல்லா நன்மைகளையும் பெறலாம்.

இந்தப் பத்தாவது பாகம் ஸ்ரீ ஸத்குரு பட்டாபிஷேகத்துடன் மங்களமாக முடிகிறது. ஹரிநாம ஸங்கீர்த்தனமும், ஸத்யம், அஹிம்ஸை, ஸமதர்மம், பரோபகாரம் முதலிய நற்குணங்களுமே இந்த ஸ்ரீ வைஷ்ணவஸம்ஹிதையின் ஸாரமான விஷயம். இந்தப் பத்தாவது பாகம் வெளிவர சந்தா அனுப்பி உதவிய நண்பர்களுக்கும், முக்கியமாக வேம்பய்யர் சாசுவத தர்ம சாஸனத்திலிருந்து கணிசமாகப் பொருளுதவி செய்த கிருஷ்ணபுரம் மிட்டாதார் ஸ்ரீ V. S. மணி ஐயர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பிட்ட நேரத்தில் இதை அச்சிட்டுத் தந்த லக்ஷ்மி விஜயம் பிரஸ், ப்ரும்மஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளுக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

எமது அடுத்த வெளியீடு நாரதபக்திஸூத்திரமாகும். தேவபாஷையில் நாரதர் அருளிய பக்தி ஸூத்திரங்களுக்கு நமது ஸ்ரீ அண்ணா 'ஸ்ரீ ஹரிபக்தி மஞ்சூஷா' என்னும் ஒரு உரையை தேவபாஷையில் அருளிச் செய்துள்ளார். அந்த உரையை எளிய

தமிழ் விரிவுரையுடன் வெளியிடத் தீர்மானித்துள்ளோம். அதற்கு சந்தாதாரர்கள் காணிக்கையை தாமதமில்லாமல் ஸமர்ப்பித்து ஊக்குவிக்கும்படி வேண்டுகின்றோம். சந்தா தொகையை நிர்ணயித்துக் கொண்டு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.

இப்படிக்கு

பரனூர்
30—8—75

T. C. ஸ்ரீநிவாஸன்
தலைவர்
ப்ரேமிக க்ரந்த ப்ரகாசக ஸபா.

வரவு - செலவு விபரம் (E & O E)

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதை— (8ம் பாகம்)

சந்தா வரவு	ரூ.	1,050

செலவு

பேப்பர், அச்சு, பைண்டிங்		1,472
தபால் செலவு		22
இதரச் செலவு		6
மொத்தம்	ரூ.	1,500

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதை—(9ம் பாகம்)

சந்தா வரவு	ரூ.	1,128

செலவு

பேப்பர், அச்சு, பைண்டிங்		2,060
தபால் செலவு		20
இதரச் செலவு		10
மொத்தம்	ரூ.	2,090

ஸ்ரீ ஹரி:

பொருளடக்கம்

श्री हरिः

शुद्धाशुद्धपत्रिका

पुट	श्लोक	अशुद्धं	शुद्धम्
19	18	ददो	ददौ
41	8	बाधयति	बोधयति
64	31	यन्नित्थं	यन्नित्यं
80	27	दर्शन	दर्शनं
91	24	भगवतं	भागवतं
114	23	कीतयन्	कीर्तयन्
117	2	दुलभोपि	दुर्लभोपि
119	11	सन्तत	सन्ततं
133	1	गुरु	गुरुं
		दानबन्धुं	दीनबन्धुं
134	4	दै गुरुरेववं	दैवं गुरुरेव
163	30	वैकुण्ठ	वैकुण्ठं
163	36	,,	,,
167	13	कुर्यात्कि	कुर्यात्किं
167	13	चचया	चर्चया

श्रीहरिः

श्रीकृष्णप्रेमिप्रणीता

॥ श्री वैष्णवसंहिता ॥

दशम भागः

ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதை

பத்தாவது பாகம்

अथ प्रथमोऽध्यायः

[राधिकाकुचकस्तूरीकुङ्कुमाङ्कितवक्षसम् ।
श‍ृङ्गाररसमूर्तिं तं भक्तकोलाहलं भजे]

श्रीसद्गुरुरुवाच

सत्येन पन्था विततो देवयान इति श्रुतिः ।
तस्मात्सत्यव्रतो भक्त्या विष्णुमाराधयेद्बुधः ॥ १ ॥

முதல் அத்தியாயம்

ஸ்ரீ ஸத்குரு

1. மோக்ஷ மார்க்கம் ஸத்தியத்தினுலேயே நிறுவப் பெற்றுள்ளது என்று வேதம் கூறுகிறது. எனவே அறிவாளி ஸத்ய வ்ரதத்துடன் கூடியவனுய், பக்தியுடன் விஷ்ணுவை ஆராதிக்க வேண்டும்.

जनाः प्रीतिं न कुर्वन्ति लोकेऽस्मिन्नप्यनार्जवे ।
स एवं गर्हितो नूनं परलोकेऽपि दुर्मुखः ॥ २ ॥

2. இவ்வுலகில் நேர்மையில்லாதவனிடம் ஜனங்கள் அன்பு செய்ய மாட்டார்கள். பொய் சொல்பவன் பரலோகத்திலும் நிச்சயமாய் நிந்திக்கப்படுவான்.

कायेन मनसा वाचा सत्यं तु परिपालयेत् ।
सत्यं हि परमं ब्रह्म सत्यं हि परमं तपः ॥ ३ ॥

3. மனது, வாக்கு, காயம் இம்மூன்றுலும் ஸத்யத்தைக் காப்பாற்ற வேண்டும். ஸத்யமே கடவுள். ஸத்யமே சிறந்த தவம்.

सत्यव्रतविहीनस्य निष्फलाः सकलाः क्रियाः ।
देवाश्च पितरश्चापि द्रष्टुं नेच्छन्त्यनार्जवम् ॥ ४ ॥

4. ஸத்யவ்ரதம் இல்லாதவனுக்கு எல்லாக் கிரியைகளும் வீணே. நேர்மையில்லாத அவனை தேவர்களும் பித்ருக்களும் கூட பார்க்க விரும்புவதில்லை.

सत्यस्वरूपो भगवान् सत्यनिष्ठे प्रसीदति ।
सत्यव्रतविहीनस्तु नास्तिको भवति ध्रुवम् ॥ ५ ॥

5. ஸத்ய ஸ்வரூபனை பகவான் ஸத்தியத்தில் நிலைபெற்றவனிடமே அருள் செய்கிறுன். ஸத்யவ்ரத மில்லாதவன் நிச்சயமாய் நாஸ்திகனுவான்.

सत्यसंरक्षणायैव भगवान् काननङ्गतः ।
एतच्छ्रुत्वा वैष्णवस्तु सत्यनिष्ठां कथं त्यजेत् ॥ ६ ॥

6. ஸத்யத்தை ரக்ஷிப்பதற்காகவே ராமபிரான் காட்டிற்குச் சென்ருன். இதைக் கேட்டும் ஒரு வைஷ்ணவன் ஸத்யத்தை எப்படி விடமுடியும்?

क्षितिराम इति ख्यातो महाभागवतोत्तमः ।
रक्षितस्वीयधर्मश्च राघवध्यानतत्परः ॥ ७ ॥

दरिद्रोपि प्रसन्नात्मा सत्यसन्धो महामतिः ।
सज्जनान् पूजयन्नास गार्हस्थ्यं धर्ममाचरन् ॥ ८ ॥

7- 8. க்ஷிதிராமர் என்கிற மஹா பாகவதோத்தமர் ஸ்வதர்மத்தை ரக்ஷிப்பவராகவும், ராமத்யானமே லக்ஷ்யமாகக் கொண்டவராகவும், ஏழையாக இருந்த போதிலும் மகிழ்ச்சியுடன் கூடிய மனம் உடையவராகவும், ஸத்யஸந்தராகவும், சிறந்த புத்திமாளுகவும், இல்லறதர்மத்தை நடத்திக் கொண்டும், ஸாதுக்களைப்பூஜித்துக் கொண்டும், வாழ்ந்து வந்தார்.

सत्येन क्षमया चैवं शास्त्रज्ञानेन मेधया ।
एवं परोपकारेण सर्वपूज्यो बभूव सः ॥ ९ ॥

9. அவர் ஸத்தியத்திளுலும், பொறுமையாலும், கல்வியறிவாலும், மேதையாலும், பரோபகாரத்தாலும் யாவராலும் கௌரவிக்கப்பட்டவராய் இருந்து வந்தார்.

कस्यचिद्धनिकस्यापि गृहे कैङ्कर्यमाचरन् ।
कुटुम्बं पोषयामास दीनो वैष्णवसत्तमः ॥ १० ॥

10. அந்த வைஷ்ணவர் ஏழையாக இருப்ப தால் ஒரு தனிகரின் வீட்டில் வேலை பார்த்துக் கொண்டு குடும்பத்தைப் போஷித்து வந்தார்.

स कदाचिद्धनमदान्धः क्षितिरामं महामतिम् ।
नीतिस्थलेऽनृतं वक्तुमाह्वयामास निर्भयम् ॥ ११ ॥

11. ஒரு சமயம் பணத்திஞல் மதம் பிடித்த அந்த தனிகர், சிறந்த ஞானியான க்ஷிதிராமரை நீதி ஸ்தலத்தில் பொய்ஸாக்ஷி சொல்லுவதற்குப் பயமின்றி அழைத்தார்.

क्षितिरामो धर्मभीरुः सत्यव्रतसमाहितः ।
नाङ्गीचकार तद्वाक्यं श्रीरामचरणाश्रयः ॥ १२ ॥

12. ஸ்ரீராம சரணத்தையே நம்பியிருப்பவரும், ஸத்ய வ்ரதத்துடன் கூடியவரும், தர்மத்தில் பய முடையவருமான க்ஷிதிராமர், அவன் வார்த்தையை அங்கிகரிக்க வில்லை.

कुपितो धनिकश्चापि क्षितिरामस्य धीमतः ।
धनं धान्यं गृहं सर्वं बलादपजहार ह ॥ १३ ॥

13. கோபமடைந்த தனிகரோ, புத்திமானுன க்ஷிதிராமரின் தனம், தான்யம், வீடு எல்லாவற்றை யும் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டார்.

ग्रामाद्विद्रावयामास क्षितिरामं सदुर्मतिः ।
बालकैर्भार्यया साकं निर्दोषं ब्राह्मणोत्तमम् ॥ १४ ॥

14. துர்புத்தி உடைய அவர், குற்றமற்றவரும், பிராம்மணோத்தமருமான க்ஷிதிராமரை மனைவி மக்களுடன் கிராமத்திலிருந்து விரட்டி விட்டார்.

एवं हि तेन दुष्टेन धनेष्वपहृते बलात् ।
क्षितिरामो न तत्याज सत्यनिष्ठां दृढव्रतः ॥ १५ ॥

15. இவ்வாறு அந்த துஷ்டனால் பலாத்காரமாய் தனது பொருள் யாவும் கைப்பற்றப்பட்ட பொழுதும், திட சித்தமுடைய க்ஷிதிராமர், ஸத்ய நிஷ்டையை விடவில்லை.

ग्रामान्तरमवाप्यैषः क्षुधितैर्बालकैः सह ।
वृक्षमूले क्वचित्तिष्ठन् रामध्यानञ्चकार सः ॥ १६ ॥

16. இவர் வேறு கிராமத்தை அடைந்து, பசியினால் வருந்தும் குழந்தைகளுடன் கூட, ஒரு மரத்தடியில் அமர்ந்து, ராமத்யானம் செய்து கொண்டிருந்தார்.

तदा तु वैष्णवः कश्चित्तं विलोक्य यदृच्छया ।
गृहमानीय सप्रेम पूजयामास भक्तिमान् ॥ १७ ॥

17. அப்பொழுது பக்திமானான ஒரு வைஷ்ணவர், எதிர்பாராமல் அவரைக்கண்டு வீட்டிற்கு அழைத்து வந்து, அன்புடன் பூஜித்தார்.

तत्रैव निवसन्नित्यं रामपूजाधुरन्धरः ।
तोषयामास तं विप्रमौदार्यगुणसंयुतम् ॥ १८ ॥

18. அந்த கிராமத்திலேயே வஸித்துக்கொண்டு தினமும் ராமபூஜை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு உதாரகுணமுடைய அந்த வைஷ்ண வரை மகிழ்வித்தார்.

श्रीमानयं वैष्णवस्तु क्षितिरामे महात्मनि ।
अवाप परमां प्रीतिं बहुमानेन संयुतः ॥ १९ ॥

19. தனிகரான அந்த வைஷ்ணவரும், மஹாத் மாவான க்ஷிதிராமரிடம் கௌரவ புத்தியுடையவ ராய் மிகவும் ப்ரீதி அடைந்தார்.

तस्मै गृहं धनं धान्यं क्षेत्रञ्चापि महामनाः ।
प्रदाय पूजयामास क्षितिरामं तु वैष्णवः ॥ २० ॥

20. உதார குணமுடைய வைஷ்ணவரோ, அந்த க்ஷிதிராமருக்கு வீடு, தனம், தான்யம், நிலம் இவைகளைக் கொடுத்துப் பூஜித்தார்.

एवं निष्किञ्चनानां तु वैष्णवानां महात्मनाम् ।
भगवानेव कृपया योगक्षेमं वहत्यहो ॥ २१ ॥

21. இவ்வாறு ஏழைகளும் வைஷ்ணவர்களு மான மஹான்களின் யோக க்ஷேமத்தை பகவானே கருணையுடன் வஹிக்கிறுன்! ஆச்சர்யம்!

एवं रक्षति गोविन्दे स्वभक्तान् प्रेमपूर्वकम् ।
किं वृथाऽलीकवादेन भरन्ति जठरं खलाः ॥ २२ ॥

22. இவ்வாறு கோவிந்தன் தனது பக்தர்களைப் பிரேமையுடன் ரக்ஷிக்கும் பொழுதும், துஷ்டர்கள் வீணாய்ப்பொய் பேசி வயிறு வளர்க்கின்றனர்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे क्षितिरामचरितं नाम
प्रथमोऽध्यायः ॥ १ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது
பாகத்தில் க்ஷிதிராமசரிதம் என்கிற
முதல் அத்தியாயம் முற்றும்.

अथ द्वितीयोऽध्यायः

இரண்டாம் அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

नानासिद्धान्तविभ्रान्तान्नास्तिकत्वमुपागतान् ।
पाश्चात्यमतसंमुग्धान् भारतीयानिमान् जनान् ॥ १ ॥
समुद्धर्तुं कृपासिन्धुः कुतर्कमलसागरात् ।
क्षितिरामस्य पुत्रत्वमवाप भगवान् स्वयम् ॥ २ ॥

ஸ்ரீ ஸத்குரு

1- 2. பல விதமான ஸித்தாந்தங்களில் பிராந்தி அடைந்தவர்களும், நாஸ்திகர்களானவர்களும், மேல்

நாட்டு மதங்களில் மோஹித்தவர்களுமான இந்த பாரதநாட்டு மக்களை, குதர்க்கமாகிய மலக்கடலிலிருந்து கரையேற்றுவதற்காக கருணைக்கடலான பகவான் தானே க்ஷுதிராமருடைய புத்ரனாக அவதரித்தான்.

धर्मं भागवतं शुद्धं संप्राप्य समदर्शनः ।
विष्णोरंशावतारोऽयं पाराशर्य इवाबभौ ॥ ३ ॥

3. விஷ்ணுவினுடைய அம்சாவதாரமான இவர் சுத்தமான பாகவத தர்மத்தை அடைந்து ஸமதர்சனமுடையவராய் வியாஸரைப்போல் விளங்கினார்.

रामकृष्ण इति ख्यातिं प्राप लोके जगद्गुरुः ।
यस्य कीर्तिध्वजोऽद्यापि सर्वलोकेषु राजते ॥ ४ ॥

4. ஜகத்குருவான இவர் உலகில் ராமக்ருஷ்ணர் என்று புகழ் அடைந்தார். அவருடைய கீர்த்தியாகிய கொடி, இன்றும் எல்லா உலகிலும் பிரகாசிக்கிறது.

भगवान् रामकृष्णस्तु बाल्यादारभ्य केशवे ।
दृढभक्त्यैव संयुक्तो नानालीलां चकार सः ॥ ५ ॥

5. பகவானாகிய ராமக்ருஷ்ணர், பிள்ளைப்பருவம் முதற்கொண்டு, கேசவனிடம் திடபக்தியுடையவராய்ப் பல லீலைகளைச் செய்தார்.

ताते स्वर्गं गते दीनो दक्षिणेश्वरमागतः ।
राधाकृष्णालये पूजां कुर्वन् सुखमुवास सः ॥ ६ ॥

6. தந்தை பரலோகம் சென்றதும், ஏழையான அவர், தக்ஷிணேச்வரம் என்கிற ஊரையடைந்து, ராதாக்ருஷ்ணன் கோவிலில் பூஜை ஏற்றுக்கொண்டு, ஸுகமாய் இருந்து வந்தார்.

तत्रैव कालिकादेव्या मन्दिरञ्चापि वर्तते ।
तस्या देव्यास्त्वर्चकस्तु मृतिं प्राप यदृच्छया ॥ ७ ॥

7. அங்கேயே காளிதேவிக்கும் ஒரு கோவில் இருக்கிறது. அந்த தேவியின் பூசாரி எதிர்பாராமல் இறந்து விட்டார்.

तदा सर्वे जना देव्या मन्दिराध्यक्षकस्तथा ।
पूजायै प्रार्थयामासू रामकृष्णं दृढव्रतम् ॥ ८ ॥

8. அப்பொழுது எல்லா மக்களும், கோவில் யஜமானரும், தேவியின் பூஜையின் பொருட்டு திட சித்தமுடைய ராமக்ருஷ்ணரை வேண்டினர்.

तदा श्रीरामकृष्णस्तु दृढचित्तो महामनाः ।
उवाच मधुरं वाक्यं कृष्णभक्तिमतां वरः ॥ ९ ॥

9. அப்பொழுது க்ருஷ்ணபக்தரில் சிறந்தவரும், விசாலமான உள்ளம் படைத்தவரும், திடசித்த முடையவருமான ஸ்ரீராமகிருஷ்ணர், இனிய மொழி யைப் பகர்ந்தார்.

श्रीरामकृष्ण उवाच

अहं तु विष्णुभक्तोऽस्मि ब्राह्मणो वैदिकस्तथा ।
कालीपूजां कथं कुर्यां तन्त्रमार्गमुपाश्रितः ॥ १० ॥

ஸ்ரீ ராமக்ருஷ்ணர்

10. நானோ பிராம்மணனாகவும், வைதீகனாக வும், விஷ்ணு பக்தனாகவும் இருக்கிறேன். தந்த்ர மார்க்கத்தை ஆச்ரயித்து காளி பூஜையை எப்படிச் செய்வேன்.

वामाचारं न जानामि सदाचारेण संयुतः ।
न मे मन्त्रोपदेशोपि शाक्तदीक्षा च मे न हि ॥ ११ ॥

11. ஸதாசாரத்துடன் கூடிய நான் வாமாசா ரத்தை அறியவில்லை. எனக்கு மந்த்ரோபதேசமோ, சாக்த தீக்ஷையோ இல்லை.

तस्मादन्यं महाशाक्तं वृणीध्वं देव्युपासकम् ।
विसृज्य वैष्णवं मां तु वैदिकाचारसंयुतम् ॥ १२ ॥

12. எனவே தேவியை உபாஸிக்கக்கூடிய வேறொரு சிறந்த சாக்தரை நியமித்துக் கொள்ளுங் கள். வைதிக ஆசாரமுடைய வைஷ்ணவனான என்னை விட்டு விடுங்கள்.

श्रीसद्गुरुरुवाच

इत्युक्तास्तु जनाः सर्वे रामकृष्णेन हि स्फुटम् ।
विषण्णवदना जग्मुः स्वगृहं विस्मितास्तथा ॥ १३ ॥

ஸ்ரீ ஸத்குரு

13. ராமக்ருஷ்ணரால் இவ்வாறு சொல்லப் பட்ட ஜனங்கள் யாவரும் ஆச்சர்யமடைந்து அவ் வாறே வாடிய முகத்துடன் வீடு திரும்பினர்.

तस्मिन्नेव दिने रात्रौ देवी वात्सल्यसंयुता ।
स्वप्ने साक्षादाविरासीत्सौम्यरूपेण संयुता ॥ १४ ॥

14. அன்றிரவே கனவில் வாத்ஸல்யத்துடன் கூடியவளும், அழகான ரூபமுடையவளுமான தேவி, பிரத்யக்ஷமாய்த் தோன்றினாள்.

जननी जगतां दुर्गा वैष्णवी प्रेमपूर्वकम् ।
कोकिलस्निग्धकण्ठी सा रामकृष्णमुवाच ह ॥ १५ ॥

15. ஜகன் மாதாவும் வைஷ்ணவியுமான, துர்க்கை குயில் கூவுவதுபோல், இனிய குரல் உடையவளாய் ப்ரேமையுடன் ராமக்ருஷ்ணரைப் பார்த்துச் சொன்னாள்.

श्रीदेव्युवाच

मातरं मामनादृत्य क्लिश्यमानां क्षुधा त्विह ।
देवपूजां करोषि त्वं दृढभक्त्या ममार्भक ॥ १६ ॥

ஸ்ரீ தேவி

16. என் குழந்தாய்! இங்கு பசியினால் வாடும் தாயாகிய என்னை ஆதரிக்காமல், திடபக்தியுடன் நீ, தேவபூஜை செய்கிறாய்.

वैष्णवेन त्वया दत्तमहमिच्छामि बालक ।
पत्रं पुष्पं फलं तोयं यत्किञ्चिद्विष्णवेऽर्पितम् ॥ १७ ॥

17. குழந்தாய்! வைஷ்ணவனான உன்னால் கொடுக்கப்பட்டதும், விஷ்ணு ப்ரஸாதமுமான

பத்ரமோ, புஷ்பமோ, பழமோ, தீர்த்தமோ ஏதாகிலும் ஒன்றை நான் விரும்புகிறேன்.

वामाचारयुतानां तु क्रूररूपा भवाम्यहम् ।
सदाचारयुतानां तु सौम्यरूपा भवामि च ॥ १८ ॥

18. வாமாசாரத்துடன் கூடியவர்களுக்கு, நான் க்ரூர ரூபத்துடன் காக்ஷி தருகிறேன். ஸதாசாரத்துடன் கூடியவர்களுக்கு, நான் அழகிய ரூபத்துடன் காக்ஷி தருகிறேன்.

उपेक्षां मा कुरु त्वञ्च तामसीदेवतेति माम् ।
कृष्णदास्यमवापुस्ता मत्प्रसादेन गोपिकाः ॥ १९ ॥

19. நீ தாமஸ தேவதை என்று என்னை வெறுக்காதே. கோபிகைகள் என் திருவருளால்தான் க்ருஷ்ண கைங்கர்யத்தை அடைந்தார்கள்.

सर्वलोकेश्वरं कृष्णं साक्षात्कर्तुं यदीच्छसि ।
मातृभावेन मां नित्यमाराधय महामते ॥ २० ॥

20. புத்திமானே! எல்லா உலகங்களுக்கும் இறைவனான கண்ணனை நேரில் காண விரும்புவாயாகில், என்னை அன்னை என்று நினைத்து வழி படுவாயாக.

श्रीसद्गुरुरुवाच

इत्युक्तो रामकृष्णस्तु प्रेमपूर्वं तु दुर्गया ।
भेदभावं परित्यज्य पूजयामास चण्डिकाम् ॥ २१ ॥

21. இவ்வாறு துர்க்கையால் ப்ரேமையுடன் சொல்லப்பட்ட ராமக்ருஷ்ணர், பேத பாவத்தை விட்டு, தேவியைப் பூஜித்து வந்தார்.

महामायाप्रसादेन प्रेमभक्तिमवाप्य सः ।
अचिरेणैव कालेन कृष्णं साक्षाद्ददर्श ह ॥ २२ ॥

22. தேவியின் திருவருளால் ப்ரேம பக்தியை அடைந்த அவர், கொஞ்ச நாளில் ப்ரத்யக்ஷமாக க்ருஷ்ண தர்சனம் பெற்றார்.

नीलपीताम्बरधरौ नीरजायतलोचनौ ।
ददर्श सुन्दराकारौ राधिकामुरलीधरौ ॥ २३ ॥

23. நீலமானதும், மஞ்சளானதுமான வஸ்திரத்தை அணிந்தவர்களும், தாமரைபோன்ற கண்களை உடையவர்களும், மிகவும் அழகான திருமேனி உடையவர்களுமான, ராதையையும் கண்ணனையும் தரிசனம் செய்தார்.

तौ दम्पती चारुरूपौ दर्शनानन्ददायकौ ।
प्रविष्टौ श्रीभागवतं रामकृष्णकरस्थितम् ॥ २४ ॥

24. பார்ப்பதற்கு இனியவர்களும், அழகான ரூபமுடையவர்களுமான அந்த தம்பதிகள் ராமக்ருஷ்ணரின் கையிலுள்ள ஸ்ரீபாகவதத்தில் நுழைந்தார்கள்.

राधाकृष्णैकरूपं तच्छ्रीमद्भागवतं तथा ।
श्रीरामकृष्णहृदयं प्रविवेश सुनिर्मलम् ॥ २५ ॥

25. ராதாக்ருஷ்ண ரூபமான அந்த ஸ்ரீ பாகவதம் அவ்வாறே நிர்மலமான ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் ஹ்ருதயத்தில் பிரவேசித்தது.

तदाप्रभृति योगीन्द्रो दिव्यज्ञानमवाप्य सः ।
शुद्धं भागवतं धर्ममुवाच मधुरं लघु ॥ २६ ॥

26. அன்று முதல் அந்த யோகீச்வரர் திவ்ய க்ஞான மடைந்து, சுத்தமான பாகவத தர்மத்தை மதுரமாகவும், லகுவாகவும் உபதேசித்தார்.

क्वचिद्रुदन् क्वचिद्गायन् क्वचिन्नृत्यन् क्वचिद्वदन् ।
जगदानन्दयामास प्रेमभक्त्या महाप्रभुः ॥ २७ ॥

27. மஹாப்ரபுவான அவர், ப்ரேம பக்தியினால் ஒரு கால் அழுதுகொண்டும், ஒரு கால் பாடிக்கொண்டும், ஒரு கால் பேசிக்கொண்டும், ஒரு கால் ஆடிக்கொண்டும், உலகை ஆனந்தப்படுத்தினார்.

तमेव भावयामासुस्तत्वज्ञा वैष्णवोत्तमाः ।
कृष्णभक्तिरसोन्मत्तं गौराङ्गं पुनरागतम् ॥ २८ ॥

28. தத்துவம் அறிந்த வைஷ்ணவோத்தமர்கள், அவரை க்ருஷ்ணபக்தி ரஸத்தினால் பித்தர் போலான கௌராங்கரே மறுபடியும் அவதரித்துவிட்டதாகப் பாவித்தனர்.

एवं श्रीरामकृष्णस्य चरितं परमाद्भुतम् ।
अविज्ञाय जनाः केचिन्मन्यन्ते भ्रान्तमेव तम् ॥ २९ ॥

29. இவ்வாறு மிகவும் பாவனமான ஸ்ரீ ராம க்ருஷ்ணரின் கதையை அறியாத சில ஜனங்கள், அவரை சாக்தராகவே கருதுகின்றனர்.

यः पठेद्रामकृष्णस्य चरितं परमं शुभम् ।
स प्राप्नुयात्परां भक्तिं ज्ञानं वैराग्यमेव च ॥ ३० ॥

30. ராமக்ருஷ்ணரின் மிகவும் தூய சரிதத்தை எவன் படிப்பானோ அவன் ப்ரேம பக்தியையும், ஞானத்தையும், வைராக்யத்தையும் அடைவான்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीरामकृष्णचरितं नाम
द्वितीयोऽध्यायः ॥ २ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீராமக்ருஷ்ண சரிதம் என்னும் இரண்டாவது
அத்யாயம் முற்றும்.

॥ अथ तृतीयोऽध्यायः ॥

மூன்றாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

परदारान् मातृभक्त्या यः पश्यति महामनाः ।
स एव वैष्णवो नूनं मार्गदर्शी नृणामिह ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. பிறர் மனைவியை தாய் என்கின்ற பக்தியுடன் பார்க்கின்ற உயர்ந்த மனமுடைய வைஷ்ணவன் தான் உலகிற்கு வழி காட்டியாவான். நிச்சயம்.

ब्रह्मचर्येण तीव्रेण सम्युतो विजितेन्द्रियः ।
विचिन्वन् परमं ब्रह्म साक्षात्पश्यति कश्चन ॥ २ ॥

2. தீவ்ரமான ப்ரும்மசர்யத்துடன் புலன்களை அடக்கி ப்ரும்மத்தைத் தேடுகின்ற எவனோ ஒருவன் பரம்பொருளை நேரில் பார்க்கிறான்.

ब्रह्मचर्यं परो धर्मः ब्रह्मचर्यं परं तपः ।
ब्रह्मचर्यं परो योगः ब्रह्मचर्यं परं व्रतम् ॥ ३ ॥

3. ப்ரும்மசர்யமே சிறந்த தர்மம். ப்ரும்ம சர்யமே சிறந்த தவம். ப்ரும்மசர்யமே சிறந்த யோகம். ப்ரும்மசர்யமே சிறந்த வ்ரதம்.

जपो योगस्तपो होमः वेदान्तपठनं तथा ।
ब्रह्मचर्यविहीनस्य सर्वं तन्निष्फलं भवेत् ॥ ४ ॥

4. ஜபம், யோகம், தவம், ஹோமம், வேதாந்தம் படிப்பது முதலிய யாவும் ப்ரும்மசர்யமில்லாதவனுக்கு பயனற்றதாகி விடும்.

ऊर्ध्वरेता भवेद्योगी ब्रह्मचर्यबलेन हि ।
अनूर्ध्वरेतसां दिव्यं दुर्लभं कृष्णदर्शनम् ॥ ५ ॥

5. ப்ரும்மசர்ய பலத்தினாலேயே யோகியானவன் ஊர்த்வ ரேதஸாக ஆகிறான். ஊர்த்வ ரேதஸ் அல்லாதவர்களுக்கு திவ்யமான க்ருஷ்ணதர்சனம் துர்லபமாகும்.

तस्मात्सर्वप्रयत्नेन ब्रह्मचर्यं मुमुक्षुभिः ।
रक्षणीयं यतिश्रेष्ठैः वनस्थैर्वर्णिभिस्तथा ॥ ६ ॥

6. ஆகையால் மோக்ஷத்தில் விருப்பமுடைய துறவிகளும், வானப்ரஸ்தர்களும், ப்ரும்மசாரிகளும் முழு முயற்சியுடன் ப்ரும்மசர்யத்தை ரக்ஷிக்க வேண்டும்.

ब्रह्मचर्यं गृहस्थोपि यथाशक्ति समाचरन् ।
ध्यायन् भक्त्या जगन्नाथं लभेत तस्य दर्शनम् ॥ ७ ॥

7. இல்லறத்தில் இருப்பவனும், சக்திக்குத் தக்கபடி ப்ரும்மசர்யத்தை நடத்திக்கொண்டு, பக்தியுடன் ஜகன்னாதனை த்யானம் செய்து வந்தால் அவனது தர்சனத்தைப் பெற முடியும்.

दीर्घमायुस्तथाऽऽरोग्यं पुष्टिस्तुष्टिस्तथा बलम् ।
लभ्यते ब्रह्मचर्येण बुद्धिः सिद्धिर्नृणामिह ॥ ८ ॥

8. தீர்க்கமான ஆயுள், ஆரோக்யம், சரீர புஷ்டி, மன மகிழ்ச்சி, பலம், புத்தி, ஸித்தி இவை யாவும் மனிதர்களுக்கு ப்ரும்மசர்யத்தாலேயே கிடைக்கிறது.

भैरवीति सुविख्याता ब्राह्मणी ब्रह्मचारिणी ।
वैष्णवी योगिनी काचिदासीद्वैराग्यसम्युता ॥ ९ ॥

9. வைஷ்ணவியும், வைராக்கியமுடையவளும், ப்ரும்மசர்ய முடையவளுமான பைரவீ ப்ராம்மணீ என்கிற ஒரு யோகினீ இருந்தாள்.

गार्गीसमाना सा देवी ब्रह्मविद्यापरायणा ।
जगत्तुच्छं स्मरन्ती सा बभूव श्रमणी सती ॥ १० ॥

10. கார்க்கிக்கு நிகரானவளும், ப்ரும்ம வித்யை யையே லக்ஷ்யமாகக் கொண்டவளும், நன்னடத்தை உடையவளுமான அந்த தேவி, உலகை வெறுத்து துறவு மேற்கொண்டாள்.

सा वृद्धा प्रेमसम्पूर्णा कौसल्यानन्दने विभौ ।
वात्सल्यभावसंयुक्ता चक्रे भक्तिं परां सदा ॥ ११ ॥

11. அவள் ராமபிரானிடம் வாத்ஸல்யமும் ப்ரேமையும் கொண்டவளாய் எப்பொழுதும் சிறந்த பக்தியைச் செய்து வந்தாள்.

श्रीरामदर्शनालाभाद्रुदती नितरां निशि ।
श्रीरामविरहाक्रान्ता सुष्वाप च यदृच्छया ॥ १२ ॥

12. அவள் ஸ்ரீராம தர்சனம் கிடைக்காமல் ராமனின் பிரிவாற்றுமையால் மிகவும் அழுது கொண்டே இரவு எதிர் பாராமல் தூங்கி விட்டாள்.

तदा तस्याः श्रमण्यास्तु स्वप्ने रामः कृपानिधिः ।
रामकृष्णस्वरूपेण प्रददौ निजदर्शनम् ॥ २३ ॥

13. அப்பொழுது அவளுடைய கனவில் கருணைக் கடலான ராமபிரான், ராமக்ருஷ்ணர் போல் தோன்றி தர்சனம் தந்தான்.

कोऽयं महात्मा कुत्रास्ति सहि रामो न संशयः ।
एवं मत्वा विचिन्वन्ती प्राप सा दक्षिणेश्वरम् ॥ १४ ॥

14. 'இந்த மஹான் யார்? எங்கு இருக்கிறார்? அவர் ராமனே தான் ஸந்தேகமில்லை.' இவ்வாறு நினைத்து தேடிக்கொண்டே அவள் தக்ஷிணேச்வரம் வந்து சேர்ந்தாள்.

तत्र नन्दवने रम्ये गृह्णन्तं कुसुमानि तम् ।
गायन्तं हरिनामानि रामकृष्णं ददर्श सा ॥ १५ ॥

15. அங்கு அழகிய நந்தவனத்தில் ஹரி நாமத்தை கானம் செய்து கொண்டே புஷ்பங்களை பறிக்கும் அந்த ராமக்ருஷ்ணரை அவள் கண்டாள்.

सद्य एव हि वृद्धा सा प्रेमवात्सल्यसम्प्लुता ।
एहि पुत्रेति जल्पन्ती परिरेभे गदाधरम् ॥ १६ ॥

16. உடனே அவள் ப்ரேமையுடனும் வாத்ஸல்யத்துடனும் "குழந்தாய்! வருக!!" என்று சொல்லி ராமக்ருஷ்ணரை கட்டிக்கொண்டாள்.

अङ्कमारोप्य तं देवं पुत्ररूपं गदाधरम् ।
आलिङ्ग्य प्रेमभावेन चुचुम्ब च पुनः पुनः ॥ १७ ॥

17. குழந்தையும், தெய்வமும் போன்ற ராமக்ருஷ்ணரை ப்ரேமையுடன் மடியில் ஏற்றிக் கொண்டு பல தடவை முத்தமிட்டாள்.

तस्यास्तु प्रेमभावेन निबद्धोऽयं गदाधरः ।
पुत्रापि बालवत्क्रीडन् ददौ तस्याः सुखं परम् ॥ १८ ॥

18. அவளுடைய அன்பினுல் கட்டப்பட்ட ராமக்ருஷ்ணர் குழந்தையைப்போல் விளையாடி அவளுக்கு பேரின்பத்தைத் தந்தார்.

पण्डितानां सभायां सा सर्वशास्त्रविशारदा ।
रामकृष्णः परात्मेति चकार सुविनिर्णयम् ॥ १९ ॥

19. ஸகல சாஸ்த்ரமும் அறிந்த அவள் பண்டிதர்களின் ஸபையில் ராமக்ருஷ்ணர், பரமாத்மா என்று நிர்ணயம் செய்தாள்.

तथापि रामकृष्णोऽयं अजानन्नात्मवैभवम् ।
विजहार तया साकं बालरूपेण सन्ततम् ॥ २० ॥

20. ஆயினும் ராமக்ருஷ்ணர் தன் மஹிமையை அறியாமல் அவளுடன் எப்பொழுதும் குழந்தை போலவே விளையாடினார்.

प्रेमभक्तिरसोन्मत्ते रामकृष्णे महात्मनि ।
समाधिस्थे तस्य देहं पोषयामास भैरवी ॥ २१ ॥

21. மஹாத்மாவான ராமக்ருஷ்ணர், ப்ரேம பக்தி ரஸத்தினால் தன்னை மறந்து இருக்கும் போதும் ஸமாதி நிலையை அடைந்த பொழுதும் அவருடைய தேஹத்தை பைரவி காப்பாற்றி வந்தாள்.

शरीरपोषणार्थं हि रामकृष्णस्य योगिनः ।
भैरवी ब्राह्मणी सेयं सृष्टा देवेन वैष्णवी ॥ २२ ॥

22. யோகியான ராமக்ருஷ்ணரின் தேஹத்தை போஷிப்பதற்காகவே வைஷ்ணவியான பைரவி ப்ராம்மணி தெய்வத்தினால் படைக்கப் பட்டாள்.

वामाचारेण मार्गेण तस्याः पूजां करोत्ययम् ।
इत्यूचुर्बहवो मूर्खाः परनिन्दाकुतूहलाः ॥ २३ ॥

23. பிறரை நிந்திப்பதில் குதூஹலமுடைய பல மூர்க்கர்கள், இந்த ராமக்ருஷ்ணர் வாமாசார முறையில் பைரவியைப் பூஜை செய்கிறார் என்று சொன்னார்கள்.

रामकृष्णो महात्मा तु सदाचारसमन्वितः ।
मातृभावेन सम्युक्तः स्त्रीषु सर्वासु वर्तते ॥ २४ ॥

24. நன்னடத்தை உடைய மஹாத்மாவான ராமக்ருஷ்ணரோ எல்லாப் பெண்மணிகளிடமும் அன்னை என்ற எண்ணத்துடன் பழகி வந்தார்.

मद्यञ्च मैथुनं मांसं मणिं मन्त्रं समाश्रिताः ।
पूजयन्ति परां शक्तिं वामाचारेण दुर्जनाः ॥ २५ ॥

25. மது, மைதுனம், மாம்ஸம், மணி, மந்திரம் இவைகளைக் கொண்டு துர்நடத்தை உடையவர்கள் வாமாசார மார்க்கத்தினுல் பராசக்தியை பூஜிக்கின்றனர்.

अशास्त्रविहितं घोरं तामसं कर्म दूषितम् ।
विधाय स्वयमेवैते पतन्ति नरकेऽशुचौ ॥ २६ ॥

26. சாஸ்த்ரத்தில் சொல்லப்படாததும், கோரமானதும், தாமஸமானதும், வெறுக்கத்தக்கதுமான கர்மாவைச் செய்து இவர்கள் தானுகவே அசுத்தமான நரகத்தில் விழுவார்கள்.

दुर्मार्गेण कथं ब्रह्म प्राप्यते शुद्धमव्ययम् ।
नाविरतो दुश्चरितात्तदाप्नोति परं पदम् ॥ २७ ॥

27. அழிவற்ற சுத்தமான பரம் பொருளை துர்மார்க்கத்தினுல் எப்படி அடைய முடியும்? துர்மார்க்கத்திலிருந்து விலகாதவன் பரம் பொருளை அடைய முடியாது.

कण्टकव्याप्तमार्गेण ये गच्छन्ति नराः खलाः ।
गच्छन्तु ते वयं याम सन्मार्गेण परं पदम् ॥ २८ ॥

28. முள் நிறைந்த வழியோடு எந்த மூடர்கள் போகின்றுர்களோ அவர்கள் போகட்டும். நாம் நல்வழியால் அந்த பரம் பொருளை அடைவோம்.

एवं दुर्मार्गगान् सर्वानाहूय प्रेमपूर्वकम् ।
बोधयामास योगीन्द्रो रामकृष्णो जगद्गुरुः ॥ २९ ॥

29. இவ்வாறு சிறந்த யோகியும் ஜகத்குருவுமான ராமக்ருஷ்ணர் துர்மார்க்கத்தில் செல்லும் யாவரையும் அன்புடன் அழைத்து போதனை செய்தார்.

रामकृष्णमतं ज्ञात्वा सात्त्विकं सर्वसम्मतम् ।
सदाचारेण सम्युक्तैः कर्तव्यं भजनं हरेः ॥ ३० ॥

30. யாவருக்கும் ஸம்மதமானதும், ஸாத்விகமானதுமான ராமக்ருஷ்ண மதத்தை அறிந்து நன்னடத்தையுடன் கூடிய மக்களால் ஹரிபஜனம் செய்யப்படவேண்டும்.

अन्यथा दुर्लभो विष्णुः कलावस्मिन्न संशयः ।
अहिंसया च सत्येन ब्रह्मचर्येण तं भजेत् ॥ ३१ ॥

31. இந்தக் கலியில் வேறுவழிகளால் விஷ்ணு கிடைக்க மாட்டார். ஸந்தேகமில்லை. அஹிம்சையுடனும், ஸத்தியத்துடனும், ப்ரும்மசர்யத்துடனும் அவரை பஜிக்க வேண்டும்.

इति श्री कृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीरामकृष्ण चरिते
तृतीयोऽध्यायः ॥ ३ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது
பாகத்தில் ராமக்ருஷ்ணர் சரித்திரத்தில்
மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथ चतुर्थोऽध्यायः ॥

நான்காவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

अनामरूपं चिन्मात्रं निर्विकारञ्च निर्गुणम् ।
सत्तामात्रं परं ब्रह्म ध्यायन्ति ज्ञानयोगिनः ॥ १ ॥

ஸ்ரீஸத்குரு

1. நாமரூபமற்றதும், சித்ரூபமானதும், மாறுபாடற்றதும், குணங்களற்றதும், ஸத்யமானதுமான பரம்பொருளை ஞானிகள் த்யானிக்கின்றார்கள்.

साकारं सगुणञ्चैव सर्वलोकैककारणम् ।
संसारतारकं ब्रह्म ध्यायन्ति प्रेमिका जनाः ॥ २ ॥

2. உருவமும், குணமும் உடையவரும் உலகின் ஒரே காரணமானவரும், ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகின்றவருமான பகவானை பக்தர்கள் த்யானம் செய்கின்றனர்.

निराकारब्रह्मनिष्ठाः ज्ञानिनो विजितेन्द्रियाः ।
निर्विकल्पसमाधिस्थाः कैवल्यं प्राप्नुवन्ति ते ॥ ३ ॥

3. அந்த ஞானிகள் புலன்களை அடக்கி உருவமற்ற பரம்பொருளை லக்ஷ்யமாகக்கொண்டு, நிர்விகல்ப ஸமாதியில் நிலைத்திருந்து கைவல்யத்தை அடைகின்றனர்.

सगुणब्रह्मनिष्ठास्तु भक्तिमार्गपरायणाः ।
भेदभावेन सम्युक्ताः वैकुण्ठं प्राप्नुवन्ति ते ॥ ४ ॥

4. பேத பாவத்துடன் கூடியவர்களாய் பக்தி மார்க்கத்தில் ஊக்கமுடன் செல்லும் ஸகுண ப்ரும்மத்தை லக்ஷ்யமாகக்கொண்ட பக்தர்கள் வைகுண்டத்தை அடைகின்றனர்.

कैवल्यं प्राप्तुकामाश्च ये भजन्ति महेश्वरम् ।
तत्प्रसादेन ते सर्वे कैवल्यं प्राप्नुवन्ति हि ॥ ५ ॥

5. கைவல்யத்தை விரும்பி எவர்கள் பகவானை வழிபடுகின்றார்களோ அவர்கள் யாவரும் அவன் திருவருளாலேயே கைவல்யத்தை அடைகின்றனர்.

दुरत्यया हि तन्माया मुमुक्षूणां जितात्मनाम् ।
तस्मात्सर्वस्वभावेन परमेश्वरमाश्रयेत् ॥ ६ ॥

6. மனதை அடக்கிய, மோக்ஷத்தை விரும்பும், முனிவர்களுக்குக் கூட விஷ்ணுமாயை கடக்க முடியாததாகும். ஆகையால் எவ்விதத்திலும் பரமேச்வரனை சரணமடைய வேண்டும்.

मुमुक्षवो भजन्त्येव साधवः पुरुषोत्तमम् ।
मुक्ताश्चापि भजन्त्येनं साधवो रसवित्तमाः ॥ ७ ॥

7. மோக்ஷத்தை விரும்பும் ஸாதுக்களும் புருஷோத்தமனையே பஜிக்கின்றனர். முக்தியை அடைந்த ஸாதுக்கள் கூட ரஸம் அறிந்தவர்களாய் இவனை பஜிக்கின்றனர்.

अक्षरब्रह्मनिष्ठाश्च सनकाद्याः शुकादयः ।
भजन्ति तं प्रेमपूर्वं आत्मारामाश्च योगिनः ॥ ८ ॥

8. உருவமற்ற பரம்பொருளில் நிலைபெற்றவர்களும் ஆத்மஞானிகளும் யோகிகளுமாகிய சுகர், ஸனகர் முதலியவர்கள் ப்ரேமையுடன் அவனை பஜிக்கின்றனர்.

प्रेमभक्तयास्तु माहात्म्यं अजानन्तः कुयोगिनः ।
निन्दन्ति भक्तियोगञ्च भक्तांश्च प्राज्ञमानिनः ॥ ९ ॥

9. ப்ரேம பக்தியின் மஹிமை அறியாத, பக்வமில்லாத ஸாதகர்கள், தங்களை ஜீவன்முக்தர்களாய் அபிமானித்து பக்தர்களையும், பக்தியோகத்தையும் பழிக்கின்றனர்.

तोतापुरीति विख्यातः कश्चिदासीद्यतीश्वरः ।
चचार भुवने नित्यं जडोन्मत्तपिशाचवत् ॥ १० ॥
अक्षरब्रह्मनिष्ठश्च जितक्रोधो जितेन्द्रियः ।
समाधिस्थो महायोगी जटाधारी दिगम्बरः ॥ ११ ॥

10-11. தோதாபுரி என்று புகழ்பெற்ற ஒரு துறவி இருந்தார். உருவமற்ற கடவுளை த்யானிப்பவரும், புலன்களை அடக்கியவரும், கோபத்தை வென்றவரும், ஸமாதியில் இருப்பவரும், மஹாயோகியுமான அவர் ஜடாதாரியாய், திகம்பரராய், மூடனைப்போலும், பித்தனைப்போலும், பிசாசைப்போலும் எப்பொழுதும் உலகில் உலாவி வந்தார்.

यदृच्छया महात्मायं दक्षिणेश्वरमागतः ।
ददर्श रामकृष्णं तं प्रेमभक्तिमतां वरम् ॥ १२ ॥

12. இந்த மஹான் எதிர்பாராமல் தக்ஷிணேச்வரம் வந்து ப்ரேம பக்தர்களில் சிறந்த ராமக்ருஷ்ணரை தர்சித்தார்.

तस्य हस्तस्पर्शनेन रामकृष्णो महामुनिः ।
निर्विकल्पसमाधिञ्च प्राप सद्यो जितेन्द्रियः ॥ १३ ॥

13. புலன்களை அடக்கியவரும், முனிவருமான ராமக்ருஷ்ணர் அவருடைய ஹஸ்த ஸ்பர்சத்தால் உடனேயே நிர்விகல்ப ஸமாதியை அடைந்தார்.

आश्चर्यं परमं लेभे यतीन्द्रः सिद्धसत्तमः ।
अनायासेन तस्यैवं समाधिं वीक्ष्य सङ्गतम् ॥ १४ ॥

14. ஸித்தர்களில் சிறந்த தோதாபுரி அனாயாஸமாய் ராமக்ருஷ்ணருக்கு ஸமாதி கைகூடியதைக் கண்டு ஆச்சர்யமடைந்தார்.

तेनैव साकं तत्रैव न्यवसत्स यतीश्वरः ।
शिष्यवात्सल्यसम्युक्तो रामकृष्णे जगद्गुरौ ॥ १५ ॥

15. ஜகத்குருவான ராமக்ருஷ்ணரிடம் சிஷ்ய வாத்ஸல்யமடைந்த அந்த துறவி அவருடனேயே அங்கு வசித்து வந்தார்.

रामकृष्णोपि तं भक्त्या गुरुभावेन सम्युतः ।
पूजयामास सानन्दं नित्यं गङ्गातटे महान् ॥ १६ ॥

16. ராமக்ருஷ்ணரும் அவரிடம் குருபக்தியுடன் கூடியவராய் ஆனந்தமடைந்து கங்கைக் கரையில் தினமும் அவரைப் பூஜித்து வந்தார்.

कदाचिद्रामकृष्णस्तु हरिकीर्तनतत्परः ।
ननर्त जाह्नवीतीरे प्रेमभक्तिरसोन्मदः ॥ १७ ॥

17. ஒரு சமயம் ராமக்ருஷ்ணர் ப்ரேமபக்தி ரஸத்தால் மதம் பிடித்தவராய் கங்கைக் கரையில் ஹரிகீர்த்தனம் செய்துகொண்டு நர்த்தனமாடினுர்.

तं दृष्ट्वा प्रेमसम्पूर्णं पुलकाङ्कितविग्रहम् ।
रामकृष्णं पुरीन्द्रोपि परिहासं चकार सः ॥ १८ ॥

18. ப்ரேமையுடன் கூடியவரும் மேனி சிலிர்த்தவரும் ஆகிய அந்த ராமக்ருஷ்ணரைப் பார்த்து தோதாபுரியும் பரிஹாஸம் செய்தார்.

तोतापुरीन्द्र उवाच

निर्विकल्पसमाधिञ्च प्राप्य त्वं साधको यथा ।
किमर्थं कीर्तनं शौरेः करोषि ज्ञानिनां वर ॥ १९ ॥

தோதாபுரி

19. "நிர்விகல்ப ஸமாதியை அடைந்தும் கூட நீ ஒரு ஸாதகனைப்போல் எதற்காக ஹரிகீர்த்தனம் செய்கிறுய்?

अपूपास्फालनं त्वेवं मूढानामेव सौख्यदम् ।
अस्माकं योगिवर्याणां करतालेन किं सुखम् ॥ २० ॥

20. இவ்வாறு ரொட்டி தட்டுவது மூடர்களுக்கே ஸுகமானது. யோகிகளாகிய நமக்கு கரதாளம் போடுவதால் என்ன ஸுகம்?"

परमहंस उवाच

हन्त कैवल्यनिष्ठेन त्वयैवं हरिकीर्तनम् ।
विनिन्द्यते वाञ्छितं तच्छुकेनापि महात्मना ॥ २१ ॥

பரமஹம்ஸர்

21. "அந்தோ! கைவல்யத்தில் ப்ரியமுடைய உம்மால் இவ்வாறு ஹரிகீர்த்தனம் பஜிக்கப்பட்டது. அதுவோ மஹாத்மாவான சுகராலும் கூட விரும்பப் பட்டது.

मुक्तानामपि सिद्धानां तस्य माया दुरत्यया ।
मायया पीडिताः प्रापुः कोपञ्च सनकादयः ॥ २२ ॥

22. முக்தர்களுக்கும் ஸித்தர்களுக்கும் கூட அவனுடைய மாயை தாண்டுதற்கு அரியது. ஸனகாதியர்கள் கூட அவனுடைய மாயையினால் பீடிக்கப்பட்டு கோபத்தை அடைந்தனர்.

तस्मात्सर्वस्वभावेन भजेन्मायाविनं हरिम् ।
तत्प्रसादेन तन्मायां जयेत्क्लेशविवर्जितः ॥ २३ ॥

23. ஆகையினால் எவ்விதத்திலும், மாயாவியான ஹரியை பஜிக்க வேண்டும். அவன் திருவருளாலேயே, அவனது மாயையை க்லேசமில்லாமல் ஜெயித்து விடலாம்.

श्रीसद्गुरुरुवाच

एवं श्रीरामकृष्णस्य वचनं योगिनां वरः ।
आकर्ण्यापि च तद्वाक्यं नानुमेने पुरीश्वरः ॥ २४ ॥

ஸ்ரீ ஸத்குரு

24. இவ்வாறு ஸ்ரீராமக்ருஷ்ணருடைய வசனத்தைக் கேட்டுங்கூட, யோகிகளில் சிறந்த தோதாபுரி, அவர் மொழியை ஒப்புக்கொள்ளவில்லை.

फल्गुबुद्ध्या मुकुन्दस्य भजनेपि सुखावहे ।
मुक्तमानी रामकृष्णं निनिन्द बहुधा च सः ॥ २५ ॥

25. ஸுகம் தருவதாக இருந்த போதிலும், முகுந்த பஜனத்தில் 'இது அல்பம்' என்கிற புத்தியால் தன்னை ஜீவன் முக்தராய் நினைத்துக் கொண்டிருக்கும் அந்த தோதாபுரி, ராமக்ருஷ்ணரைப் பலவிதமாய்ப் பழித்தார்.

एवं भक्तापराधेन भगवद्भक्तिनिन्दया ।
तस्याभवद्दिने तस्मिन् कुक्षिरोगः सुदुःसहः ॥ २६ ॥

26. இவ்வாறு பக்தனுக்கு அபராதம் செய்ததாலும், பகவத் பக்தியை நிந்தித்ததாலும், அவருக்கு அன்றே ஸஹிக்க முடியாத வயிற்றுவலி உண்டாயிற்று.

तद्बाधाबाधितं चित्तं तस्य योगीश्वरस्य तु ।
निर्विकल्पसमाधौ च लयं न प्राप निश्चलम् ॥ २७॥

27. அந்த துன்பத்தினால் பாதிக்கப்பட்ட அந்த யோகீச்வரரின் சித்தம், நிர்விகல்ப ஸமாதியிலும் அலைவற்று லயமடைய வில்லை.

तस्मात्सुदुःखितो योगी प्राणत्यागेपि निश्चयम् ।
कृत्वा गङ्गाजले शुद्धे पपात निशि दुर्मनाः ॥ २८ ॥

28. ஆகையினால் மிகவும் துக்கமடைந்த அந்த யோகி மனதை வெறுத்து பிராணத்யாகத்திலும் உறுதிகொண்டு, இரவு சுத்தமான கங்கா ஜலத்தில் விழுந்தார்.

जानुपर्यन्तमेवात्र दृष्ट्वा वारि सुदुःखितः ।
संप्राप्य रामकृष्णञ्च निजं दुःखं न्यवेदयत् ॥ २९ ॥

29. கங்கையிலும் முழங்கால் அளவே ஜலத்தைக்கண்டு, மிகவும் துக்கமடைந்து, ராமக்ருஷ்ணரிடம் வந்து தனது துன்பத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

तं दृष्ट्वा कृपया देवः कुक्षिरोगेण पीडितम् ।
महार्थं वचनं प्राह मधुरं महतां महान् ॥ ३० ॥

30. வயிற்று வலியால் துன்பப்படும் அவரைக் கண்டு, மஹான்களுக்கும் மஹானான ராமக்ருஷ்ண தேவர், கருணையுடன் அர்த்த புஷ்டியுள்ள, மதுரமான வசனத்தைச் சொன்னார்.

श्रीपरमहंस उवाच

अक्षरब्रह्मनिष्ठस्य जगन्मिथ्येतिवादिनः ।
समाधिस्थस्य ते लोके दुःसहं किं यतीश्वर ॥ ३१ ॥

ஸ்ரீ பரமஹம்ஸர்

31. "நிர்க்குண ப்ரும்மத்தில் லயித்திருப்பவரும் நிர்விகல்ப ஸமாதி கைகூடியவரும் உலகமே மாயை என்று சொல்லுகின்றவருமான உமக்கு, உலகில் ஸஹிக்கமுடியாதது என்ன உள்ளது?

मादृशानां तु मूढानां विहितं हरिकीर्तनम् ।
निर्गुणब्रह्मनिष्ठो हि भवान् दुःखं सुखं न ते ॥ ३२ ॥

32. என்னைப்போன்ற மூடர்களுக்கோ, ஹரி பஜனை விதிக்கப்பட்டுள்ளது. தாங்களோ, நிர்க்குண ப்ரும்மத்தில் நிலைபெற்றவர். தங்களுக்கு ஸுகமோ துக்கமோ இல்லை யல்லவா?"

तोतापुरीन्द्र उवाच

त्वद्वाक्यं सत्यमेवैतत् जगन्मिथ्या न संशयः ।
निर्गुणब्रह्मनिष्ठोऽहं न मे दुःखं न मे सुखम् ॥ ३३ ॥

தோதாபுரி

33. "நீ சொல்லுவது உண்மையே. உலகம் மாயை என்பதில் ஸந்தேகமில்லை. நானும் நிர்க்குண ப்ரும்மத்தில் நிஷ்டை கைகூடியவன். எனக்கு துக்கமோ ஸுகமோ இல்லை.

तथापि मे मनस्त्वेतत्समाधौ न विधीयते ।
सुदुर्जया मयाप्येषा माया विष्णोर्न संशयः ॥ ३४ ॥

34. ஆயினும், எனது இந்த மனம் ஸமாதியில் நிலை பெறவில்லை. என்னாலும்கூட இந்த விஷ்ணு மாயை ஜெயிக்கவே முடியாது. ஸந்தேகமில்லை."

परमहंस उवाच

मा विषीद महाबुद्धे ज्ञानिनामपि दुर्जयम् ।
विष्णोर्मायाबलं दृष्ट्वा ह्येवं संसारकारणम् ॥ ३५ ॥

பரமஹம்ஸர்

35. "மஹாபுத்திமானே! ஸம்ஸாரத்திற்குக் காரணமானதும், ஞானிகளுக்கும் ஜெயிக்கமுடியாததுமான, விஷ்ணுமாயையின் பலத்தை இவ்வாறு கண்டீரா! வருந்தாதீர்.

कुक्षिरोगस्य ते योगिन् शमनाय करोम्यहम् ।
कीर्तनं वासुदेवस्य शोकमोहनिवारकम् ॥ ३६ ॥

36. யோகியே! உமது வயிற்றுவலி அடங்கும் படியாக, நான் அஞ்ஞானத்தையும் துன்பத்தையும் விலக்கும் வாஸுதேவ பஜனையை செய்வேன்.''

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वा भगवांश्चक्रे सानन्दं हरिकीर्तनम् ।
तस्य तच्छ्रवणेनैव बाधा नष्टाभवत्तदा ॥ ३७ ॥

ஶ்ரீ ஸத்குரு

37. இவ்வாறு சொல்லி ஶ்ரீ ராமக்ருஷ்ண பகவான் ஆனந்தமாக ஹரிகீர்த்தனம் செய்தார். அதைக் கேட்டதிலேயே தோதாபுரியின் வயிற்று வலியும் அப்பொழுதே நீங்கி விட்டது.

विज्ञाय भगवद्भक्त्याः माहात्म्यं स पुरीश्वरः ।
तेन साकं चकारापि सानन्दं कृष्णकीर्तनम् ॥ ३८ ॥

38. அந்த தோதாபுரியும், பகவத் பக்தியின் மஹிமையை அறிந்து ராமக்ருஷ்ணருடன் கூடி மகிழ்ச்சியுடன் க்ருஷ்ண பஜனை செய்தார்.

एवं भजनमाहात्म्यं दर्शयामास लीलया ।
रामकृष्णो महायोगी पुरीन्द्रायात्मबन्धवे ॥ ३९ ॥

39. உண்மை பந்துவான தோதாபுரியின் பொருட்டு, மகாயோகியான ராமக்ருஷ்ணர் இவ்வாறு பஜனையின் மகிமையை விளையாட்டாகக் காண்பித்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे रामकृष्णचरिते
चतुर्थोऽध्यायः ॥ ४ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீராமக்ருஷ்ண சரிதம் என்னும் நான்காவது
அத்யாயம் முற்றும்.

॥ अथ पञ्चमोऽध्यायः ॥

ஐந்தாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

हरिर्हि निर्गुणः साक्षान्नामरूपविवर्जितः ।
यच्च किञ्चिज्जगत्सर्वं व्याप्य सर्वत्र तिष्ठति ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. ஹரியோ நாமரூபங்களையும், குணங்களையும் கடந்தவர். இங்கு காணப்படும் எல்லா உலகங்களிலும் வ்யாபித்து நிற்கிறார்.

तं पश्यन्ति महात्मानः सिद्धा योगसमाधिना ।
जितेन्द्रिया जितक्रोधा दुर्लभश्च कुयोगिनाम् ॥ २ ॥

2. பக்குவமில்லாதவர்களுக்கு துர்லபனான அவனை, புலன்களையும் கோபத்தையும் அடக்கிய ஸித்தர்களான பெரியோர்களே, யோக ஸமாதியினால் காணுகின்றனர்.

स्त्रियो बालाश्च मूढाश्च गोविन्दे योगिदुर्लभे ।
प्रेम कर्तुं शक्नुवन्ति विग्रहाराधनेन हि ॥ ३ ॥

3. பெண்களும், பாலகர்களும், மூடர்களும் கூட, யோகிகளுக்கும் துர்லபனான கோவிந்தனிடம், விக்ரஹ ஆராதனத்தால் அன்பு செய்ய முடிகிறதல்லவா?

भक्ताः प्रेम्णा विशुद्धेन विश्वासेन दृढेन च ।
विग्रहाराधनं कृत्वा साक्षात्तं ददृशुः पुरा ॥ ४ ॥

4. முன்பு, பல பக்தர்கள் தூய அன்பினாலும், திட நம்பிக்கையாலும், விக்ரஹ ஆராதனை செய்து அந்த பகவானை நேரில் கண்டார்கள்.

प्रेमवश्यो जगन्नाथः सर्वशक्तः सतामिह ।
अर्चावताररूपेण रमते बहुधा कलौ ॥ ५ ॥

5. எல்லாம் வல்ல இறைவன் ஸாதுக்களின் ப்ரேமைக்கு வசமாகி இந்தக் கலியில் அர்ச்சாவதார ரூபத்துடன் பல விதமாய் விளையாடுகிறான்.

कलावर्चावतारस्य मुख्यत्वं वीक्ष्य वैष्णवाः ।
विग्रहाराधनं प्रेम्णा कुर्वन्ति हि दिने दिने ॥ ६ ॥

6. கலியில் அர்ச்சாவதாரமே முக்யமெனக் கண்ட வைஷ்ணவர்கள் தினந்தோறும் ப்ரேமையுடன் விக்ரஹாராதனை செய்கின்றனர்.

विग्रहाराधनं पुण्यं सर्वमानसरञ्जकम् ।
अविज्ञाय विनिन्दन्ति केचित्पण्डितमानिनः ॥ ७ ॥

7. யாவருடைய மனதையும் கவரக்கூடிய புண்யமான விக்ரஹாராதனத்தைத் தங்களை அறிவாளிகளாகக் கருதி கர்வமடைந்திருக்கும் சிலர் பழிக்கின்றனர்.

श्रीमान् केशवचन्द्राख्यः कश्चिदासीन्महामतिः ।
पाश्चात्यमतविभ्रान्तो म्लेच्छभाषाविशारदः ॥ ८ ॥

8. ஆங்கில பாஷையில் வல்லவரும் கிறிஸ்தவ மதத்தில் மயங்கியவரும், சிறந்த புத்திமானும், தனிகருமான, கேசவ சந்த்ரர் என்கிற ஒருவர் இருந்தார்.

स तु ब्रह्मसमाजाख्यं स्थापयित्वा स्वयं सदः ।
इयेष शोधनं कर्तुं सनातनमतस्य ह ॥ ९ ॥

9. அவர் தானே ப்ரும்ம ஸமாஜம் என்கிற ஸபையை ஸ்தாபனம் செய்து பழமையான ஹிந்து மதத்தை சீர்திருத்த நினைத்தார்.

अविश्वासं चकारायं विग्रहाराधने हरेः ।
अवतारेषु सर्वेषु श्रौतस्मार्तेषु कर्मसु ॥ १० ॥

10. இவர் விக்ரஹாராதனத்திலும், ஹரியின் அவதாரங்களிலும், வேதங்களும் ஸ்ம்ருதிகளும் நியமிக்கும் எல்லா கர்மானுஷ்டானங்களிலும் அவநம்பிக்கையைச் செய்தார்.

तमाश्रित्य महाबुद्धिं धनिनं वदतां वरम् ।
अन्धेनैव नीयमाना यथान्धा ह्यभवन् जनाः ॥ ११ ॥

11. சிறந்த பேச்சாளியும், தனிகரும் புத்தி மானுமாகிய அவரை ஆச்ரயித்து ஜனங்கள் குருடனுல் அழைத்துச் செல்லப்படும் குருடர்கள்போல் ஆனுர்கள்.

सर्वत्र व्याप्तमेवासीत्तन्मतं चादृतं जनैः ।
विलोक्य रामकृष्णस्तु परमं खेदमाप च ॥ १२ ॥

12. மக்களின் ஆதரவுபெற்ற அவர் கொள்கை எங்கும் பரவியது. அதைக்கண்டு ராமக்ருஷ்ணர் மிகவும் வருத்தமடைந்தார்.

लब्ध्वानुज्ञां भगवतो रामकृष्णो जगद्गुरुः ।
द्रष्टुं केशवचन्द्रं तं हर्षेण प्राप तत्सभाम् ॥ १३ ॥

13. ஜகத்குருவான ராமக்ருஷ்ணர் பகவானின் நியமனத்தைப் பெற்று அந்த கேசவசந்திரரைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியுடன் அவருடைய சபைக்குச் சென்றுர்.

अवतारस्य माहात्म्यं विग्रहाराधनस्य च ।
ऊरीचकार धीरोऽयं दिव्यवाण्या स्वयं प्रभुः ॥ १४ ॥

14. ராமக்ருஷ்ண மஹாப்ரபு தீரசித்தமுடையவராய் அவதாரங்களுடையவும் விக்ரஹாராதனத்தினுடையவும் மகிமையை தனது திவ்ய வாக்கினுல் ஊர்ஜிதம் செய்தார்.

तस्य दर्शनमात्रेण तद्वाणीश्रवणेन च ।
प्राज्ञः केशवचन्द्रोपि प्रसन्नहृदयोऽभवत् ॥ १५ ॥

15. அவருடைய தர்சனத்தினுலும் அவருடைய வாக்கைக் கேட்டதாலும் பேரறிஞரான கேசவசந்திரர் தெளிந்த உள்ளம் உடையவராய் ஆனுர்.

विच्छिन्नसर्वसन्देहः प्रसन्नहृदयश्च सः ।
रामकृष्णपदाम्भोजे न्यपतत्सह शिष्यकैः ॥ १६ ॥

16. எல்லா ஸந்தேஹமும் நீங்கப்பெற்று தெளிந்த மனமுடையவராய் அவர் சிஷ்யர்களுடன் கூட ராமக்ருஷ்ணரின் பாதாரவிந்தத்தில் விழுந்தார்.

तदाप्रभृति सोऽप्येनं रामकृष्णं महामुनिम् ।
आश्रित्य भक्तिमार्गस्य बोधयामास वैभवम् ॥ १७ ॥

17. அன்று முதற்கொண்டு அவரும் ராமக்ருஷ்ண முனிவரை ஆச்ரயித்து பக்தி மார்க்கத்தின் மகிமையைப் போதிக்கலானுர்.

रामकृष्णो महात्मा तु बाल्यात्प्रभृति चादरात् ।
विग्रहाराधनं कृत्वा परां सिद्धिमवाप हि ॥ १८ ॥

18. மஹாத்மாவான ராமக்ருஷ்ணரோ பால்யம் முதற்கொண்டே அன்புடன் விக்ரஹாராதனம் செய்து சிறந்த ஸித்தியை அடைந்தாரல்லவா ?

जटाधराख्यो विप्रस्तु बालरामस्य विग्रहम् ।
पूजयामास सप्रेम कौसल्याभावसम्युतः ॥ १९ ॥

19. ஜடாதாரி என்கிற பிராம்மணர் தன்னை கௌஸல்யையாகப் பாவித்துக்கொண்டு பாலராமனின் விக்ரஹத்தை ப்ரேமையுடன் பூஜித்து வந்தார்.

स कदाचिद्रामकृष्णं द्रष्टुकामः सतां वरः ।
दक्षिणेशपुरीं प्राप बालरामेण सम्युतः ॥ २० ॥

20. ஸாதுக்களில் சிறந்த அவர் பாலராமனுடன் கூட ராமக்ருஷ்ணரைக்காண விரும்பி தக்ஷிணேச்வரம் வந்தார்.

मानितो रामकृष्णेन तत्रैव न्यवसद्द्विजः ।
बालरामोपि चिक्रीड सन्ततं तस्य सन्निधौ ॥ २१ ॥

21. ராமக்ருஷ்ணரால் கௌரவிக்கப்பட்ட அந்த பிராம்மணர் அங்கேயே வஸித்தார். பாலராமனும் எப்பொழுதும் ராமக்ருஷ்ணரின் எதிரில் விளையாடினான்.

स्नानशय्याटनस्थान भोजनादिषु कर्मसु ।
रामकृष्णे प्रवृत्तेपि तेन चिक्रीड राघवः ॥ २२ ॥

22. ராமக்ருஷ்ணர் குளித்தாலும், படுத்திருந்தாலும், உலாவினாலும், உட்கார்ந்திருந்தாலும், சாப்பிட்டாலும், வேறு எந்த வேலைசெய்தாலும், அவருடனேயே பாலராமன் விளையாடிக்கொண்டிருந்தான்.

प्रतस्थे ब्राह्मणः सोपि स्वग्रामं गन्तुमिच्छया ।
रामकृष्णवियोगेन रुरोद शिशुराघवः ॥ २३ ॥

23. அந்த பிராம்மணரும் தனது ஊர் செல்ல வேண்டி புறப்பட்டார். பாலராமனோ ராமக்ருஷ்ணரின் பிரிவால் அழுதான்.

एवं बालकरामस्य रामकृष्णे महात्मनि ।
प्रणयं वीक्ष्य विप्रोपि तत्रैव विससर्ज तम् ॥ २४ ॥

24. இவ்வாறு மஹாத்மாவான ராமக்ருஷ்ணரிடம் பாலராமனுக்கு இருந்த ப்ரேமையைக் கண்ட பிராம்மணரும், அவனை தக்ஷிணேச்வரத்திலேயே விட்டுச் சென்றார்.

गते विप्रे बालरामः रामकृष्णेन पूर्ववत् ।
क्रीडन्नुवास सानन्दं स्वमात्रा बालको यथा ॥ २५ ॥

25. பிராம்மணர் சென்றதும், பாலராமன், ராமக்ருஷ்ணருடன் முன்பு போலவே தாயிடம் குழந்தைபோல் ஆனந்தமாக விளையாடிக்கொண்டு வஸித்து வந்தான்.

एवमर्चावतारेपि यः करोति रतिं पराम् ।
तेन सम्भाषणं नित्यं करोति परमेश्वरः ॥ २६ ॥

26. இவ்வாறு எவன் அர்ச்சாவதாரத்திலும் திடமான பக்தியைச் செய்கிறானோ அவனுடன் பரமேச்வரன் தினமும் சம்பாஷணை செய்கிறான்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे रामकृष्णचरिते
पञ्चमोऽध्यायः ॥ ५ ॥

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீராமக்ருஷ்ண சரிதத்தில் ஐந்தாவது
அத்யாயம் முற்றும்.

॥ अथ षष्ठोऽध्यायः ॥

ஆறாவது அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

ब्रह्मनिष्ठो ब्राह्मणः स्यान्न कुलेनैव केवलम् ।
ब्राह्मणोऽपि स चण्डालः दुराचारसमन्वितः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. ப்ரும்ம ஞானியே பிராம்மணனுவான். ஜாதியினுல் மட்டுமில்லை. துர்நடத்தையுடன் கூடியவன் பிராம்மணனுயினும் சண்டாளன்.

विष्णुभक्तो वैष्णवः स्यादूर्ध्वपुण्ड्रेण केवलम् ।
वैष्णवं भक्तिरहितं जानीयात्प्राकृतं नरम् ॥ २ ॥

2. விஷ்ணு பக்தனே வைஷ்ணவனுவான். திருமண் அணிவதால் மட்டுமில்லை. பக்தியில்லாத வைஷ்ணவனை ஸாதாரண மனிதனுய் அறிய வேண்டும்.

तथा परमहंसत्वं आत्मज्ञानेन केवलम् ।
न तु काषायवस्त्रेण दण्डेन करकेण वा ॥ ३ ॥

3. அவ்வாறே ஆத்மஞானத்தினுல் மட்டும் பரமஹம்ஸ நிலை கிட்டும். காஷாயம், தண்டம், கமண்டலு இவைகளை அணிவதால் மட்டும் இல்லை.

देहं प्राणान्मनश्चापि विस्मृत्यात्मनि निश्चलम् ।
सोहं भावेन तिष्ठन्तं तं हंसं परमं विदुः ॥ ४ ॥

4. தேஹம், பிராணன், மனம், இவைகளை மறந்து ஆத்மாவிலேயே நான் என்கிற எண்ணத்துடன் நிலைத்திருக்கிறவனை பரமஹம்ஸன் என்பர்.

आचरन् प्राकृते लोके जडोन्मत्तपिशाचवत् ।
सदा परमहंसस्तु क्रीडति ब्रह्मविद्यया ॥ ५ ॥

5. இவ்வுலகில் மூடன்போலும், பித்தன் போலும், பிசாசுபோலும் நடந்துகொண்டு, பரமஹம்ஸன் எப்பொழுதும் ப்ரும்ம வித்தையுடன் விளையாடுகிறான்.

एवं परमहंसस्य लक्षणं श्रीगदाधरे ।
विलोक्य पण्डिताः प्राहुः तं हंसं परमं गुरुम् ॥ ६ ॥

6. இவ்வாறு பரமஹம்ஸ லக்ஷணத்தை, ராமக்ருஷ்ணரிடம் பார்த்து பண்டிதர்கள் அவரை பரமஹம்ஸர் என்றார்கள்.

क्वचिन्नृत्यति सानन्दं क्वचिद्रोदिति बालवत् ।
क्वचिद्गायति गोविन्दं क्वचिद्ध्यायति केशवम् ॥ ७ ॥

7. ஒருகால் ஆனந்தமாய் ஆடுவார்; ஒருகால் குழந்தைபோல் அழுவார்; ஒருகால் கோவிந்தனைப் பாடுவார்; ஒருகால் கேசவனை த்யானிப்பார்.

क्वचित्कथां कथयति क्वचित्पूजयति प्रभुम् ।
क्वचिच्छिष्यान् बोधयति समाधौ तिष्ठति क्वचित् ॥ ८ ॥

8. ஒருகால் கதைகள் சொல்லுவார்; ஒருகால் பகவானைப் பூஜிப்பார்; ஒருகால் சிஷ்யர்களுக்குப் போதிப்பார்; ஒருகால் ஸமாதியில் நிலைத்திருப்பார்.

क्वचिन्म्लेच्छ इवाभाति क्वचिद्भवति वैदिकः ।
क्वचिद्यतिरिवाभाति गृहस्थो भवति क्वचित् ॥ ९ ॥

9. ஒருகால் மிலேச்சனைப்போல் தோன்றுவார்; ஒருகால் வைதிகனுயிருப்பார்; ஒருகால் துறவிபோல் தோன்றுவார்; ஒருகால் க்ரஹஸ்தனுய் இருப்பார்;

क्वचिच्छाक्त इवाभाति क्वचिद्भवति वैष्णवः ।
क्वचिद्दिगम्बरो भाति क्वचिद्वस्त्रादिभूषितः ॥ १० ॥

10. ஒருகால் சாக்தன்போல் தோன்றுவார்; ஒருகால் வைஷ்ணவனுய் இருப்பார்; ஒருகால் திகம்பரனு யிருப்பார்; ஒருகால் வஸ்திரம் முதலியவைகள் அணிந்திருப்பார்.

दुरूहं तस्य माहात्म्यं अविज्ञाय नरा जडाः ।
तं मेनिरे महात्मानमुन्मत्तं श्रीगदाधरम् ॥ ११ ॥

11. ஊஹிக்க முடியாத அவருடைய மஹிமையை அறியாது மூடஜனங்கள் மஹாத்மாவான ராமக்ருஷ்ணரை பித்தர் என்று எண்ணினர்.

पूजां कर्तुमनर्होऽयं तस्मादेनं त्यज प्रभो ।
इति विज्ञापयामासुः मन्दिराध्यक्षकाय ते ॥ १२ ॥

12. அவர்கள் கோயில் அதிகாரியிடம் சென்று, "ஐயா, இவர் பூஜை செய்யத் தகுதி அற்றவர்; ஆகையினுல் இவரை விலக்கிவிடும்," என்று விண்ணப்பித்துக்கொண்டனர்.

भक्तिमान्मथुरानाथो मन्दिराध्यक्षको महान् ।
कदाचिदागतस्तत्र ददर्श जगतां गुरुम् ॥ १३ ॥

13. கோயில் அதிகாரியும், பக்தியுள்ள பெரிய வருமான மதுராநாதர், ஒரு ஸமயம் அங்குவந்து ஜகத்குருவான ராமக்ருஷ்ணரைக் கண்டார்.

श्रीकृष्णभजनानन्द विमुग्धसकलेन्द्रियम् ।
विस्मृताखिललोकं तं विलुठन्तं धरातले ॥ १४ ॥

रुदन्तं कृष्णकृष्णेति बाष्पसंपूर्णलोचनम् ।
रामकृष्णं प्रेमसिन्धुं कृपासिन्धुं सतां वरम् ॥ १५ ॥

तं दृष्ट्वा मथुरानाथो महाविस्मयसम्युतः ।
स्तम्भवत्तत्र तस्थौ च कृताञ्जलिपुटो महान् ॥ १६ ॥

14-16. ஸ்ரீ க்ருஷ்ண பஜன ஆனந்தத்தில் எல்லாப் புலன்களும் மயங்கியிருப்பதால் அகில உலகங்களையும் மறந்தவரும், தரையில் புரளுகிற வரும், கண்ணீர் வடித்து "க்ருஷ்ண, க்ருஷ்ண" என்று அழுகின்றவரும், ப்ரேமஸாகரம் போன்ற வரும், கருணைக்கடலும், ஸாதுக்களில் சிறந்தவரு மாகிய அந்த ராமக்ருஷ்ணரைப்பார்த்து பெருந் தன்மையுடைய மதுராநாதர் ஆச்சர்யமடைந்து கைகுவித்து தூண்போல் நின்றுகொண்டிருந்தார்.

लब्धप्रज्ञो रामकृष्णो मथुरानाथमागतः ।
प्ररुदन्प्राह मधुरं सानन्दं प्रेमपूर्वकम् ॥ १७ ॥

17. சுய நினைவு அடைந்த ராமக்ருஷ்ணர் மதுராநாதரிடம் வந்து, அன்புடனும், மகிழ்ச்சியுட னும், அழுதுகொண்டே இனிமையாய்ச் சொன்னார்.

श्रीपरमहंस उवाच

प्रसीद सुमहाभाग गुणपूर्णोऽसि सुव्रत ।
न जानामि रसोन्मत्तः तवागमनमप्यहम् ॥ १८ ॥

ஸ்ரீ பரமஹம்ஸர்

18. "பாக்யவானே! இரக்கம் காட்டவேணும். உறுதி உள்ளவரே! நற்குணம் நிறைந்தவராய் உள்ளீர்! பக்தி ரஸத்தினால் பித்தனாகிய நான் உமது வருகையைக்கூட அறியவில்லை.

नित्यमाराधनं कर्तुमनर्होऽहं हरेरिह ।
प्रेमभक्तिरसोन्मत्तो भवामि त्यज मां प्रभो ॥ १९ ॥

19. இங்கு தினமும் ஹரியை ஆராதிப்பதற்கு நான் தகுதியற்றவனாகிவிட்டேன். ப்ரேமபக்தி ரஸத்தினால் பித்தனாய் இருக்கிறேன். ப்ரபுவே! என்னை விலக்கிவிடுவீராக!"

मथुरानाथ उवाच

सर्वेषामर्चकाणां त्वं विष्णुभक्तिमतां वर ।
आदर्शभूतो भवसि तस्मात्तुष्टोऽस्मि सर्वदा ॥ २० ॥

மதுராநாதர்

20. "விஷ்ணுபக்தர்களில் சிறந்தவரே! எல்லா அர்ச்சகர்களுக்கும் நீரே எடுத்துக்காட்டாக ஆகிறீர். ஆகையால் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறேன்.

प्रेमभक्तकृतायां तु पूजायां वैष्णवोत्तम ।
नापेक्षते कृपासिन्धुः नियमान् शास्त्रसंभवान् ॥ २१ ॥

21. வைஷ்ணவோத்தமரே! ப்ரேமபக்தன் செய்யும் பூஜையில், கருணைக்கடலான பகவான் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட நியமங்களை அபேக்ஷிப்பதில்லை.

तस्मात्त्वमेव कृष्णाय देव्यै च प्रेमपूर्वकम् ।
पत्रं पुष्पं फलं तोयं अर्पय प्रेमिकोत्तम ॥ २२ ॥

22. பக்த ச்ரேஷ்டரே! ஆகையால் கண்ணனுக்கும், தேவிக்கும் ப்ரேமையுடன் நீரே பத்ரமோ, புஷ்பமோ, பழமோ, ஜலமோ அர்ப்பணம் செய்யுங்கள்.''

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वा मथुरानाथो रामकृष्णं जगद्गुरुम् ।
प्रणम्य तदनुज्ञातो जगाम स्वगृहं प्रति ॥ २३ ॥

ஸ்ரீ ஸத்குரு

23. இவ்வாறு சொல்லி மதுராநாதர் ஜகத்குருவான ராமக்ருஷ்ணரை வணங்கி, அவரிடம் விடைபெற்று, தன் வீட்டிற்குத் திரும்பிச்சென்றார்.

ततः स्वच्छन्दमेवायं प्रेमभावेन सम्युतः ।
पूजयामास गोविन्दं तन्मायां कालिकामपि ॥ २४ ॥

24. பிறகு ராமக்ருஷ்ணர் ப்ரேமையுடன் கூடி ஸ்வதந்திரமாய் கோவிந்தனையும், அவனது மாயையான காளிதேவியையும் பூஜித்து வந்தார்.

क्वचिद्यशोदाभावेन वात्सल्यं कुरुते हरौ ।
क्वचिदर्जुनभावेन सख्यं दर्शयति प्रिये ॥ २५ ॥

25. ஒருகால் யசோதைபோல் கண்ணனிடம் வாத்ஸல்யம் காட்டுவார்; ஒருகால் அர்ஜுனன் போல் நண்பனுள கண்ணனிடம் அன்பு காட்டுவார்.

कचिन्मधुरभावेन राधिकेव च वर्तते ।
कचिन्मारुतिभावेन दास्यञ्च कुरुते प्रभोः ॥ २६ ॥

26. ஒருகால் ராதைபோல காதல் செய்வார்; ஒருகால் ஹனுமான்போல் ப்ரபுவிற்குத் தொண்டு செய்வார்.

एवं नानाविधां भक्तिं संप्राप्य परमेश्वरे ।
भक्तानानन्दयामास रामकृष्णो गदाधरः ॥ २७ ॥

27. இவ்வாறு ராமக்ருஷ்ணர் எனப்படும் கதாதரர் பரமேச்வரனிடம் பலவிதமான பக்தியை அடைந்து, பக்தர்களை ஆனந்தப்படுத்தினர்.

कदाचिद्रामकृष्णस्तु मथुरानाथसम्युतः ।
प्रतस्थे तीर्थयात्रायै तीर्थपादोपि च स्वयम् ॥ २८ ॥

28. ஒரு ஸமயம் ராமக்ருஷ்ணர் தானே தூய திருவடி உடையவராயினும், மதுராநாதருடன் தீர்த்த யாத்திரை சென்றார்.

काशीं प्रयागं मथुरां संप्राप्य भगवान् क्रमात् ।
श्रीमद्बृन्दावनं प्राप कृष्णप्रेमप्रवर्धनम् ॥ २९ ॥

29. பகவானுகிய ராமக்ருஷ்ணர், காசி, பிரயாகை, மதுரை, இவைகளை முறையே அடைந்து முடிவில் க்ருஷ்ணப்ரேமையை வளர்க்கும் ஸ்ரீ ப்ருந்தாவனத்தை அடைந்தார்.

राधाभावेन सम्युक्तः स्वप्रियं श्यामसुन्दरम् ।
मृगयामास सर्वत्र गौराङ्ग इव सन्ततम् ॥ ३० ॥

30. தன்னை ராதையாக பாவித்து, தனது காதலனுன கண்ணனை கௌராங்க மஹாப்ரபு போல், ஓயாமல் எங்கும் தேடினர்.

हा कृष्ण दर्शनं देहि करुणालय माधव ।
इति क्रन्दंस्तत्र तत्र बभ्राम स गदाधरः ॥ ३१ ॥

31. "ஹா! க்ருஷ்ணா! கருணாநிதியே! மாதவா! தரிசனம் கொடு" என்று அழுதுகொண்டே அந்த ராமக்ருஷ்ணர் ஆங்காங்கு அலைந்தார்.

तत्रैव वासं कर्तुञ्च चक्रे निश्चयमात्मवान् ।
किन्तु तं मथुरानाथः सान्त्वयामास सादरम् ॥ ३२ ॥

32. ஸ்வதந்திரரான ராமக்ருஷ்ணர் அங்கேயே வஸிப்பதற்கு உறுதியும் கொண்டார். ஆனால் மதுராநாதர் அன்புடன் அவரை ஸமாதானம் செய்தார்.

यथाकथञ्चित्तं प्रेम्णा सान्त्वयन् मथुरापतिः ।
प्रापयामास कृच्छ्रेण स्वगुरुं दक्षिणेश्वरम् ॥ ३३ ॥

33. மதுராநாதர் தனது குருவை ப்ரேமையுடன் எப்படியோ ச்ரமப்பட்டு தக்ஷிணேச்வரத்திற்கு கொண்டு சேர்த்தார்.

विष्णुपादं जगन्नाथं द्रष्टुकामोपि सद्गुरुः ।
न ययौ तत्र तत्रैव स्वलये संशयं गतः ॥ ३४ ॥

34. ஸத்குருவான ராமக்ருஷ்ணர், கயா க்ஷேத்திரத்திற்கும், ஜகன்னாதபுரிக்கும் போக விருப்பமிருந்தும், அங்கேயே தான் முக்திபெற்று விடுவோமோ என்று ஸந்தேகத்தினால் அங்கு செல்லவில்லை.

इति श्रीकृष्णप्रेमि प्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे रामकृष्णचरिते
षष्ठोऽध्यायः ॥ ६ ॥

இவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீராமக்ருஷ்ண சரிதம் என்னும் ஆறாவது
அத்தியாயம் முற்றும்.

॥ अथ सप्तमोऽध्यायः ॥

ஏழாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

स्त्रीणां शुद्धचरित्राणां भर्ता हि परमा गतिः ।
तमेव भगवद्बुद्ध्या पूजयन्ति हि योषितः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. நன்னடத்தையுடைய பெண்களுக்கு கணவனே சிறந்த கதி. பெண்கள் கணவனையே தெய்வமாகப் பூஜிக்கின்றனர்.

स्वपतिं या परित्यज्य पतिमन्यञ्च काङ्क्षते ।
सा भवत्युभयत्रापि विनष्टा लोकगर्हिता ॥ २ ॥

2. தன் கணவனை விட்டு எவள் பிற புருஷனை விரும்புகின்றாளோ அவள் உலகில் பழிக்கப்பட்டவளாய் இக லோகம், பரலோகம் இரண்டையும் இழக்கிறாள்.

राक्षसत्वमपि प्राप्तं मदयन्ती पतिं यथा ।
भर्तारं या परिचरेत्सा भवेल्लोकपूजिता ॥ ३ ॥

3. அரக்கனுகவும் ஆகிய பதியை, மதயந்தி எவ்வாறு பின் தொடர்ந்தாளோ அவ்வாறு எவள் கணவனுக்குத்தொண்டு செய்கிருளோ அவள் உலகில் பூஜிக்கப்படுவாள்.

अङ्गहीनं दरिद्रं वा मूढबुद्धिञ्च रोगिणम् ।
भर्तारं पूजयेत्साध्वी परलोकसुखेच्छया ॥ ४ ॥

4. அங்கஹீனனுயினும், ஏழையாயினும், மூடனுயினும், ரோகியாயினும், பரலோக ஸுகத்தில் விருப்பமுடையவளாய், பதிவ்ரதை பர்த்தாவையே பூஜிக்க வேண்டும்.

भर्ता हि परमं भाग्यं सुगुणो दुर्गुणोपि वा ।
यस्य जीवितमात्रेण भाति नारी सुमङ्गला ॥ ५ ॥

5. எவன் உயிரோடு இருப்பதால் ஒருவள் ஸுமங்கலியாக வாழ முடிகிறதோ, அந்த பர்த்தாவே நற்குணமுடையவனுயினும், துர்க்குணமுடையவனுயினும் பெண்களுக்குச் சிறந்த பாக்யம்.

महात्मा रामकृष्णस्तु लब्ध्वा श्रीकृष्णदर्शनम् ।
प्रेमभक्तिरसोन्मत्तो बभौ लोकविलक्षणः ॥ ६ ॥

6. மஹாத்மாவான ராமக்ருஷ்ணரோ ஸ்ரீக்ருஷ்ண தர்சனம் பெற்று ப்ரேமபக்தி ரஸத்திஞல் பித்தனுய் உலகத்தைவிட்டு வேறுபட்டவராய் விளங்கினுர்.

क्वचिन्नृत्यति सानन्दं क्वचिद्रोदिति सुस्वरम् ।
क्वचिद्धावति सर्वत्र क्वचिद्विलुठति क्षितौ ॥ ७ ॥

7. ஆனந்தமாக ஒருகால் ஆடுவார்; ஒருகால் இனிய குரலில் அழுவார்; ஒருகால் எங்கும் ஓடுவார்; ஒருகால் பூமியில் புரளுவார்;

कृष्ण गोविन्द गोपाल माधवेति च कीर्तयन् ।
भक्तानाश्लिष्यति प्रेम्णा परमानन्दपूरितः ॥ ८ ॥

8. க்ருஷ்ண, கோவிந்த, கோபால, மாதவ என்று கீர்த்தனம் செய்துகொண்டு பேரானந்த மடைந்தவராய், ப்ரேமையுடன் பக்தர்களைக் கட்டிக் கொள்வார்.

अग्रे पश्यामि गौराङ्गं नित्यानन्दसमन्वितम् ।
उभौ तौ भ्रातरौ प्रेम्णा मामत्राप्युपगच्छतः ॥ ९ ॥
इत्येवं प्रलपन्नुच्चैर्गङ्गातीरमुपागतः ।
नृत्यन् गायति सानन्दं राधेकृष्णेति सन्ततम् ॥ १० ॥

9-10. "நித்யானந்தருடன் கூடிய கௌராங்கரை எதிரில் பார்க்கிறேன். அந்த இரு சகோதரர்களும் ப்ரேமையுடன் இங்கு என்னிடம் வருகிறார்கள்" என்று உயர்ந்த குரலில் புலம்பிக்கொண்டே கங்கைக்கரையை அடைந்து, நர்த்தனம் ஆடிக் கொண்டு ஓயாமல் 'ராதேக்ருஷ்ண' என்று ஆனந்தமாகப் பாடுவார்.

तं मेनिरे जनाः सर्वे रामकृष्णं जगद्गुरुम् ।
तत्प्रभावमविज्ञाय पित्तोन्मादसमन्वितम् ॥ ११ ॥

11. அவர் மஹிமையை அறியாது மக்கள் யாவரும் ஜகத்குருவான ராமக்ருஷ்ணரைப் பித்தனாகவே கருதினர்.

शरीरसेवां सन्त्यज्य मलिनो जटिलः कृशः।
चचार गङ्गाकान्तारेऽन्नपानविवर्जितः ॥ १२ ॥

12. உடலை கவனிப்பதைவிட்டு, அழுக்குப் படிந்தவராய் ஜடை தரித்தவராய், அன்னபான மில்லாமல் இளைத்தவராய், கங்கைக்கரைக் காட்டில் அலைந்தார்.

परिचर्यां तस्य कर्तुं तत्र कोपि न विद्यते।
तस्माच्चचार योगीन्द्रो जडोन्मत्तपिशाचवत् ॥ १३ ॥

13. அவருக்குத் தொண்டுசெய்ய யாருமில்லை. எனவே யோகீச்வரரான அவர் மூடனைப்போலும், பித்தனைப்போலும் பிசாசைப்போலும் அலைந்தார்.

श्रीमती शारदादेवी तस्य पत्नी पतिव्रता।
स्वकीये पितृगेहे तु जयरामपुरेऽवसत् ॥ १४ ॥

14. அவருடைய மனைவியும், கற்புக்கரசியுமான ஸ்ரீமதி சாரதாதேவி, ஜயராம்பாடியில் தனது பிறந்தகத்தில் வஸித்து வந்தார்.

परिणीताऽतिबाल्ये सा रामकृष्णेन धीमता।
अद्यैव यौवनं प्राप्ता जगन्माता तु शारदा ॥ १५ ॥

15. ஜகன் மாதாவான சாரதாவோ, ஞானியான ராமக்ருஷ்ணரால் பிள்ளை பிராயத்திலேயே மணம் செய்து கொள்ளப்பட்டவளாய் இப்பொழுது தான் யௌவனம் அடைந்திருந்தாள்.

प्राणान् दधार नित्यं सा भर्तृदर्शनकाङ्क्षया ।
अवरुद्धा बन्धुभिश्च शारदा न्यवसद्गृहे ॥ १६ ॥

16. சாரதாதேவி தினமும் கணவனைக்காணும் ஆசையால் உயிர்வைத்துக் கொண்டிருந்தாள். ஆயினும் பந்துக்களால் தடுக்கப்பட்டு வீட்டிலேயே வஸித்து வந்தாள்.

एवं प्रेमरसोन्मत्तं श्रुत्वा भर्तारमुत्तमम् ।
स्वयं ससंभ्रमं देवी रामकृष्णमुपाययौ ॥ १७ ॥

17. இவ்வாறு, உத்தமனான கணவன், பக்தி ரஸத்தினால் பித்தனாகி விட்டாரென்று கேள்விப்பட்டு, சாரதாதேவி பரபரப்புடன் தானே ராமக்ருஷ்ணரிடம் வந்தாள்.

यथाकथञ्चित्सा देवी प्रस्थिता पादयात्रया ।
दक्षिणेशपुरञ्चागात्पतिदर्शनकौतुकात् ॥ १८ ॥

18. அந்ததேவி கணவனைக்காணும் ஆர்வத்தினால் எப்படியோ சிரமப்பட்டு கால்நடையாகவே புறப்பட்டு தக்ஷிணேச்வரம் வந்தாள்.

तत्र सा वटवृक्षस्य समीपे शान्तविग्रहम् ।
ध्यानमीलितनेत्राञ्जमासीनञ्च सुखासने ॥ १९ ॥
कोटिसूर्यप्रकाशञ्च जटिलं मलिनं कृशम् ।
संसारतारकं देवं सर्वलोकेश्वरेश्वरम् ॥ २० ॥
साक्षाद्गदाधरञ्चाद्य लीलया नररूपिणम् ।
धर्मं पारमहंस्यञ्च पालयन्तं जगद्गुरुम् ॥ २१ ॥

सर्वसद्गुणसंयुक्तं कृष्णप्रेमस्वरूपिणम् ।
ज्ञानिनामग्रगण्यञ्च भर्तारं सन्ददर्श ह ॥ २२ ॥

19-22. அங்கு அவள் ஆலமரத்தடியில் ஸுகாஸனத்தில் அமர்ந்திருப்பவரும், சாந்தமான வடிவுடையவரும், த்யானத்திளுல் மூடிய தாமரைக்கண்களையுடையவரும், கோடி சூர்யனைப்போல் பிரகாசிப்பவரும், ஜடையணிந்தவரும், புழுதிபடிந்த மேனியுடையவரும், இளைத்தவரும், எல்லா உலகங்களுக்கும் சிறந்த தலைவரும், ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகின்ற தெய்வமும், விளையாட்டாக மனித வடிவம் தாங்கிய பிரத்யக்ஷமான நாராயணனும், பரமஹம்ஸர்களுக்கு உசிதமான தர்மத்தை பரிபாலிப்பவரும், ஜகத்குருவும், எல்லா நற்குணங்களும் நிரம்பியவரும், க்ருஷ்ணப்ரேமையே வடிவானவரும், ஞானிகளில் முதல்வருமான கணவனைக் கண்டாள்.

भर्तारञ्चात्मनश्चैवं भर्तारं जगतामपि ।
विलोक्य विस्मिता तत्र तस्थौ बद्धाञ्जलिर्मुदा ॥ २३ ॥

23. தனக்கும், உலகத்திற்கும் பர்த்தாவான ராமக்ருஷ்ணரை இந்த நிலைமையில் கண்டு ஆச்சர்யமும், ஆனந்தமும் அடைந்து, கைகுவித்து நின்ருள்.

दृष्ट्वा परमहंसं सा बाष्पपूरितलोचना ।
मम भर्ताऽयमेवेति चिन्तयन्ती स्म तिष्ठति ॥ २४ ॥

24. பரமஹம்ஸரைக் கண்டு அவள் கண்ணீர் வடித்து "என் கணவன் இவர்தான்" என்று சிந்தித்தவாறு நின்ருள்.

तदा तत्रैव तिष्ठन्तीं प्रतिमामिव तां प्रियाम् ।
विलोक्य रामकृष्णोपि कृपयाऽन्तिकमागमत् ॥ २५ ॥

25. அப்பொழுது அங்கு பதுமைபோல் நிற்கும் மனைவியான சாரதா தேவியைக்கண்டு ராமக்ருஷ்ண ரும் கருணையுடன் ஸமீபத்தில் வந்தார்.

निपत्य चरणोपान्ते रुदतीं शारदां प्रभुः ।
सान्त्वयामास सरसं सहसा करुणानिधिः ॥ २६ ॥

26. திருவடிகளில் விழுந்து அழும் சாரதா தேவியைக் கருணைக்கடலான ப்ரபு உடனே ஸரஸ மாய் ஸமாதானம் செய்தார்.

श्रीपरमहंस उवाच

स्वागतं ते जगन्मातर्दुःखं मा स्म गमः प्रिये ।
त्वदधीनमिदं सर्वमहञ्च त्वद्वशोऽस्मि च ॥ २७ ॥

ஸ்ரீ பரமஹம்ஸர்

27. ஜகன்மாதாவே! உனக்கு நல்வரவு. ப்ரிய மானவளே! துன்பப்படாதே. இது யாவும் உனக்கு ஸொந்தமானது. நானும் உனக்கு வசமானவன்.

धर्मं पारमहंस्यं मे दृष्ट्वा चिन्ताञ्च मा कुरु ।
यथेच्छसि तथाहञ्च भवामि जगदीश्वरि ॥ २८ ॥

28. எனது பரமஹம்ஸ தர்மத்தைக்கண்டு கவலைப்படாதே. ஜகதீச்வரி! நீ எப்படி விரும்பு வாயோ நான் அப்படி ஆவேன்.

जगदम्बास्वरूपेण पश्यामि स्त्रीजनं त्वहम् ।
तथा त्वामपि पश्यामि तस्मात्पूज्यासि मे ननु ॥२९॥

29. நான் எல்லாப் பெண்களையும் ஜகன்மாதா வின் வடிவில் காண்கிறேன். அவ்வாறே உன்னையும் பார்க்கிறேன். எனவே எனக்கு நீ பூஜிக்கத்தக்கவள்."

श्रीशारदादेव्युवाच

भगवन् करुणामूर्ते त्वत्कृपापात्रमस्म्यहम् ।
अहो भाग्यमहो भाग्यं तव दास्येन मे प्रभो ॥ ३० ॥

ஸ்ரீ சாரததேவி

30. "பகவானே! கருணாமூர்த்தியே! நான் உமது கருணைக்குப் பாத்திரமாயுள்ளேன். என் ப்ரபுவே! உமது கைங்கர்யத்தினால் எனது பாக்யம் வியக்கத்தக்கது. எனது பாக்கியமே பாக்யம்.

नाहमिच्छामि लोकेस्मिन् तुच्छं शारीरिकं सुखम् ।
तव कैङ्कर्यमिच्छामि सत्यं सत्यं वदाम्यहम् ॥ ३१ ॥

31. இவ்வுலகில் துச்சமான சிற்றின்பத்தை நான் விரும்பவில்லை. உமது கைங்கர்யத்தையே விரும்புகிறேன். மும்முறை ஸத்யமாய்ச் சொல்கிறேன்.

भक्तां पतिव्रतां दीनामनन्यशरणां प्रभो ।
मा निराकुरु दासीं मां माहात्म्यं तव वेद्म्यहम् ॥ ३२ ॥

32. ப்ரபுவே! உமது மஹிமையை நான் அறிவேன். பக்தி உள்ளவளும், பதிவ்ரதையும், ஏழையும், கதியற்றவளும், தாஸியுமான என்னை தள்ளக் கூடாது."

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वा शारदादेवी रामकृष्णपदाब्जयोः ।
निपत्य दण्डवद्भक्त्या प्ररुरोद च सुस्वरम् ॥ ३३ ॥

33. இவ்வாறு சொல்லி சாரதாதேவி ராமக்ருஷ்ணரின் தாமரைபோன்ற திருவடிகளில் தண்டம் போல் விழுந்து பக்தியுடன் இனிய குரலில் அழுதாள்.

तदा परमहंसोपि तस्याः शिरसि सादरम् ।
निधायाभयहस्तञ्च सान्त्वयामास च प्रभुः ॥ ३४ ॥

34. அப்பொழுது ப்ரபுவான பரமஹம்ஸரும் அவளுடைய சிரஸில் அன்புடன் அபயஹஸ்தத்தை வைத்து ஸமாதானம் செய்தார்.

तदाप्रभृति सा देवी तत्रैव निवसन्त्यपि ।
चकार पत्युः कैङ्कर्यं जितकामा जितेन्द्रिया ॥ ३५ ॥

35. அப்பொழுது முதல் சாரதாதேவி அங்கேயே வஸித்துக்கொண்டு, புலன்களை அடக்கி காமத்தை வென்றவளாய், கணவனுக்குத் தொண்டு செய்து வந்தாள்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीशारदादेविचरितं नाम
सप्तमोऽध्यायः ॥ ७ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது
பாகத்தில் சாரதாதேவி சரித்திரத்தில்
ஏழாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथ अष्टमोऽध्यायः ॥

எட்டாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

दुःखं तु सर्वसामान्यं दृष्ट्वा जगति संभृतम् ।
अधीराः संशयं सद्यः प्राप्नुवन्ति महेश्वरे ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. உலகில் எங்கும் ஸமமாய் நிரம்பிய துக்கத்தைக்கண்டு தைரியமில்லாதவர்கள் உடனே ஈச்வரனிடம் ஸந்தேக மடைகின்றனர்.

केचित्कर्म स्वभावञ्च केचित्कालमणूंस्तथा ।
जगतः कारणं प्राहुस्तत्तद्बुद्धिबलेन वै ॥ २ ॥

2. சிலர் கர்மாவையும், சிலர் இயற்கையையும், சிலர் காலத்தையும், சிலர் அணுக்களையும், அவரவர் அறிவுக்குத்தக்கபடி உலகிற்குக் காரணமாகச் சொல்லுகின்றனர்.

धीरा एव महात्मानः कवीनां कविमीश्वरम् ।
यथातथैव जानन्ति दृढविश्वाससंयुताः ॥ ३ ॥

3. திடநம்பிக்கையுடைய தைரியசாலிகளான பெரியோர்களே அறிவாளிக்கும் அறிவாளியான ஈச்வரனை உள்ளது உள்ளபடி அறிகின்றனர்.

अदृष्टविषयज्ञाने प्रमाणं शास्त्रमेव हि ।
परोक्षवादं शास्त्रं तु तस्मान्मुह्यन्ति सूरयः ॥ ४ ॥

4. தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கு, சாஸ்திரமே ப்ரமாணம். அந்த சாஸ்திரமோ மறைமுகமாய்ப் பேசுகிறது. ஆகையால் பண்டிதர்கள் கூட மயங்குகின்றனர்.

अपरोक्षज्ञानिनस्तु कृपयैव कथञ्चन ।
साक्षात्कर्तुं परं ब्रह्म शक्नुयाद्भाग्यवान् क्वचित् ॥ ५ ॥

5. அபரோக்ஷ ஞானியின் கருணையாலேயே சிரமப்பட்டு எங்கேயோ ஒரு பாக்யவான் பரம் பொருளை நேரில் காணமுடியும்.

नरेन्द्र इति विख्यातः कश्चिदासीन्महामतिः ।
विचारशीलो धीरश्च सर्वविद्याविशारदः ॥ ६ ॥
युवा च सुन्दरः श्रीमान् वाग्मी सच्चरितव्रतः ।
परोपकारी गम्भीरः सत्यसन्धो जितेन्द्रियः ॥ ७ ॥

6-7. சிறந்த புத்திமானும், பகுத்தறிவாளியும், தீரனும், ஸகல கலைகளிலும் வல்லவனும், யௌவனமடைந்தவனும், அழகுடையவனும், ஸ்ரீமானும், பேச்சாளியும், நன்னடத்தையுடையவனும் பரோபகாரியும், கம்பீரமானவனும், ஸத்யஸந்தனும், புலனடக்கமுடையவனுமாகிய நரேந்த்ரன் என்கிற ஒருவர் இருந்தார்.

भगवद्दर्शनं कर्तुं हृदये तस्य निर्मले ।
बभूव महती काङ्क्षा धीराणामुचिता परा ॥ ८ ॥

8. அவரது தூய உள்ளத்தில், தீரர்களுக்கு உசிதமான, பகவானைக் காண வேண்டுமென்கிற சாலச்சிறந்த ஆர்வம் உண்டாயிற்று.

आस्तिकानां मूढबुद्धिं कापट्यं भक्तमानिनाम् ।
अत्याचारं कर्मठानां शुष्कवादञ्च शास्त्रिणाम् ॥ ९ ॥
विलोक्य नितरां खिन्नो भगवद्दर्शनातुरः ।
नैवाप शान्तिं लोकेस्मिन् येनकेनापि वर्त्मना ॥ १० ॥

9-10. ஆஸ்திகர்களுடைய மூடபுத்தியையும், பக்தவேஷம் அணிந்தவர்களின் கபடத்தையும், கர்மடர்களின் வெளிவேஷத்தையும், சாஸ்திரிகளின் வரட்டுவாதத்தையும் கண்டு மிகவும் மனம் கலங்கி, பகவானின் தரிசனம் பெருமல் துடிக்கின்றவராய், இவ்வுலகில் எந்த வழியிலும் நிம்மதி யடையாமலும் இருந்தார்.

अनवाप्य गुरुं श्रेष्ठं त्वपरोक्षज्ञानिनं क्वचित् ।
वञ्चितो बहुधा लोके साधुवेषधरैरभूत् ॥ ११ ॥

11. அபரோக்ஷ ஞானியான சிறந்த குருவை ஓரிடத்திலும் காணுமல் உலகில் ஸாது வேஷம் தரிக்கும் பலரால் பலவிதமாய் ஏமாற்றப்பட்டவராய் ஆனுர்.

तस्मात्सनातने धर्मे प्राप्योपेक्षां महामतिः ।
पाश्चात्यमतविभ्रान्तस्तच्छास्त्राणि पपाठ च ॥ १२ ॥

12. எனவே, மஹாபுத்திமானுன அவர் ஹிந்து மதத்தில் வெறுப்படைந்து, கிறிஸ்தவ மதத்தில் மயங்கி, அந்தமத நூல்களையும் படித்தார்.

तत्रापि शान्तिं परमामनवाप्य कुमारकः ।
प्राप ब्रह्मसमाजञ्च ब्रह्मदर्शनकांक्षया ॥ १३ ॥

13. சிறுவனான அவர், அந்த மதத்திலும் நிம் மதி யடையாமல் ப்ரம்மத்தை நேரில் காணும் ஆசை யால் ப்ரம்ம ஸமாஜத்தில் சேர்ந்தார்.

तत्र ब्रह्मसमाजेपि विवादं तु विवेकिनाम् ।
उद्योगं निष्फलञ्चापि दृष्ट्वा दुःखमवाप सः ॥ १४ ॥

14. அந்த ப்ரும்ம ஸமாஜத்திலும் அறிவாளி களின் வீண் வாதத்தையும் முயற்சி பயனற்றுப் போவதையும் கண்டு துக்கமடைந்தார்.

एवं सर्वमतानाञ्च सत्यं द्रष्टुमियेष सः ।
जनानां मूढविश्वासं दृष्ट्वोपेक्षां चकार च ॥ १५ ॥

15. இவ்வாறு எல்லா மதங்களுடையவும் உண் மையை அவர் காண விரும்பினார். மக்களுடைய மூட நம்பிக்கையைக் கண்டு வெறுத்தார்.

अप्राप्य सद्गुरुं श्रेष्ठमास्तिक्ये कृतहेलनः ।
बभूव नास्तिकप्रायो नरेन्द्रो बुद्धिमानपि ॥ १६ ॥

16. சிறந்த ஸத்குருவை அடையாமல் நரேந்த் ரன் புத்திமானாயினும் கடவுள் நம்பிக்கையை ஹேள னம் செய்பவராய் நாஸ்திகன்போல் ஆகிவிட்டார்.

तथापि तस्य चित्तेपि निर्मले तु स्वभावतः ।
भगवद्दर्शनालाभाद्ववृधे दुःखमुत्तमम् ॥ १७ ॥

17. ஆயினும் இயற்கையாகவே நிர்மலமான அவரது உள்ளத்தில் பகவானைக் காணாததினால் உண் டாகிய சிறந்த வருத்தம் வளர்ந்தது.

रामकृष्णस्य माहात्म्यं श्रुत्वा सन्दिग्धमानसः ।
नितरां दुःखितः प्राप दक्षिणेशपुरञ्च सः ॥ १८ ॥

18. அவர் ராமக்ருஷ்ணரின் மகிமையைக் கேட்டு ஸந்தேஹ மடைந்தவராய் மிகவும் துக்கத்துடன் தக்ஷிணேச்வரம் வந்தார்.

तत्र गङ्गातटे रम्ये शाद्वलश्यामलस्थले ।
वटवृक्षस्य मूले तु निषण्णं मृदुलासने ॥ १९ ॥
रामकृष्णं महात्मानं दर्शनानन्दवर्धनम् ।
तेजस्विनं महाशान्तं नरेन्द्रः सन्ददर्श च ॥ २० ॥

19- 20. அங்கு ரம்யமான கங்கைக்கரையில் புல்வெளியில் ஆலமரத்தின் நிழலில் மிருதுவான ஆஸனத்தில் அமர்ந்திருப்பவரும் பார்த்த அளவில் ஆனந்தத்தை வளர்ப்பவரும், மிகவும் சாந்தமானவரும், தேஜஸ்வியும், மஹாத்மாவுமான ராமக்ருஷ்ணரை நரேந்த்ரன் தர்சனம் செய்தார்.

तस्य दर्शनमात्रेण तस्मिन् विश्वासमुत्तमम् ।
संप्राप्य परमानन्दमुग्धोऽभूद्गतसंशयः ॥ २१ ॥

21. அவரைக்கண்டதுமே அவரிடம் திடநம்பிக்கை யடைந்து, ஸந்தேகம் நீங்கப்பெற்றவராய் பரமானந்தத்தில் திளைத்தவரானார்.

नरेन्द्रं प्राञ्जलिं तत्र प्रणम्य च पुरः स्थितम् ।
विलोक्य रामकृष्णश्च पप्रच्छ प्रेमपूर्वकम् ॥ २२ ॥

22. அங்கு வணங்கி கைகூப்பி, எதிரில் நிற்கும் நரேந்த்ரனைப்பார்த்து ராமக்ருஷ்ணர் ப்ரேமையுடன் கேட்டார்.

श्रीरामकृष्ण उवाच

स्वागतं ते महाभाग गङ्गातीरे दिने दिने ।
प्रतीक्षमाणस्त्वामेव निषण्णोऽस्मि महामते ॥ २३ ॥

ஸ்ரீ ராமக்ருஷ்ணர்

23. "மஹாபாக்யவானே! உனக்கு நல்வரவு, மஹாபுத்திமானே! கங்கைக்கரையில் தினந்தோறும் உன்னையே எதிர்பார்த்து அமர்ந்திருக்கிறேன்.

तथापि त्वं मामुपेक्ष्य वृथा भ्रमसि भूतले ।
मरुभूमौ पर्यटनात्किं जलं प्राप्यते नरैः ॥ २४ ॥

24. ஆயினும் நீயோ என்னை விட்டுவிட்டு வீணுக பூதலத்தில் அலைகிறாய். பாலைவனத்தில் அலைவதால் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்குமா?"

श्रीसद्गुरुरुवाच

इत्येवं रामकृष्णस्य श्रुत्वा सुमधुरं वचः ।
नरेन्द्रो विस्मयं प्राप्य तदा वचनमब्रवीत् ॥ २५ ॥

ஸ்ரீ ஸத்குரு

25. இவ்வாறு ராமக்ருஷ்ணரின் மதுரமான வசனத்தைக்கேட்டு, நரேந்த்ரன் ஆச்சர்யமடைந்து அப்பொழுது சொன்னார்.

नरेन्द्र उवाच

भगवन् मां विलोक्याद्य दृष्टपूर्वं यथा नरम् ।
करोषि कुशलप्रश्नं प्रेमभावञ्च मय्यहो ॥ २६ ॥

நரேந்த்ரன்

26. "பகவானே! இப்பொழுதே என்னைக்கண்டு வெகுநாள் பழகிய மனிதனைப்போல் என்னிடம் அன்புகாட்டி விசாரிக்கின்றீர். ஆச்சர்யம்!

अहं करोमि ते स्वामिन्नद्य प्रथमदर्शनम् ।
तथापि वर्धते स्नेहस्तत्र कारणमुच्यताम् ॥ २७ ॥

27. ஸ்வாமி! இப்பொழுதுதான் உம்முடைய முதல் தர்சனம் செய்கிறேன். ஆயினும் ப்ரேமை வளர்கிறது. இதற்குக் காரணம் என்ன சொல்ல வேண்டும்."

श्रीरामकृष्ण उवाच

आवयोः सङ्गमो बाल नित्य एव न संशयः ।
भेदबुद्धिं परित्यज्य पश्यतां किं न रोचते ॥ २८ ॥

ஸ்ரீ ராமக்ருஷ்ணர்

28. "குழந்தாய்! நமது உறவு நித்யமானது. ஸந்தேகமில்லை. பேத புத்தியை விட்டு பார்ப்பவர் களுக்கு எதுதான் புரியாது!

भगवद्दर्शनं कर्तुं काङ्क्षया जातमुत्तमम् ।
तापं तवापि जानामि तस्माद्बन्धुर्भवान् मम ॥ २९ ॥

29. பகவானை தரிசனம் செய்யும் ஆசையால் உண்டான சிறந்த உனது தாபத்தையும் அறிவேன். ஆகையால் நீ என்னுடைய பந்து.

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वा रामकृष्णस्तु निर्व्याजकृपया तदा ।
तस्यैव शिरसि प्रेम्णा हस्तदीक्षां चकार च ॥ ३० ॥

30. இவ்வாறு சொல்லி ராமக்ருஷ்ணர் காரண மற்ற கருணையால் அப்பொழுதே அவருடைய சிர ஸில் ப்ரேமையுடன் அபய ஹஸ்தத்தை வைத்தார்.

प्रददौ राममन्त्रं च तस्य कर्णे जगद्गुरुः ।
यन्नित्यं वायुपुत्रेण शिवेनापि च जप्यते ॥ ३१ ॥

31. ஜகத்குருவான ராமக்ருஷ்ணர் எதை தின மும் ஹனுமானும், சிவபெருமானும் ஜபிக்கிறார் களோ அந்த ராம மந்த்ரத்தை அவருடைய காதில் உபதேசித்தார்.

सद्य एव नरेन्द्रोपि समाधिस्थितिमाप च ।
ददर्श परमानन्दं ब्रह्मज्योतिः सनातनम् ॥ ३२ ॥

32. உடனேயே நரேந்த்ரனும் ஸமாதி நிலையை யும் அடைந்தார். பரமானந்தமான, ஸனாதனமான பரஞ்சோதியை தர்சித்தார்.

एवं गुरुकटाक्षेण परिपूर्णोऽभवन्महान् ।
सर्वेपि संशयाः सद्यो नाशं प्रापुः स्वयं तदा ॥ ३३ ॥

33. இவ்வாறு நரேந்த்ரன் குரு கடாக்ஷத்தினால் பூர்ணனாக ஆனார். அப்பொழுது அவரது எல்லா ஸந்தேஹங்களும் உடனேயே தானாகவே அழிந்து விட்டன.

तस्माद्भगवतो यस्य दिदृक्षा हृदि वर्तते ।
सर्वसङ्गं परित्यज्य सद्गुरुं शरणं भजेत् ॥ ३४ ॥

34. ஆகையால் யாருடைய உள்ளத்தில் பக வானைக்காணும் ஆசை உள்ளதோ அவன் எல்லா ஸங்கத்தையும் விட்டு ஸத்குருவை சரணமடைய வேண்டும்.

इति श्रीकृष्णप्रेमि प्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीनरेन्द्रचरितं नाम
अष्टमोऽध्यायः ॥ ८ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையில் பத்தாவது
பாகத்தில் ராமகிருஷ்ணரது சரிதத்தில்
எட்டாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथ नवमोऽध्यायः ॥

ஒன்பதாவது அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

अस्य भारतदेशस्य माहात्म्यं परमाद्भुतम् ।
यः स्मरेत्प्रातरुत्थाय स हि धन्यः स पावनः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. எவனொருவன் காலையில் எழுந்திருந்து அதி அத்புதமான இந்த பாரத நாட்டின் மஹிமையை நினைப்பானோ அவன் பாக்யவான். அவனே புண்யவான்.

नानाविधानि कर्माणि कृत्वास्मिन् भारते नराः ।
परलोकान् प्राप्नुवन्ति कर्मभूमिरियं स्मृता ॥ २ ॥

2. இந்த பாரத நாட்டில் மக்கள் பல கர்மங்களைச் செய்து பரலோகங்களை அடைகின்றனர். எனவே இது கர்ம பூமி எனப்படும்.

इयं भारतभूमिस्तु साक्षात्सुरभिरेव हि ।
यां दुदोह महाराजः पृथुः पुण्यवतां वरः ॥ ३ ॥

3. புண்யவான்களில் சிறந்த ப்ருது மஹாராஜன் எந்த பூமியைக் கறந்தாரோ அத்தகைய இந்த பாரத பூமி ப்ரத்யக்ஷமான காமதேனுவே தான்.

गङ्गा च यमुना चैव नर्मदा च सरस्वती ।
गोदावरी च कावेरी ह्यस्मिन्नेवास्ति भारते ॥ ४ ॥

4. கங்கை, யமுனை, நர்மதை, ஸரஸ்வதி, கோதாவரி, காவேரி இந்த புண்ய நதிகள் இந்த பாரத நாட்டில் தான் இருக்கின்றன.

हिमवानपि कैलासो गोवर्धनगिरिस्तथा ।
विन्ध्याचलो वेङ्कटश्च ह्यस्मिन्नेवास्ति भारते ॥ ५ ॥

5. இமயமலை, கைலாஸம், கோவர்த்தனம், விந்தியமலை, திருவேங்கடம் முதலிய புண்ணிய மலைகள் இந்த பாரத நாட்டில்தானிருக்கின்றன.

एवञ्च नैमिशारण्यं दण्डकारण्यमेव च ।
वृन्दारण्यं महारण्यमस्मिन्नेवास्ति भारते ॥ ६ ॥

6. நைமிசாரண்யம், தண்டகாரண்யம், ப்ருந்தாவனம், முதலிய மஹாவனங்கள் இந்த பாரத நாட்டில்தானிருக்கின்றன.

अयोध्या मथुरा माया काशी द्वारवती च सा ।
श्रीरङ्गञ्च तथा काञ्ची ह्यस्मिन्नेवास्ति भारते ॥ ७ ॥

7. அயோத்தி, மதுரை, மாயா, காசி, த்வாரகை, ஸ்ரீரங்கம், காஞ்சி முதலிய புண்ய நகரங்கள் இந்த பாரத நாட்டில் தானிருக்கின்றன.

बहूनाञ्च महर्षीणां भूदेवानां तपस्विनाम् ।
पुण्याश्रमाश्च सन्त्यत्र पुण्ये भारतमण्डले ॥ ८ ॥

8. பூமியில் காணப்படும் தெய்வங்களும், தவசிகளுமான, பல முனிவர்களின் புண்யமான ஆச்ரமங்கள் இந்தப் புண்ணியமான பாரத நாட்டிலேயே இருக்கின்றன.

मनुर्ययातिर्मान्धाता भरतश्च पुरूरवाः ।
अन्ये राजर्षयश्चापि भारतेस्मिन् विरेजिरे ॥ ९ ॥

9. மனு, யயாதி, மாந்தாதா, பரதன், புரூரவன் முதலிய மற்றும் பல ராஜ ரிஷிகள் இந்த பாரத நாட்டில் தான் பிரகாசித்தனர்.

विश्वामित्रो वसिष्ठश्च गौतमः काश्यपो भृगुः ।
अन्ये ब्रह्मर्षयोऽप्यत्र तपश्चक्रुर्हि भारते ॥ १० ॥

10. விச்வாமித்திரர், வஸிஷ்டர், கௌதமர், காச்யபர், ப்ருகு முதலிய மற்றும் பல முனிவர்கள் இந்த பாரத நாட்டில் தான் தவம் செய்தனர்.

वेदं रामायणञ्चैव महाभारतमेव च ।
श्रीमद्भागवतञ्चापि पठन्त्यत्रैव भारते ॥ ११ ॥

11. வேதம், ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் இவைகளை இந்த பாரத நாட்டில் தான் படிக்கின்றனர்.

अरुन्धत्यनसूयापि कौसल्या जानकी तथा ।
एवं पतिव्रतानार्यः सञ्जाता भारते किल ॥ १२ ॥

12. அருந்ததி, அனுஸூயை, கௌஸல்யை, ஜானகி முதலிய கற்புக்கரசிகள் தோன்றியது இந்த பாரத நாட்டில் தான்.

राघवः केशवश्चापि व्यासश्च कपिलस्तथा ।
अवताराः ह्यसंख्येया जायन्ते भारते किल ॥ १३ ॥

13. ராமன், கண்ணன், வ்யாஸர், கபிலர் முதலிய கணக்கற்ற அவதார புருஷர்கள் தோன்றியது பாரத நாட்டில் அல்லவா ?

वरदो रङ्गनाथश्च वेङ्कटेशश्च विट्ठलः ।
अर्चावतारा बहवः क्रीडन्ति किल भारते ॥ १४ ॥

14. வரதராஜன், ரங்கநாதன், வேங்கடேசன், பாண்டுரங்கன் முதலிய பல அர்ச்சாவதாரங்கள் விளையாடுவதும் பாரத நாட்டில் அல்லவா ?

मध्वो रामानुजश्चापि निम्बार्कः शङ्करस्तथा ।
रामानन्दादयश्चापि ह्यवतीर्णास्तु भारते ॥ १५ ॥

15. மத்வர், இராமானுஜர், நிம்பார்க்கர், சங்கரர், ராமானந்தர் முதலியவர்கள் அவதரித்ததும் பாரத நாட்டிலே.

भगवान् कृष्णचैतन्यो वल्लभाचार्य एव च ।
ज्ञानेश्वरादयश्चापि ह्यवतीर्णास्तु भारते ॥ १६ ॥

16. பகவானுகிய க்ருஷ்ண சைதன்யர், வல்லபாசாரியர், ஞானேச்வரர் முதலியவர்கள் அவதரித்ததும் பாரத நாட்டிலே தான்.

अहिंसा सत्यमक्रोधं ब्रह्मचर्यं दयापि च ।
एवं बहुविधो धर्मो भारतेस्मिन् प्रकाशते ॥ १७ ॥

17. அஹிம்ஸை, ஸத்யம், ப்ரம்மசர்யம், தயை முதலிய மற்றும் பல தர்மங்கள் இந்த பாரத நாட்டில் பிரகாசிக்கின்றன.

हरे माधव गोविन्द राम कृष्णेति वैष्णवाः ।
कीर्तयन्ति रसोन्मत्तास्त्वस्मिन्नेव हि भारते ॥ १८ ॥

18. இந்தப் பாரத நாட்டில் தான் "ஹரே மாதவ, கோவிந்த, ராம, க்ருஷ்ண" என்று பக்தி ரஸத்தினுல் மயங்கிய வைஷ்ணவர்கள் பாடுகின்றனர்.

वैकुण्ठादपि कैलासात्पारमेष्ठ्यात्सुरालयात् ।
अयं भारतदेशस्तु सर्वथाप्यतिरिच्यते ॥ १९ ॥

19. வைகுண்டத்தைக் காட்டிலும், கைலாயத்தைக் காட்டிலும், ஸத்ய லோகத்தைக் காட்டிலும், தேவ லோகத்தைக் காட்டிலும் இந்த பாரத நாடு எல்லா விதத்திலும் சிறந்தது.

पुण्ये भारतदेशेस्मिन् जन्म वाञ्छन्ति देवताः ।
अत्रैव भगवान् विष्णुर्गीयते वैष्णवोत्तमैः ॥ २० ॥

20. இங்கு தான் வைஷ்ணவோத்தமர்களால் விஷ்ணு பகவான் பாடப்படுகிருரென்று தேவர்களும் புண்யமான இந்த பாரத நாட்டில் பிறக்க விரும்புகின்றனர்.

रक्षिते भारते देशे रक्षितं सकलं जगत् ।
विनष्टे भारते देशे विनष्टं सकलं जगत् ॥ २१ ॥

21. பாரத தேசம் ரக்ஷிக்கப்படுமானால் எல்லா உலகும் ரக்ஷிக்கப்படும். பாரத தேசம் அழியுமானால் எல்லா உலகும் அழிந்து விடும்.

धनं धान्यं गृहं पत्नीं पुत्रांश्च पितरौ तथा ।
प्राणांस्त्यक्त्वापि धैर्येण भारतं परिपालयेत् ॥ २२ ॥

22. தனம், தான்யம், மனைவி, மக்கள், தாய், தந்தை, வீடு, உயிர் யாவையும் தைரியத்துடன் தியாகம் செய்து பாரத நாட்டைக் காப்பாற்ற வேண்டும்.

आसीन्मोहनदासाख्यो महात्मा वैष्णवोत्तमः ।
अहिंसाधर्मनिरतः सत्यसन्धो महामतिः ॥ २३ ॥

23. அஹிம்ஸா தர்மத்தில் நிலை பெற்றவரும், ஸத்யஸந்தரும், சிறந்த புத்திமானும், வைஷ்ண வோத்தமருமான மோஹனதாஸ் என்கிற ஒரு மஹாத்மா இருந்தார்.

विलोक्य भारतं देशं परमं पावनं महान् ।
पाश्चात्यैर्यवनैश्चापि पीडितं दुःखितोऽभवत् ॥ २४ ॥

24. அந்த மஹான் மிகவும் தூயதான பாரத நாடு வெள்ளையர்களாலும், மஹம்மதியர்களாலும் பீடிக்கப் பட்டிருப்பதைக் கண்டு துக்கமடைந்தார்.

मातृभूमिमिमां पुण्यां रक्षितुं कृतनिश्चयः ।
चक्रे सत्याग्रहं धीरः सत्यसन्धो महामतिः ॥ २५ ॥

25. மஹாபுத்திமானும், ஸத்யஸந்தரும், தீரனுமான அவர் புண்யமான இந்த தாய் நாட்டை ரக்ஷிக்க உறுதி பூண்டு ஸத்யாக்ரஹம் செய்தார்.

अहिंसया च सत्येन त्यागेन क्षमया तथा ।
रञ्जयामास सकलं महात्मा भारतं जनम् ॥ २६ ॥

26. இந்த மஹாத்மா அஹிம்ஸையாலும், ஸத்யத்தாலும், த்யாகத்தாலும், பொறுமையாலும் பாரத நாட்டு எல்லா மக்களுடையவும் உள்ளங் கவர்ந்தார்.

अचिरेणैव कालेन सर्वमान्यो बभूव सः ।
महान् मोहनदासस्तु विरक्तो वैष्णवोत्तमः ॥ २७ ॥

27. விரக்தியுடையவரும், வைஷ்ணவோத்தமருமான மஹாத்மா மோஹனதாஸ் கொஞ்ச நாளில் யாவருக்கும் பூஜிக்கத் தக்கவராய் ஆனார்.

बन्दीकृतोपि पाश्चात्यैर्बहुधा हिंसितोपि च ।
सत्याग्रहं न तत्याज धीरचित्तस्तपोनिधिः ॥ २८ ॥

28. தபோநிதியும் தீர சித்தருமான அவர் வெள்ளையர்களால் சிறைப்படுத்தப்பட்டு துன்புறுத்தப் பட்டவராயினும் ஸத்யாக்ரஹத்தை விடவில்லை.

निरायुधकरेणैवं पाश्चात्यास्तु पराजिताः ।
भारतं तु परित्यज्य स्वदेशं प्रति दुद्रुवुः ॥ २९ ॥

29. நிராயுத பாணியான மோஹனதாஸரால் இவ்வாறு தோற்கடிக்கப்பட்ட வெள்ளையர்கள் பாரத நாட்டை விட்டு தன் தேசத்திற்குத் திரும்பி ஓடினார்கள்.

एवं भारतदेशं तु पाश्चात्यकबलीकृतम् ।
उद्धृत्य पालयामास महात्मा वैष्णवोत्तमः ॥ ३० ॥

30. வைஷ்ணவோத்தமரான மஹாத்மா வெள்ளையர்களால் விழுங்கப்பட்ட பாரதநாட்டை இவ்வாறு கைதூக்கிக் காப்பாற்றினர்.

पठेच्च भगवद्गीतां रामनाम जपेत्तथा ।
अहिंसकः सत्यनिष्ठः समदर्शी भवेन्नरः ॥ ३१ ॥
एवं भागवतं धर्मं स्थापयामास भारते ।
सर्वत्र सञ्चरन् धीरः कृपया वैष्णवोत्तमः ॥ ३२ ॥

31- 32. ஹிந்துவானவன் பகவத் கீதையைப் படிக்க வேண்டும்; ராம நாமம் ஜபிக்கவேண்டும்; அஹிம்ஸை, ஸத்யம், ஸமதர்மம் இவைகளைக்கடைபிடிக்கவேண்டும் என்ற பாகவத தர்மத்தை வைஷ்ணவோத்தமரும் தீரருமான அவர் பாரத நாடெங்கும் ஸஞ்சரித்து கருணையுடன் ஸ்தாபனம் செய்தார்.

वर्णाश्रमाभिमानेन जातं द्वेषं जने जने ।
शमयामास कृपया प्रवदन् समदर्शनम् ॥ ३३ ॥

33. வர்ணாச்ரமத்திலுள்ள தன்மதிப்பால் ஒவ்வொரு ஜனங்களிடமும் உண்டான த்வேஷத்தை கருணையோடு ஸமதர்மத்தை உபதேசித்து அடக்கினர்.

वर्णाश्रमकुलाचारे नास्य द्वेषस्तु विद्यते ।
अनार्जवं वैदिकेषु दूषयामास वैष्णवः ॥ ३४ ॥

34. வர்ணாச்ரம தர்மத்தில் இவருக்கு த்வேஷ மில்லை. ஆனால் வைஷ்ணவரான அவர் வைதிகர்களிடமுள்ள போலி ஆசாரத்தைக் கண்டித்தார்.

प्रेमभावस्य मुख्यत्वं लोके प्रकटयन् महान् ।
रामनाम स्मरन्नन्ते वैकुण्ठं प्राप वैष्णवः ॥ ३५ ॥

35. ஒருவருக்கொருவரிடையே ப்ரேமையே முக்கியமென்று ப்ரகடனம் செய்து, மஹாத்மாவும் வைஷ்ணவருமான அவர் அந்திம ஸமயத்திலும் 'ராம நாமத்தை' உச்சரித்துக்கொண்டே வைகுண்டமடைந்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे मोहनदासचरितं नाम
नवमोऽध्यायः ॥ ९ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
மோஹனதாஸர் சரிதம் என்னும் ஒன்பதாவது
அத்யாயம் முற்றும்.

॥ अथ दशमोऽध्यायः ॥

பத்தாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

आसीद्घूर्जरदेशे तु कश्चिद्योगी दृढव्रतः ।
बृहद्व्रतधरो धीरो विरक्तो विजितेन्द्रियः ॥ १ ॥

कैवल्यारामयोगीन्द्र इति विख्यातवैभवः ।
जटिलो दण्डपाणिश्च वल्कलाजिनवेष्टितः ॥ २ ॥
उपवासकृशः शान्तो दिव्यचक्षुः समन्वितः ।
आत्मदर्शी जितक्रोधस्तपस्वी तत्ववित्तमः ॥ ३ ॥

ஸ்ரீ ஸத்குரு

1- 3. கூர்ஜர தேசத்தில் திடமான வ்ரதம் உடையவரும், ப்ரம்மசர்யத்தைக் காப்பவரும், திரரும், விரக்தி உடையவரும், புலன்களை வென்றவரும், ஜடை, தண்டம், மரவுரி, மான்தோல், இவைகளை தரிப்பவரும், உபவாசத்தினுல் இளைத்தவரும், சாந்தமான ஸ்வபாவம் உடையவரும், ஞானத்ருஷ்டி உடையவரும், ஆத்மஞானியும், கோபத்தை வென்றவரும், தபஸ்வியும், தத்வம் அறிந்தவர்களில் சிறந்தவருமான கைவல்யாராமர் (கேவல்ராம்) என்று புகழ்பெற்ற ஒரு யோகி இருந்தார்.

नष्टं सनातनं धर्ममुद्धर्तुं कृतनिश्चयः ।
स महात्मा तपः कुर्वन् चचार जगतीतले ॥ ४ ॥

4. அந்த மஹாத்மா மறைந்துபோன ஸனுதன தர்மத்தை மறுபடியும் நிலைநாட்ட நிச்சயம் கொண்டு தவம் செய்பவராய் உலகில் ஸஞ்சரித்தார்.

कलिनैव समाक्रान्तं पापाचारपरायणम् ।
जगद्विलोक्य योगीन्द्रो न लेभे शान्तिमात्मवान् ॥ ५ ॥

5. ஆத்ம ஞானியான அந்தயோகி கலியினுல் ஆக்ரமிக்கப்பட்டதும், பாப நடத்தையே லக்ஷ்யமாகக் கொண்டதுமான உலகைக்கண்டு நிம்மதி அடையவில்லை.

धर्मोपदेशं लोकस्य कुर्वन् श्रान्तोऽभवन्मुनिः ।
भारतेस्मिन् कलिव्याप्ते धर्मं कोपि न पृच्छति ॥ ६ ॥

6. அந்த முனிவர் உலகிற்கு தர்மோபதேசம் செய்து களைத்துப் போனார். கலியினால் வ்யாபிக்கப் பட்ட இந்த பாரத நாட்டில் தர்மத்தை எவனும் கேழ்க்க வில்லை.

गोवर्धनगुहामाप चिन्ताशोकसमाकुलः ।
तत्र घोरं तपश्चक्रे जगन्मङ्गलहेतवे ॥ ७ ॥

7. கவலையும் துக்கமும் அடைந்து அவர், கோவர்த்தன மலையின் குகையை அடைந்தார். லோக க்ஷேமத்திற்காக அங்கு கோரமான தவம் செய்தார்.

अथाचिरेण कालेन सुप्रीतो भगवान् हरिः ।
पीताम्बरधरः श्रीमानाविरासीत्कृपानिधिः ॥ ८ ॥

कुटिलालकसंयुक्तः कोमलाधरपल्लवः ।
कर्णान्तदीर्घनयनः कपोलजितदर्पणः ॥ ९ ॥

कण्ठशोभितहारश्च कर्णलम्बितकुण्डलः ।
हरिचन्दनलिप्ताङ्गः कस्तूरीतिलकाञ्चितः ॥ १० ॥

कनकाम्बरधारी च कटिशोभितशृङ्खलः ।
कटिन्यस्तकरश्चैव कालाम्भोधरसन्निभः ॥ ११ ॥

कोटिमन्मथलावण्यः कूजत्कनकनूपुरः ।
वनमालाधरो देवो वेणुवादनतत्परः ॥ १२ ॥

सर्वलोकशरण्यश्च सर्वाभरणभूषितः ।

रासनाट्यरसोन्मत्तो राधिकारमणः प्रभुः ॥ १३ ॥

8-13. பிறகு கொஞ்சநாளில் ப்ரீதி அடைந்த பகவான் (பக்தகோலாஹலன்) பீதாம்பரதாரியாக வும், கருணை செய்பவனுகவும், சுருள் சுருளான கேச முடையவனுகவும், கொழுந்துபோல் அழகிய உதடு உடையவனுகவும், காதுவரை நீண்ட கண்கள் உடையவனுகவும், கண்ணுடி யொத்த கன்னம் உடையவனுகவும், கழுத்தில் சோபிக்கின்ற ஹாரம் உடையவனுகவும், காதுகளில் தொங்கும் குண்டலம் உடையவனுகவும், ஹரிசந்தனம் பூசிய திருமேனி உடையவனுகவும், கஸ்தூரி திலகம் அணிந்தவனுக வும், பொன்னுடையான உத்தரியம் அணிந்தவனுக வும், இடுப்பில் கிங்கிணி அணிந்தவனுகவும், இரு கை களையும் இடுப்பில் வைத்துக்கொண்டிருப்பவனுகவும், நீலமேக ச்யாமளனுகவும், கோடிமன்மத ஸௌந்தர னுகவும், ஒலிக்கின்ற தங்கச்சதங்கை அணிந்தவனுக வும்; வனமாலை அணிந்தவனுகவும், குழலூதுபவனுக வும், யாவருக்கும் அபயம் தருபவனுகவும், எல்லா ஆபரணங்களும் அணிந்தவனுகவும், ராதையுடன் கூடி ராஸ நாட்டியம் ஆடுபவனுகவும் ஆவிர்பவித் தான்.

तं विलोक्य घनश्यामं रसिकेन्द्रं श्रियः पतिम् ।

मूर्च्छामवाप योगीन्द्रो दर्शनानन्दविभ्रमात् ॥ १४ ॥

14. மேகம்போல் நீலவர்ணமானவனும் ரஸி கேந்த்ரனும், ராதாரமணனுமான அவனைக்கண்டு அந்த யோகி, தர்சனம் செய்த ஆனந்தத்தினுல் ப்ரமை பிடித்து மூர்ச்சையானுர்.

तमुत्थाप्य मुनिं कृष्णः कृपया ब्रह्मचारिणम् ।
अवोचन्मधुरं वाक्यमर्थवत्प्रेमपूर्वकम् ॥ १५ ॥

15. முனிவரும் ப்ரம்மசாரியுமான அவரைக் கண்ணன் கருணையுடன் தூக்கி ப்ரேமையுடன் அர்த்த புஷ்டியுள்ள மதுரமான வாக்யத்தைச் சொன்னான்.

भगवानुवाच

किं वृथा क्लिश्यसे तात घोरेण तपसा कलौ ।
दुःखाक्रान्तं जगत्पश्य कलिकल्मषपीडितम् ॥ १६ ॥

பகவான்

16. "அப்பா! கலியில் கோரமான தவம் செய்து வீணாக ஏன் க்லேசப்படுகிறாய்? கலியின் கல்மஷத்தினால் பீடிக்கப்பட்டு துக்கமடைந்திருக்கும் உலகைப் பார்.

कलिं नाशयितुं लोके तपसा नैव शक्नुयाः ।
मन्नियोगादयं लोकं सर्वत्र व्याप्य तिष्ठति ॥ १७ ॥

17. உலகில் கலியை அடக்குவதற்கு தவத்தினால் முடியாது. எனது அனுமதி பெற்றுதான் இந்தக் கலி உலகெங்கும் சூழ்ந்து நிற்கிறது.

कलेर्दोषनिधेर्ब्रह्मन्नस्ति ह्येको महान् गुणः ।
कीर्तनादेव मे सत्यं मुक्तदोषः परं व्रजेत् ॥ १८ ॥

18. பெரியவரே! தோஷங்களுக்கிருப்பிடமான இந்தக் கலியிலும் சிறந்த குணம் ஒன்று இருக்கிறது. என்னுடைய கீர்த்தனத்தாலேயே தோஷங்கள் நீங்கப் பெற்று முக்தி பெற முடியும். இது ஸத்யம்.

कुरु कारय लोकेऽस्मिन् नामसङ्कीर्तनं मम ।
तत्प्रभावेणैव सत्यं सर्वं दुःखं विनश्यति ॥ १९ ॥

19. இவ்வுலகில் என்னுடைய நாம ஸங்கீர்த்தனத்தை நீயும் செய்; பிறரையும் செய்விப்பாயாக. அதன் மஹிமையாலேயே துக்கம் யாவும் நாசமடையும், இது ஸத்யம்.

वर्तते फल्गुबुद्धिस्तु यावन्मन्नामकीर्तने ।
तावत्कलिकृतं दुःखं विविधं नैव नश्यति ॥ २० ॥

20. எனது நாம கீர்த்தனத்தில் எது வரை அலக்ஷிய புத்தி உள்ளதோ அதுவரை கலியினால் உண்டான பல துக்கங்கள் நீங்காது."

योगीन्द्र उवाच

स्वामिन् सर्वजगन्नाथ शरणागतवत्सल ।
मग्नमुद्धर गोविन्द भुवनं कलिकल्मषे ॥ २१ ॥

யோகிந்த்ரர்

21. "ஸ்வாமி! ஸர்வ ஜகன்னாத! சரணாகத வத்ஸல! கோவிந்த! கலியின் கல்மஷத்தில் மூழ்கிய உலகை உத்தாரணம் செய்வீராக.

अल्पायुषो नराः सर्वे पापानुष्ठानतत्पराः ।
अवजानन्ति कृष्ण त्वां नानादुःखभयाकुलाः ॥ २२ ॥

22. அல்பமான ஆயுள் உடையவர்களும், பாபங்களைச் செய்வதையே லக்ஷ்யமாகக் கொண்டவர்களும், பலவிதமான துக்கத்தினாலும், பயத்தினாலும் கலங்கியவர்களுமான மக்கள் யாவரும் ஹே! க்ருஷ்ண! உன்னை அவமதிக்கின்றனர்.

तस्मात्त्वमेव लोकेऽस्मिन्नवतीर्य कृपानिधे ।
कलिकल्मषमत्युग्रं सांप्रतं शमय प्रभो ॥ २३ ॥

23. கருணாநிதியே! ப்ரபோ! நீரே இவ்வுலகில் அவதரித்து அதி உக்ரமான கலி கல்மஷத்தை அடக்கு வீராக!

श्रीभगवानुवाच

त्रियुगोऽस्मि महायोगिन्नवतारो न मे कलौ ।
तस्मादर्चावतारेण क्रीडामि जगतीतले ॥ २४ ॥

ஸ்ரீ பகவான்

24. "மஹாயோகியே! மூன்று யுகங்களில் தான் எனது அவதாரம். கலியில் கிடையாது. எனவே உலகில் அர்ச்சாவதாரம் எடுத்து விளையாடுகிறேன்.

अर्चावताररूपेण गूढोऽस्मि कृपया कलौ ।
भक्ता एव हि लोकेऽस्मिन् जानन्ति मम वैभवम् ॥२५॥

25. கலியில் கருணையினால் அர்ச்சாவதார உருவத்தில் ரஹஸ்யமாய் இருப்பேன். இவ்வுலகில் எனது மஹிமையை பக்தர்களே அறிவார்கள்.

आराधयन्ति ये भक्ता मामेकं कीर्तनादिभिः ।
वसामि तेषु सुप्रीतो गूढरूपेण सन्ततम् ॥ २६ ॥

26. எந்த பக்தர்கள் என் ஒருவனையே கீர்த்தனம் முதலியவைகளால் ஆராதிப்பார்களோ அவர்களிடம் ப்ரீதி அடைந்து, ரஹஸ்யமான ரூபத்துடன் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருப்பேன்.

योगीन्द्र उवाच

एवञ्चेत्तर्हि गोविन्द देवदेव सनातन ।
अर्चावताररूपेण दर्शनं देहि मे सदा ॥ २७ ॥

யோகிந்த்ரர்

27. "கோவிந்தா! தேவதேவ! ஸநாதன! அப்படியானால் அர்ச்சாவதார ரூபத்துடன் எனக்கு எப்பொழுதும் தர்சனம் கொடுப்பீராக.

अतिक्रम्यैव सामर्थ्यं सर्वेषामपि शिल्पिनाम् ।
स्वयंभूर्भव गोविन्द यतस्त्वं भक्तवत्सलः ॥ २८ ॥

28. எல்லா சில்பிகளுடையவும் ஸாமர்த்யத்தை அதிக்ரமித்து, நீர் ஸ்வயம்புவாக ஆகுவீராக. ஏனெனில் நீர் பக்த வத்ஸலன்."

श्रीसद्गुरुरुवाच

इति संप्रार्थितो देवो गोविन्दो भक्तवत्सलः ।
अर्चावतारं जगृहे सद्य एव कृपानिधिः ॥ २९ ॥

ஸ்ரீ ஸத்குரு

29. இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட பக்த வத்ஸலனும், கருணாநிதியுமான கோவிந்த தேவன் உடனேயே அர்ச்சாவதாரத்தைத் தாங்கினான்.

संभाषणं चकारासौ येन भावेन योगिना ।
तेन भावेन रूपं स्वं जगृहे भगवान् हरिः ॥ ३० ॥

30. பகவானாகிய ஹரி யோகியுடன் எந்த முக பாவத்துடன் ஸம்பாஷணை செய்தானோ அதே முக பாவத்துடன் தனது ரூபத்தைத் தாங்கினான்.

जगन्मोहनसौन्दर्य सारसर्वस्वविग्रहम् ।
यमुनाया जलेनामुमभ्यषिञ्चन्महामुनिः ॥ ३१ ॥

31. அந்த மாமுனிவர் உலகை மயக்கும் எல்லா அழகுக்கும் இருப்பிடமான திருமேனியுடைய இந்த பக்த கோலாஹலனை யமுனை ஜலத்தினால் அபிஷேகம் செய்தார்.

पूजयामास योगीन्द्रः प्रेमपूर्वं दिने दिने ।
पुष्पैः फलोपहारैश्च यमुनातीरसंभवैः ॥ ३२ ॥

32. யோகியான அவர் ப்ரேமையுடன் தினந்தோறும் யமுனைக் கரையிலுண்டான புஷ்பம், பழம் முதலிய உபஹாரங்களால் பூஜித்தார்.

कीर्तयंस्तस्य नामानि चिन्तयंस्तस्य केलिकाम् ।
अवसद्यमुनातीरे स महात्मा तपोनिधिः ॥ ३३ ॥

33. அவனுடைய நாமங்களை கீர்த்தனம் செய்து கொண்டும், லீலைகளை சிந்தனம் செய்துகொண்டும் தபோநிதியும் மஹாத்மாவுமான அவர் யமுனைக் கரையில் வஸித்து வந்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे कैवल्यारामयोगीन्द्रचरितं नाम
दशमोऽध्यायः ॥ १० ॥

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
கேவல்ராம் சரிதத்தில் பத்தாவது
அத்யாயம் முற்றும்.

॥ अथ एकादशोऽध्यायः ॥

பதினோராம் அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

नारदस्याज्ञया लोके कलिं शमयितुं खलम् ।
अवतीर्णो मध्वकुले प्रह्लादो भक्तपुङ्गवः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. நாரதருடைய ஆக்ஞையால் உலகில் துஷ்டனை கலியை அடக்குவதற்கு பக்தச்ரேஷ்டனை ப்ரஹ்லாதன் மத்வ குலத்தில் அவதரித்தார்.

लक्ष्मीनृसिंहशर्मेति पिता नाम चकार च ।
शुक्लपक्षे चन्द्र इव ववृधे बालकस्तथा ॥ २ ॥

2. லக்ஷ்மீ நரஸிம்மன் என்று தந்தை பெயரிட்டார். குழந்தை வளர்பிறை சந்த்ரன்போல் வளர்ந்து வந்தான்.

कृत्वा चौलादिकं कर्म पिता कालगतिं गतः ।
विधवां मातरं प्रेम्णा सान्त्वयामास बालकः ॥ ३ ॥

3. சௌளம் முதலிய கர்மாவை முடித்து தந்தை காலகதி அடைந்தார். விதவையான அன்னையை பாலகன் ப்ரேமையுடன் ஸமாதானம் செய்து வந்தான்.

दारिद्र्यदुःखसंयुक्ता बालपोषणतत्परा ।
सन्त्यक्ता बन्धुभिश्चापि माताऽऽसीद्दुःखिता भृशम् ॥

4. ஏழ்மையினுல் கஷ்டப்படுகின்றவளாகவும், குழந்தையை வளர்ப்பதே லக்ஷ்யமாகக் கொண்டவளாகவும், பந்துக்களால் கைவிடப்பட்டவளாகவும் தாயார் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள்.

पर्यटन्नग्रहारेषु क्षुत्क्लान्तजठरः शिशुः ।
अन्नं प्रयाचते नित्यं पात्रमादाय सुस्वरम् ॥ ५ ॥

5. பசியால் வாடிய வயிறுடைய அந்த சிசு அக்ரஹாரங்களில் அலேந்து தினமும், பாத்ரத்தை கையில் எடுத்து இனிய குரலில் அன்னம் யாசிப்பான்.

कैवल्यरामयोगीन्द्रः कदाचित्तं विलोक्य सः ।
आश्लिष्य गाढं सानन्दं प्रददौ कृष्णविग्रहम् ॥ ६ ॥

6. ஒரு ஸமயம் யோகீச்வரரான கேவல்ராம் இந்தப் பையனேப்பார்த்து ஆனந்தமாக இறுக்கிக் கட்டிக் கொண்டு க்ருஷ்ண விக்ரஹத்தைக் கொடுத்தார்.

अकस्माद्योगिनं दृष्ट्वा भीतोऽपि च स बालकः ।
विलोक्य कृष्णं सहसा सुप्रसन्नोऽभवत्तदा ॥ ७ ॥

7. அந்த பாலகன் எதிர்பாராமல் யோகியைக் கண்டு பயந்தவனுயினும் அப்பொழுதே க்ருஷ்ணனேக் கண்டு உடனே ஸந்தோஷமடைந்தான்.

तत्रैवान्तरधाद्योगी कृतकृत्यो मुनीश्वरः ।
बालोऽपि कृष्णमादाय त्वरयाऽऽयान्निजं गृहम् ॥ ८ ॥

8. உடனே செய்யவேண்டியதைச் செய்த முனீச்வரர் மறைந்தார். குழந்தையும் க்ருஷ்ணனே எடுத்துக்கொண்டு வேகமாய் வீட்டிற்கு ஓடினுன்.

सर्वं निशम्य जननी विलोक्य च शिशुं हरिम् ।
परमानुग्रहं मेने बालके ऽस्यचिन्मुनेः ॥ ९ ॥

9. எல்லாவற்றையும் கேள்விப்பட்ட தாயார் குழந்தையையும் க்ருஷ்ணனையும் கண்டு யாரோ ஒரு முனிவர் குழந்தையிடம் பரம அனுக்ரஹத்தைச் செய்தார் என்று நினைத்தாள்.

विहरंस्तेन कृष्णेन बालकश्च दिने दिने ।
संप्राप्तपरमानन्दः पाठशालां न गच्छति ॥ १० ॥

10. பாலனும் தினந்தோறும் அந்த க்ருஷ்ணனுடன் விளையாடிக்கொண்டு பரமானந்த மடைந்தவனாய், பாடசாலைக்குப் போவதில்லை.

नित्यमाराधयन् कृष्णं केवलं बाललीलया ।
तमेवात्मवशञ्चक्रे बालको भक्तवत्सलम् ॥ ११ ॥

11. பாலகன் அந்த க்ருஷ்ணனையே தினமும் விளையாட்டாகப் பூஜித்துக்கொண்டு பக்தவத்ஸலனை அவனை தன் வசப்படுத்திக் கொண்டான்.

गत्वा कवेरजातीरं कलभाषणतत्परः ।
पप्रच्छ विविधान् धर्मान् कृष्णमेव जगद्गुरुम् ॥ १२ ॥

12. காவேரி கரைக்குச்சென்று மழலை பேசும் அவன் ஜகத்குருவான க்ருஷ்ணனிடமே பல தர்மங்களைக் கேட்டுக்கொண்டான்.

अचिरेणैव कालेन सर्वशास्त्रार्थवित्तमः ।
बभूव बालकः सोपि कृपयैव श्रियःपतेः ॥ १३ ॥

13. கொஞ்ச நாளில் ஸ்ரீநாதனுன க்ருஷ்ணை வின் க்ருபையால் அந்த பாலன் ஸர்வ சாஸ்த்ரங் களின் பொருளேயும் அறிந்தவர்களில் சிறந்தவ னுனன்.

संप्राप्तयौवनः सोपि कृष्णमेव भजन् गुरुम् ।
विज्ञाय योगधर्मञ्च योगाभ्यासरतोऽभवत् ॥ १४ ॥

14. யௌவனம் அடைந்தும், அவன் க்ருஷ் ணனேயே குருவாக பஜித்து யோகதர்மத்தை அறிந்து யோகாப்யாஸம் செய்யலானுன்.

कृष्णस्य कृपया सोयमूर्ध्वरेता बभूव ह ।
विषयासक्तिरहितो विरक्तो विजितेन्द्रियः ॥ १५ ॥

15. அவன் க்ருஷ்ணனுடைய க்ருபையால் சிற் றின்ப நாட்டம் இல்லாதவனுகவும், விரக்தியுடைய வனுகவும், புலன்களே வென்றவனுகவும், ஊர்த்வரேத ஸாகவும் ஆனுன்.

अनुज्ञां प्राप्य मातुश्च भगवान् शङ्करो यथा ।
तुरीयमाश्रमञ्चापि जग्राह विधिपूर्वकम् ॥ १६ ॥

16. பகவானுகிய சங்கரர்போல் தாயின் அனு மதி பெற்று விதிப்படி ஸந்யாஸ ஆச்ரமத்தையும் ஏற்றுக்கொண்டார்.

पुत्रमेव स्मरन्ती सा माता कालगतिं गता ।
आनन्दगिरियोगीति प्रख्यातिं प्राप भूतले ॥ १७ ॥

17. மகனேயே நினைத்துக்கொண்டு அந்த அன்னை காலகதி அடைந்தாள். ஆனந்தகிரியோகி என்று இவர் உலகில் புகழ் பெற்றுர்.

धर्मं परमहंसानामवलम्ब्य महामतिः ।
चचार स महायोगी जडोन्मत्तपिशाचवत् ॥ १८ ॥

18. பரம ஹம்ஸ தர்மத்தைக் கடைபிடித்து, சிறந்த யோகியும், ஞானியுமான அவர் மூடன் போலும், பித்தன்போலும் அலைந்தார்.

नारायणेति सततं कीर्तयन् सुस्वरं मुनिः ।
वादयन् कांस्यातालञ्च वीथ्यां वीथ्यां ननर्त सः ॥१९॥

19. அந்த முனிவர் வெண்கலதாலத்தை வாசித்துக்கொண்டு ஓயாமல் இனிமையாக "நாராயண" என்று கீர்த்தனம் செய்துகொண்டு வீதி தோறும் நர்த்தனம் ஆடுவார்.

क्वचित्क्रीडति बालैश्च क्वचिद्धावति सत्वरम् ।
क्वचित्करोति हुङ्कारं क्वचिद्गायति नृत्यति ॥ २० ॥

20. ஒருகால் குழந்தைகளோடு விளையாடுவார்; ஒருகால் அதிவேகமாய் ஓடுவார்; ஒருகால் ஹுங் காரம் செய்வார்; ஒருகால் பாடுவார்; ஒருகால் ஆடு வார்.

क्वचिद्दिगम्बरश्चापि क्वचित्काषायवेष्टितः ।
क्वचित्प्रज्ञानसंयुक्तः क्वचिदुन्मादचेष्टितः ॥ २१ ॥

21. ஒருகால் திகம்பரராய் நிற்பார்; ஒருகால் காஷாயம் அணிந்திருப்பார்; ஒருகால் நல்ல ப்ரக்ஞை யுடன் இருப்பார்; ஒருகால் பித்தனைப்போல் சேஷ்டை செய்வார்.

क्वचिद्धसति सानन्दं क्वचिद्रोदिति बालवत् ।
क्वचिद्गर्जति नामानि कृष्णस्य मधुराणि च ॥ २२ ॥

22. ஒருகால் ஆனந்தமாகச் சிரிப்பார்; ஒரு கால் குழந்தைபோல் அழுவார்; ஒருகால் க்ருஷ்ணனின் இனிய நாமங்களை கர்ஜிப்பார்.

क्वचिन्मौनेन संयुक्तः क्वचित्प्रलपति स्वयम् ।
क्वचिन्महाशनश्चास्ति क्वचिच्चानशनव्रतः । २३ ॥

23. ஒருகால் மௌனமாய் இருப்பார்; ஒருகால் தானே புலம்புவார்; ஒருகால் அளவுக்கு மீறி சாப்பிடுவார்; ஒருகால் சாப்பிடாமலேயே இருப்பார்.

एवं निगूढमाहात्म्यं श्रीशुकाचार्यसंमितम् ।
अवजानन्ति मूढाश्च लौकिका पामरा नराः ॥ २४ ॥

24. இவ்வாறு ஸ்ரீ சுகமுனிவரைப்போல் கூடமான மஹிமையையுடைய இவரைக்கண்டு மூடர்களும் லௌகீகர்களுமான பாமர மக்கள் அவமதித்தனர்.

शिष्याश्च बहवस्तस्य सर्ववर्णेषु सन्ति हि ।
तत्प्रभावविदो धन्यास्तत्कटाक्षैकजीवनाः ॥ २५ ॥

25. அவர் மஹிமையை அறிந்து அவருடைய கடாக்ஷத்திஞல் ஜீவிக்கும் பல சிஷ்யர்கள் பல ஜாதியிலும் இருந்தார்கள்.

इति श्री कृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे आनन्दगिरियोगिचरितं नाम
एकादशोऽध्यायः ॥ ११ ॥

இவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஆனந்தகிரி சரிதம் என்னும் பதிஞேருவது
அத்தியாயம் முற்றும்.

॥ अथ द्वादशोऽध्यायः ॥

பன்னிரண்டாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

श्रुतिस्मृतिपुराणानां सारभूतमिदं कलौ ।
श्रीमद्भागवतं शास्त्रं व्यासपुत्रेण कीर्तितम् ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள் இவைகளின் ஸாரமான ஸ்ரீமத் பாகவதம் என்னும் சாஸ்த்ரம் கலியில் ஸ்ரீசுகரால் சொல்லப்பட்டது

किं वृथाऽन्यैः पुराणैस्तु बुद्धिमोहविधायकैः ।
एकं भागवतं शास्त्रं तत्वज्ञानप्रदायकम् ॥ २ ॥

2. புத்தி மயக்கத்தை உண்டாக்கும் மற்ற புராணங்களால் என்ன பயன்? தத்வ ஞானத்தைத் தருவது பாகவத சாஸ்த்ரம் ஒன்றே.

अलं भागवतं शास्त्रं वेत्तुं भगवतो गुणान् ।
गुणान् भागवतानाञ्च वेत्तुं वैष्णवसंहिता ॥ ३ ॥

3. பகவானுடைய குணங்களை அறிவதற்கு பாகவத சாஸ்த்ரமே போதும். பாகவதர்களின் குணங்களை அறிவதற்கு வைஷ்ணவ ஸம்ஹிதையே போதும்.

रामायणं भारतञ्च पुराणानीतराणि च ।
श्रीमद्भागवते शास्त्रे वर्तन्ते व्यक्तमेव हि ॥ ४ ॥

4. ராமாயணமும், பாரதமும், மற்ற புராணங் களும், ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்திலேயே தெளி வாய் இருக்கின்றன.

कलिकालोचितं शास्त्रं श्रीमद्भागवतं परम् ।
कथयन् कृष्णभक्तिञ्च स्थापयेद्भुवि वैष्णवः ॥ ५ ॥

5. கலிகாலத்திற்கு உசிதமான சிறந்த சாஸ்த்ர மான, ஸ்ரீமத் பாகவதத்தை வைஷ்ணவன் ப்ரவச னம் செய்து உலகில் க்ருஷ்ண பக்தியை ஸ்தாபிக்க வேண்டும்.

स्वयंप्रकाशयोगीति कश्चिदासीद्यतीश्वरः ।
बाल्यात्प्रभृति गोविन्दे प्रह्लाद इव भक्तिमान् ॥ ६ ॥

6. பால்யம் முதற்கொண்டு கோவிந்தனிடம் ப்ரஹ்லாதன்போல் பக்தி செய்து வந்த ஸ்வயம்ப்ர காச ஸரஸ்வதி என்கிற ஒரு யதீச்வரர் இருந்தார்.

पठित्वा सर्वशास्त्राणि विचार्य च पुनः पुनः ।
आददे श्रीभागवतं भक्तिज्ञानविरक्तिदम् ॥ ७ ॥

7. அவர் ஸர்வ சாஸ்த்ரங்களையும் படித்து பல முறை ஆராய்ந்து பக்தி, ஞானம், விரக்தி இவை களைத்தரும் ஸ்ரீ பாகவதத்தை எடுத்துக்கொண்டார்.

श्रीभागवतसप्ताहं कर्तुमिच्छन् महामतिः ।
सर्वत्र भारते देशे नैच्छद्गार्हस्थ्यमाश्रमम् ॥ ८ ॥

8. மஹாஞானியான அவர் பாரத நாடெங் கும் ஸ்ரீ பாகவத ஸப்தாஹம் நடத்தும் விருப்பத்தி னால் இல்லறத்தை விரும்பவில்லை.

दारपुत्रादिसम्बन्धं स मेने प्रतिबन्धकम् ।
तथापि पितृनिर्देशात्प्राप गार्हस्थ्यमाश्रमम् ॥ ९ ॥

9. அவர் மனைவி மக்களின் ஸம்பந்தத்தை இடையூறாக நினைத்தாராயினும், தந்தையின் உத்தரவால் இல்லறத்தை அடைந்தார்.

अचिरेणैव कालेन तत्पत्नी च दिवं गता ।
ततः सञ्जातवैराग्यो गृहात्स च विनिर्ययौ ॥ १० ॥

10. கொஞ்சநாளில் அவர் மனைவி ஸ்வர்க்கமடைந்தாள். பிறகு அவர் விரக்தி அடைந்து வீட்டை விட்டு வெளியேறினார்.

अवधूतस्थितिं प्राप्तो जडोन्मत्तपिशाचवत् ।
परिवव्राज लोकेस्मिन् विंशे वयसि निर्भरः ॥ ११ ॥

11. இருபதாவது வயதில் அவர் அவதூத நிலையை அடைந்து, மூடனைப் போலவும், பித்தனைப் போலவும், பிசாசைப் போலவும் இவ்வுலகில் எந்த பாரமும் இல்லாதவராய் அலைந்தார்.

तं दृष्ट्वा तु महात्मानं युवानञ्च दिगम्बरम् ।
ब्राह्मणाः प्रार्थयामासुर्विधातुं वस्त्रधारणम् ॥ १२ ॥

12. இளம் பருவத்தில் திகம்பரராய் அலையும், அவரைக் கண்டு பிராம்மணர்கள், வஸ்திரம் உடுத்திக் கொள்ளும்படி வேண்டினார்கள்.

ब्राह्मणा ऊचुः

भगवन् भवतो लोके नास्ति भेदो न संशयः ।
व्यासपुत्र इव स्वामिन्नीश्वरस्याद्वैतभावनः ॥ १३ ॥

பிராம்மணர்கள்

13. "பகவானே! தங்களுக்கு உலகில் பேதம் தெரியவில்லை. ஸ்வாமி! சுகர் போல் அத்வைத நிஷ்டையுடன் அலைகிறீர். ஸந்தேஹமில்லை.

लोकप्रज्ञामपि प्राप्य कृपया भक्तिनिष्ठया ।
श्रीमद्भागवतं वक्तुमिच्छस्यस्माकमप्यहो ॥ १४ ॥

14. லோக பிரக்ஞையும் அடைந்து, பக்தி நிஷ்டையாலும் எங்களிடம் உள்ள கருணையாலும் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்லுவதற்கு விரும்புகின்றீர். ஆச்சர்யம்!

आत्मारामाश्च मुनयो निर्ग्रन्था अप्युरुक्रमे ।
कुर्वन्त्यहैतुकीं भक्तिमित्थंभूतगुणो हरिः ॥ १५ ॥

15. ஆத்ம ஞானிகளான முனிவர்கள், எந்த விதமான பந்தமும் அற்றவர்களாயினும், த்ரிவிக்ரமனிடத்தில் பயனைக் கருதாத பக்தியைச் செய்கின்றனர். ஏனெனில் இத்தகைய குணம் உடையவன் ஹரி.

एवमक्षरनिष्ठोपि भवान् भेदविवर्जितः ।
वक्तुमिच्छति योगीन्द्र श्रीमद्भागवतञ्च नः ॥ १६ ॥

16. இவ்வாறு உருவமற்ற ப்ரும்மத்தில் நிஷ்டை கூடியவராயினும், பேத மற்றவராயினும், தாங்கள் எங்களுக்கு ஸ்ரீமத் பாகவதம் சொல்ல விரும்புகின்றீர்.

स्त्रीणाञ्च बालकानाञ्च वक्तुं भागवतं परम् ।
यदीच्छसि महायोगिन् कुरु त्वं वस्त्रधारणम् ॥ १७ ॥

17. ஸ்த்ரிகளுக்கும் பாலர்களுக்கும் கூட பாகவதம் சொல்ல விரும்புவீர்களானுல் வஸ்த்ரம் அணிந்து கொள்ளுங்கள்.

स्त्रियो बालाश्च सर्वेऽपि त्वां दृष्ट्वा वस्त्रधारिणम् ।
निर्लज्जाः शृणुयुर्नूनं श्रीमद्भागवतं यते ॥ १८ ॥

18. ஸ்த்ரீகள், பாலகர்கள் உள்பட யாவரும் வஸ்த்ரம் அணிந்திருக்கும் உம்மைக் கண்டு லஜ்ஜை நீங்கப் பெற்று பாகவதம் கேட்பார்கள்."

श्रीसद्गुरुरुवाच

एवं संप्रार्थितो ज्ञानी श्रीमद्भागवतप्रियः ।
दधौ काषायवस्त्रश्च दण्डं नियमपूर्वकम् ॥ १९ ॥

ஸ்ரீ ஸத்குரு

19. இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட அந்த ஞானி ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள பிரியத்திளுல் விதிப்படி காஷாயம், தண்டம் முதலியவைகளைத் தரித்தார்.

प्रसन्नवदनं शान्तं काषायाम्बरधारिणम् ।
ऊर्ध्वपुण्ड्रधरं धीरं जितकामं जितेन्द्रियम् ॥ २० ॥

वृत्तिं माधुकरीं नित्यं कुर्वन्तं दण्डधारिणम् ।
श्रीमद्भागवतग्रन्थसप्ताहमखकारिणम् ॥ २१ ॥

तं यतीन्द्रमुपाश्रित्य बहवो भाग्यशालिनः ।
बभूवुः कृष्णभक्ताश्च कलौ दोषविवर्जिताः ॥ २२ ॥

20 - 22. மலர்ந்த முகமுடையவரும் சாந்தமான தோற்றமுடையவரும, காஷாய வஸ்த்ரம் அணிந்தவரும், கோபீ சந்தனம் அணிந்தவரும், தீரனும், காமத்தை வென்றவரும், புலன்களை அடக்கியவரும், தினமும் பிக்ஷையெடுத்துச் சாப்பிடுபவரும் தண்டம் தரித்தவரும், ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹமாகிய யக்ஞத்தைச் செய்பவருமான அந்த யதீச்வரரை ஆச்ரயித்து பல பாக்யசாலிகள் கலியில் தோஷம் நீங்கப் பெற்றவர்களாய், கிருஷ்ண பக்தர்களாக ஆனார்கள்.

एवं परिव्रजंल्लोके श्रीभागवततत्परः ।
भक्तिं प्रकाशयामास प्रह्लादवरदे कलौ ॥ २३ ॥

23. இவ்வாறு உலகில் ஸஞ்சரித்து ஸ்ரீமத் பாகவதமே லக்ஷ்யமாய்க் கொண்டு ப்ரஹ்லாதனுக்கு அருள் செய்த நரஸிம்ம மூர்த்தியிடம் இக்கலியில் பக்தியைப் பிரகாசப் படுத்தினர்.

श्रीनृसिंहचतुर्दश्यां नृसिंहध्यानतत्परः ।
स्वयंप्रकाशयोगीन्द्रः श्रीनृसिंहपदं गतः ॥ २४ ॥

24. நரஸிம்ம த்யானமே லக்ஷ்யமாகக் கொண்ட ஸ்வயம்ப்ரகாச யோகீந்த்ரர் நரஸிம்ம ஜயந்தி அன்று ஸ்ரீ நரஸிம்மனின் திருவடியை அடைந்தார்.

स्वयंप्रकाशचरितं यः पठेच्छ्रद्धया नरः ।
श्रीमद्भागवते शास्त्रे परां प्रीतिमवाप्नुयात् ॥ २५ ॥

25. எவனொருவன் ஸ்வயம்பிரகாசரின் சரித்தை ச்ரத்தையுடன் படிப்பானோ அவன் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தில் சிறந்த ப்ரேமையை அடைவான்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे स्वयं प्रकाशयोगीन्द्रचरितं
नाम द्वादशोऽध्यायः ॥ १२ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீஸ்வயம்பிரகாச யோகிந்த்ரரின் சரித்திரத்தில்
பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றும்.

॥ अथ त्रयोदशोऽध्यायः ॥

பதின்மூன்றும் அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

परोक्षवादो वेदोऽयं सेतिहासपुराणकः ।
सूरयोपि विमुह्यन्ति तद्गूढार्थविनिर्णये ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. வேதமும் இதிஹாஸ புராணங்களும் மறைமுகமாகப் பேசுகின்றன. எனவே அவைகளின் ரஹஸ்யமான அர்த்தத்தை நிர்ணயம் செய்வதில் அறிஞர்களும் மயங்குகிறார்கள்.

स्थूलमर्थमुपाश्रित्य तर्कं कुर्वन्ति नास्तिकाः ।
तत्वार्थमेव संगृह्य भक्तिं कुर्वन्ति पण्डिताः ॥ २ ॥

2. வெளிப்படையாக அர்த்தத்தை எடுத்துக்கொண்டு நாஸ்திகர்கள் தர்க்கம் செய்கின்றனர். தத்வார்த்தத்தை எடுத்துக்கொண்டு பகுத்தறிவாளிகள் பக்தி செய்கின்றனர்.

अर्थवादं पुराणानां सन्देहध्वान्तवर्धनम् ।
सन्त्यज्य देवतातत्वं जानीयात्पण्डितोत्तमः ॥ ३ ॥

3. ஸந்தேஹமாகிய இருளை வளர்க்கும் புரா ணங்களின் அர்த்தவாதத்தைவிட்டு தைவங்களின் தத்வத்தை அறிஞன் அறிய வேண்டும்.

नानोपाधिवशेनैव नानारूपैः पृथक् पृथक् ।
नानाफलप्राप्तये तु सेव्यते हरिरीश्वरः ॥ ४ ॥

4. ஈச்வரனுகிய ஹரி ஒருவனே பல உபாதி காரணமாய், தனித்தனியே பல ரூபங்களுடன் பல விதமான பலனை அடைவதற்கு ஸேவிக்கப்படுகிறான்.

अपरिच्छिन्नमद्वैतं सच्चिदानन्दविग्रहम् ।
नारायणः परं तत्वमिति वेदः सनातनः ॥ ५ ॥

5. அளவுகடந்ததும், ஒன்றேயானதும், ஸச்சி தானந்தமயமானதுமான பரம் பொருள் நாரா யணனே என்பது பழமையான வேதம்.

तमेव दर्शयन्त्यन्या देवतास्तत्वमूर्तयः ।
सर्वोपाधिविनिर्मुक्तं नारायणमनामयम् ॥ ६ ॥

6. மற்ற தத்வங்களை உருவாகக்கொண்ட மற்ற தைவங்கள், எல்லா உபாதிகளையும் கடந்த, மாறுபாடற்ற, பரம்பொருளான அந்த நாராய ணனையே காட்டுகின்றன.

श्रीहालास्यमहाक्षेत्रे सौराष्ट्रब्राह्मणो महान् ।
आसीन्नटनगोपालदासाख्यो वैष्णवोत्तमः ॥ ७ ॥

7. ஸ்ரீ ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தில் (மதுரையில்) நடனகோபால தாஸர் என்கிற வைஷ்ணவோத்தமரான ஒரு ஸௌராஷ்ட்ர பிராம்மணர் இருந்து வந்தார்.

स महात्मा परं तत्वं साक्षात्कर्तुं दृढव्रतः ।
विनिश्चित्य गृहाद्बाल्ये जगाम विपिनं महत् ॥ ८ ॥

8. அந்த மஹான் பரம்பொருளை நேரில் காண நிச்சயித்து திடசித்தமுடையவராய், பால்யத்திலேயே வீட்டைவிட்டு பெரிய காட்டை அடைந்தார்.

स्कन्दमाराधयामास कायक्लेशं समाचरन् ।
तीव्रेण तपसा नित्यं देवसेनापतिं प्रभुम् ॥ ९ ॥

9. அவர் உடலை க்லேசப்படுத்திக்கொண்டு, கடினமான தவத்தினுல் தினமும் தேவஸேனுபதியும், ப்ரபுவுமான ஸ்கந்தனை ஆராதித்தார்.

तस्य तीव्रेण तपसा सुप्रीतः करुणानिधिः ।
आविर्बभूव गाङ्गेयः कार्तिकेयो जगत्पतिः ॥ १० ॥

10. அவருடைய கடுந்தவத்தினுல் ப்ரீதி அடைந்த கருணுநிதியும், லோகநாதனும், கார்த்திகேயனும், காங்கேயனுமாகிய முருகன் ஆவிர்பவித்தான்.

मयूरवाहनं देवं मन्दहासवराननम् ।
प्रसन्नवदनं बालं कुटिलासितकुन्तलम् ॥ ११ ॥
ज्ञानशक्त्यायुधधरं करेणाप्यभयप्रदम् ।
भूषितं भूषणैर्दिव्यैः किङ्किणीकङ्कणादिभिः ॥ १२ ॥

तप्तस्वर्णप्रभं शान्तं सुचारुनयनं शिवम् ।
सुन्दरं शिवपुत्रञ्च गुरुं तत्त्वविदां वरम् ॥ १३ ॥
विलोक्य प्रेमभावेन पुलकीकृतविग्रहः ।
तुष्टाव भक्तश्रेष्ठोपि विहिताञ्जलिसंपुटः ॥ १४ ॥

11-14. மயில் வாகனமுடையவனும், 'தேவனும் மந்தஹாஸம் தவழும் முகமுடையவனும் மலர்ந்த, முகமுடையவனும், பாலனும், சுருண்ட கருத்த கேசமுடையவனும், ஞானத்தைத் தரும் வேலாயுதத் தைத் தாங்கியவனும், மற்ருெரு கையால் அபயம் தருபவனும், கிங்கிணி, கங்கணம் முதலிய திவ்யபூஷ ணங்களை அணிந்தவனும், உருக்கப்பட்ட தங்கம் போல் காந்தியுடையவனும், சாந்தமானவனும், அழகான கண்கள் உடையவனும், மங்களமான வனும், ஞானபண்டிதனும், ஞானகுருவும், சிவ குமாரனுமான முருகனைப் பார்த்து அந்த பக்த ச்ரேஷ்டர் ப்ரேமையினுல் மேனி சிலிர்த்தவராய் கை குவித்தவண்ணம் துதித்தார்.

नटनगोपालदास उवाच

नमस्ते शिवपुत्राय गौरीपुत्राय ते नमः ।
नमस्ते कार्तिकेयाय गाङ्गेयाय च ते नमः ॥ १५ ॥

நடன கோபாலதாஸர்

15. ''சிவகுமாரனே போற்றி! கௌரீபுத்ரனே போற்றி! கார்த்திகேயனே போற்றி! காங்கேயனே போற்றி!

नमामि षण्मुखं देवं नमामि शिवबालकम् ।
नमामि सुरसेनेशं नमामि शिखिवाहनम् ॥ १६ ॥

16. ஷண்முக தெய்வமே போற்றி! சிவக் கொழுந்தே போற்றி! தேவஸேனா நாதா போற்றி! மயில் வாகனனே போற்றி!

ज्ञानशक्तिधरं देवं वन्देहं ज्ञानिनां वरम् ।
लम्बोदरानुजं वन्दे वन्देहं ललिताननम् ॥ १७ ॥

17. வேலாயுதனே போற்றி! ஞான பண்டிதனே போற்றி! கணபதியின் தம்பியே போற்றி! ஸுந்தரவதனு போற்றி!

प्रसीद वल्लीकान्त त्वं प्रसीद मयि सुन्दर ।
प्रसीद सुमहाबाहो प्रसीद गुरुपुङ्गव ॥ १८ ॥

18. வல்லீகாந்தா! அருள்செய். முருகா எனக்கருள் செய்! பெருந்தோள் வீர! அருள் செய். குருநாதனே! அருள்செய்."

श्रीसद्गुरुरुवाच

एवं नटनगोपालदासेन शिवनन्दनः ।
संस्तुतः प्राह कृपया विष्णुतत्त्वं प्रकाशयन् ॥ १९ ॥

ஸ்ரீ ஸத்குரு

19. இவ்வாறு நடனகோபாலதாஸரால் போற்றப்பட்ட சிவகுமாரன், விஷ்ணு தத்வத்தை பிரகாசப் படுத்திக்கொண்டு, கருணையுடன் சொன்னார்.

स्कन्द उवाच

तव भक्त्या प्रसन्नोऽस्मि तीव्रेण तपसा तथा ।
वदामि तत्वं परमं सावधानतया शृणु ॥ २० ॥

ஸ்கந்தன்

20. "உனது பக்தியாலும், கடுந்தவத்தினுலும், ப்ரஸன்னமானேன். பரம்பொருளைச் சொல்லு கிறேன். கவனித்துக் கேள்.

मह्यं शुश्रूषमाणाय मत्पिता वृषभध्वजः ।
यत्प्राह पूर्वं तत्तत्वं मत्तः श्रृणु महामते ॥ २१ ॥

21. எனது தந்தையான சிவபெருமான், கேட்க விரும்பிய எனக்கு, முன்பு எதைச்சொன்னுரோ அந்த தத்துவத்தை புத்திமானுகிய நீ என்னிடம் கேட்டுக் கொள்.

सकलोपनिषद्वेद्यं नारायणमनामयम् ।
जानीहि परमं तत्वं तदन्यं मायिकं तथा ॥ २२ ॥

22. எல்லா உபநிஷதங்களாலும் அறியப்படும் குற்றமற்ற நாராயணனையே பரம்பொருளாக அறி வாயாக. மற்றெல்லாம் மாயாகாரியமான பொருளே.

मायिकेषु च सर्वेषु विनश्यत्सु जगत्स्वपि ।
न विनश्यति विप्रेन्द्र देव एको हरिः प्रभुः ॥ २३ ॥

23. மாயாகாரியமான எல்லா உலகும் அழிந் தாலும், ப்ரபுவான ஹரி என்கிற தேவன் ஒருவனே அழிவதில்லை.

तमवेहि महात्मानं जगज्जन्मादिकारणम् ।
ब्रह्मरुद्रादयः सर्वे कलास्तस्य न संशयः ॥ २४ ॥

24. அவன் ஒருவனையே உலகத்தின் படைப்பு முதலியவைகளுக்கு காரணமாக அறிவாய். ப்ரும்மா, ருத்ரன் முதலிய யாவரும், அவனுடைய கலைகளே. ஸந்தேஹமில்லை.

तन्नामकीर्तनादेव चित्तशुद्धिमवाप्य च ।
साक्षात्करोति तं जीवः स्वस्यैव हृदि संस्थितम् ॥ २५ ॥

25. அவனது நாமகீர்த்தனத்தாலேயே சித்த சுத்தி அடைந்த ஜீவன், தன்னுடைய ஹ்ருதயத்தி லேயே இருக்கும் அவனை நேரில் காண்கிருன்.

तस्मात्तमेव गोविन्दमाराधय दृढव्रतः ।
तस्य प्रसादात्परमं शाश्वतं पदमाप्नुयाः ॥ २६ ॥

26. ஆகையால் திடசித்தத்துடன் அந்த கோவிந்தனையே ஆராதனம் செய். அவன் திருவரு ளால் அழிவற்ற பரமபதத்தை அடைவாய்.

हरिर्मम तवाप्येवं सर्वेषामपि चेश्वरः ।
तस्मादनन्यभक्त्यैव तं पूजय महामते ॥ २७ ॥

27. புத்திமானே! உனக்கும், எனக்கும், யாவ ருக்கும் ஹரியே ஈச்வரன். எனவே, திடமான பக்தி யுடன் அவனையே பூஜை செய்.

तत्पूजया प्रसन्नोस्मि तथा मत्पूजयापि सः ।
आवयोर्भेदभावस्तु कदापि न हि जायते ॥ २८ ॥

28. அவனுடைய பூஜையால் நானும் பிர ஸன்னமாகிறேன். என்னுடைய பூஜையாலும் அவன் பிரஸன்னமாகிருன். எங்களிருவருக்கும் பேதம் ஒரு காலும் உண்டாவதில்லை.

श्रीसद्गुरुरुवाच

एवं नटनगोपालदासः शङ्करसूनुना ।
बोधितो माधवे भक्तिं चकार रसरूपिणीम् ॥ २९ ॥

ஸ்ரீ ஸத்குரு

29. இவ்வாறு சிவகுமாரனால் போதிக்கப்பட்ட நடனகோபால தாஸர் மாதவனிடம் ரஸரூபமான பக்தியைச் செய்தார்.

नायिकाभावसंयुक्तो मधुरं कीर्तयन्नटन् ।
कृष्णमाराधयामास प्रेमभावेन सन्ततम् ॥ ३० ॥

30. நாயிகாபாவத்துடன் கூடினவராய், மதுரமாய் கீர்த்தனம் செய்துகொண்டும், எப்பொழுதும் ப்ரேமபாவத்துடன் க்ருஷ்ணனை ஆராதித்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे नटनगोपालनायकदासचरितं नाम
त्रयोदशोऽध्यायः ॥ १३ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
நடனகோபாலதாஸர் சரிதம் என்னும்
பதிமூன்றும் அத்யாயம் முற்றும்.

॥ अथ चतुर्दशोऽध्यायः ॥

பதினான்காம் அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

सर्वे महाभागवताः सर्वे साधुजनास्तथा ।
गोपीभावं प्रशंसन्ति नित्यं कण्ठरवेण वै ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. எல்லா மஹா பாகவதர்களும், எல்லா ஸாதுக்களும், கோபீப்ரேமையை வெளிப்படையாய் எப்பொழுதும் புகழ்கின்றனர்.

वेदगर्भो विधाता च ब्रह्मा लोकपितामहः ।
साक्षात्सरस्वतीभर्ता गोपीभावं प्रशंसति ॥ २ ॥

2. வேதத்தை வெளியிட்டவரும், படைப்புத் தொழில் உடையவரும், ஸரஸ்வதி தேவியின் பர்த்தாவும், உலகின் பாட்டனுருமான ஸாக்ஷாத் ப்ரும்ம தேவனும் கோபீப்ரேமையைப் புகழ்கிறார்.

कैलासशिखरे रम्ये शङ्करोपि सुरार्चितः ।
पृच्छन्त्यां गिरिकन्यायां गोपीभावं प्रशंसति ॥ ३ ॥

3. ரம்யமான கைலாஸ மலேயின் சிகரத்தில் தேவர்களால் போற்றப்படும் சிவபெருமானும் பார்வதிதேவி கேட்க, கோபீப்ரேமையைப் புகழ்கிறார்.

सर्वशास्त्रार्थतत्त्वज्ञो ब्रह्मचर्यपरायणः ।
भीष्माचार्यो महात्मा च गोपीभावं प्रशंसति ॥ ४ ॥

4. எல்லா சாஸ்த்ரங்களின் கரைகண்டவரும், ப்ரும்மசர்யமே லக்ஷ்யமாகக் கொண்டவரும், மஹாத்மாவுமான பீஷ்மர் கோபீப்ரேமையை புகழ்கிறார்.

देवर्षिर्नारदो धीमान् कृष्णकीर्तनतत्परः ।
गुरुः प्राचेतसादीनां गोपीभावं प्रशंसति ॥ ५ ॥

5. ஞானியும், க்ருஷ்ணகீர்த்தனமே லக்ஷ்யமாகக் கொண்டவரும், வால்மீகி முதலியவர்களுக்கு குருவும், தேவரிஷியுமான நாரதர் கோபீப்ரேமையைப் புகழ்கிறார்.

उद्धवः सर्वशास्त्रज्ञः शिष्यः साक्षाद्बृहस्पतेः ।
वासुदेवस्य मन्त्री च गोपीभावं प्रशंसति ॥ ६ ॥

6. ஸாக்ஷாத் ப்ருஹஸ்பதியின் சிஷ்யரும், எல்லா சாஸ்த்ரங்களும் அறிந்தவரும், க்ருஷ்ணனின் மந்திரியுமான உத்தவர் கோபீப்ரேமையைப் புகழ்கிறார்.

रुक्मिणीप्रमुखा देव्यः कृष्णपत्न्यः पतिव्रताः ।
गोपीभावं प्रशंसन्ति गोविन्दहृतमानसाः ॥ ७ ॥

7. கண்ணனால் கவரப்பட்ட உள்ளம் உடையவர்களும் கற்புக்கரசிகளுமான ருக்மணிதேவி முதலிய க்ருஷ்ண பத்னிகள் கோபீப்ரேமையைப் புகழ்கின்றனர்.

कुरुनार्यस्तथान्योन्यं कथाप्रवचनान्तरे ।
गोपीभावं प्रशंसन्ति प्रासादशिखरस्थिताः ॥ ८ ॥

8. மேல்மாடியில் அமர்ந்து அன்யோன்யமாய் கதைபேசும் ஸமயம் கௌரவ ஸ்த்ரீகளும் கோபீப்ரேமையைப் புகழ்கின்றனர்.

तथा साक्षात्स्वयं कृष्णो बाष्परोमाञ्चसंयुतः ।
सन्ततं भक्तमध्यस्थो गोपीभावं प्रशंसति ॥ ९ ॥

9. அவ்வாறு ஸாக்ஷாத் க்ருஷ்ணபகவான் தானே கண்ணீர்விட்டு மேனி சிலிர்த்து பக்தர்களின் நடுவில் எப்பொழுதும் கோபீப்ரேமையைப் புகழ்கிறான்.

एवं साधुजनैः सर्वैर्गोपीभावं प्रशंसितम् ।
अवजानन्ति मूढास्तु कामचेष्टापरायणाः ॥ १० ॥

10. இவ்வாறு எல்லா ஸாதுக்களாலும் புகழப்படும் கோபீப்ரேமையை காமலீலையையே லக்ஷ்யமாகக்கொண்ட மூடர்கள் அவமதிக்கின்றனர்.

तेषां कामविमुग्धानामपि कृष्णः कृपानिधिः ।
ददातु विमलां बुद्धिमव्याजकृपया हरिः ॥ ११ ॥

11. கருணாநிதியும் பாபத்தைப் போக்குபவனுமான க்ருஷ்ணன் காரணமற்ற க்ருபையினால் காமமோஹிதர்களான அவர்களுக்கு நல்ல புத்தியைத் தரட்டும்.

जयदेवादयो भक्ताः पूर्वमुत्तरभारते ।
भक्तिं प्रकटयामासुर्माधुर्यप्रेमरूपिणीम् ॥ १२ ॥

12. முன்பு வடநாட்டில் ஜயதேவர் முதலிய பக்தர்கள் மதுரமான ப்ரேமரூபமான பக்தியைப் ப்ரகடனம் செய்தார்கள்.

भक्तिं दक्षिणदेशेपि श्रीकृष्णरतिरूपिणीम् ।
अरणः सद्गुरुश्रेष्ठः पोषयामास निर्मलाम् ॥ १३ ॥

13. இவ்வாறு தென்னாட்டிலும் ஸத்குரு ச்ரேஷ்டரான அரணு ஸ்ரீ க்ருஷ்ணனிடம் தூய காதல் வடிவமான பக்தியை வளர்த்தார்.

आसीत्पूर्वं चेन्नपुर्यामरणो नाम वैष्णवः ।
तेजस्वी सुन्दराकारः कमलाक्षः स्मिताननः ॥ १४ ॥
सर्वशास्त्रार्थसारज्ञः सर्वभाषाविशारदः ।
अमानी मानदो धीरः शान्तो लोकविलक्षणः ॥ १५ ॥
गार्हस्थ्यधर्मनिरतः सदा सन्तुष्टमानसः ।
विशालहृदयो भक्तो बालभावेन संयुतः ॥ १६ ॥

14-16. குழந்தை ஸ்வபாவமுடையவரும், பக்திமானும், விசாலமான உள்ளம் உடையவரும், எப்பொழுதும் ஸந்தோஷமாயிருப்பவரும், இல்லற தர்மத்தில் நிலைத்தவரும், உலகிற்கு புறம்பானவரும், சாந்தமானவரும், தீரனும், பிறரைக் கௌரவிப்பவரும், தனது கௌரவத்தை விரும்பாதவரும், எல்லா மொழிகளிலும் தேர்ச்சி அடைந்தவரும், எல்லா சாஸ்த்ரங்களுடையவும் ஸார மறிந்தவரும், சிரித்தமுகமுடையவரும், தாமரைபோன்ற கண்களுடையவரும, அழகான மேனியுடையவரும், தேஜஸ்வியுமான அரணு என்கிற வைஷ்ணவர் முன்பு சென்னையில் வஸித்து வந்தார்.

श्रीकृष्णकीर्तनश्चक्रे सदा सज्जनसेवितः ।
वल्लवीभावसंयुक्तो गोविन्दे व्रजनन्दने ॥ १७ ॥

17. கோகுல பாலனுன கோவிந்தனிடம் கோபீ ப்ரேமையுடன் கூடியவராய் எப்பொழுதும் ஸாதுக்களுடன் கூடி க்ருஷ்ண கீர்த்தனம் செய்து வந்தார்.

कृष्णस्मरणमग्नेऽस्मिन्निशायां वैष्णवोत्तमे ।
आविरासीत्प्रियसखी देवी चम्पकवल्लरी ॥ १८ ॥

18. இந்த வைஷ்ணவோத்தமர், இரவு க்ருஷ்ண த்யானத்தில் லயித்திருக்கும்பொழுது க்ருஷ்ணனின் ஸகியான தேவி சம்பகவல்லி ஆவிர்பவித்தாள்.

दिव्यसौन्दर्यसंयुक्तां दिव्यमाल्यानुलेपनाम् ।
दिव्यज्योतिर्मयीं देवीं दिव्याभरणभूषिताम् ॥ १९ ॥
दृष्ट्वा राधासखीं सद्यः परमानन्दविस्मितः ।
ससंभ्रमं समुत्थाय ननाम विहिताञ्जलिः ॥ २० ॥

19-20. திவ்யமான அழகுடையவளும், திவ்யமான மாலையும் சந்தனமும அணிந்தவளும், திவ்யமான ஜோதி வடிவமானவளும், திவ்யமான ஆபரணம் அணிந்தவளும், ராதா ஸகியுமான தேவியைப் பார்த்து ஆனந்தமும், ஆச்சர்யமும் அடைந்தவராய் பரபரப்புடன் எழுந்து கைகுவித்து வணங்கினுர்.

अरणं प्रेमभावेन पुलकीकृतविग्रहम् ।
देवी चम्पकवल्ली च सानन्दं परिषस्वजे ॥ २१ ॥

21. தேவியான சம்பகவல்லி சிலிர்த்தமேனியுடைய அரணுவை ப்ரேமையுடன் ஆனந்தமாக அணைத்தாள்.

जगज्जनन्यास्तस्यास्तु परिष्वङ्गेण केवलम् ।
वल्लीरूपमथात्मानं ददर्श रसिकोत्तमः ॥ २२ ॥

22. ஜகன்மாதாவான அவளது ஆலிங்கனத்தாலேயே ரஸிகோத்தமரான அரணு தன்னை ஒரு கோபியாகக் கண்டார்.

राधेकृष्णेति मन्त्रञ्च देवी चम्पकवल्लरी ।
प्रददावरणायास्मै प्रेमपूर्णाय सादरम् ॥ २३ ॥

23. தேவியான சம்பகவல்லி 'ராதே க்ருஷ்ண' என்னும் மந்த்ரத்தை ப்ரேமை நிரம்பிய அரணுவிற்கு அன்புடன் அளித்தாள்.

एवमव्याजकृपया पोषितो वैष्णवोत्तमः ।
कृष्णप्रेमरसाम्भोधौ निमग्नो मूर्च्छितोऽभवत् ॥ २४ ॥

24. இவ்வாறு அகாரண க்ருபையால் வளர்க்கப்பட்ட வைஷ்ணவோத்தமரான அரணு க்ருஷ்ண ப்ரேம ரஸம் நிரம்பிய ஸாகரத்தில் மூழ்கி மூர்ச்சையானார்.

अन्तर्दधे तथा देवी कटाक्षञ्च विधाय सा ।
प्रज्ञामवाप सहसा भक्तश्रेष्ठो महामतिः ॥ २५ ॥

25. கடாக்ஷம் செய்து தேவி மறைந்தாள். பக்த ச்ரேஷ்டரும், மஹாஞானியுமான அரணு, உடனே வெளி நினைவு அடைந்தார்.

तदाप्रभृति भक्तोऽयं गोपीभावेन संयुतः ।
विवेद सर्वं वैचित्र्यं कृष्णप्रेमरसस्य तु ॥ २६ ॥

26. அன்று முதல் பக்தரான இவர், கோபீ ப்ரேமையுடன் கூடியவராய் க்ருஷ்ணப்ரேம ரஸத்தின் விசித்ரமான முறைகளை அறிந்தார்.

समबुद्ध्या कर्मयोगं कर्तुमिच्छन्ति केचन ।
सर्वं श्रीकृष्णलीलेति चिन्तयेत्यरणोऽब्रवीत् ॥ २७ ॥

27. ஸமபுத்தியுடன் கர்ம யோகத்தைச் செய்ய சிலர் விரும்புகின்றனர்; 'எல்லாம் ஸ்ரீ க்ருஷ்ண லீலை என்று நினை' என்று அரணு உபதேசித்தார்.

अभ्यासेन ध्यानयोगं कर्तुमिच्छन्ति केचन ।
न शक्नुवन्ति विस्मर्तुं गोविन्दं अरणप्रियाः ॥ २८ ॥

28. யோகாப்யாஸத்தினுல் த்யானம் செய்ய சிலர் விரும்புகின்றனர்; அரணுவின் சிஷ்யர்களுக்கோ கோவிந்தனை மறக்க முடியவில்லை.

आत्मानात्मविचारेण वेदान्तपठनेन किम् ।
अहं श्रीकृष्णदासीति भावयेत्यरणोऽवदत् ॥ २९ ॥

29. ஆத்மா எது? ஆத்மா அல்லாதது எது? என்னும் விசாரத்தினுலும், வேதாந்தம் படிப்பதாலும் என்ன பயன்? 'நான் க்ருஷ்ணதாஸி என்று நினைத்திரு என்று அரணு உபதேசித்தார்.

क्रियाविशेषैर्वैदीका जगद्विस्मापयन्ति च ।
प्रेम कुर्वन्ति सर्वत्र सानन्दमरणाश्रयाः ॥ ३० ॥

30. வைதிகர்கள் ஆடம்பரமான க்ரியைகளால் உலகை வியக்கச் செய்கின்றனர். அரணுசிஷ்யர் களோ ஆனந்தமாக எங்கும் ப்ரேமை காட்டுகின்றனர்.

गृहं दारान् धनं त्यक्त्वा पर्यटन्ति च केचन ।
गृहस्था अपि ते भक्ता न मुह्यन्त्यरणादरात् ॥ ३१ ॥

31. வீடு, மனைவி, தனம் இவைகளைவிட்டு சிலர் அலைகின்றனர்; பக்தர்களான அரணு சிஷ்யர்களோ வீட்டிலிருந்தும் மயங்குவதில்லை.

जटाश्च वल्कलं दण्डं धारयन्ति च केचन ।
आनन्दबाष्पं पुलकं धारयन्त्यरणात्मकाः ॥ ३२ ॥

32. ஜடை, மரவுரி, தண்டம் இவைகளைச் சிலர் தரிக்கின்றனர்; ஆனந்தக் கண்ணீரையும், மேனி சிலிர்ப்பையும் அரணு சிஷ்யர்கள் தரிக்கின்றனர்.

सत्सङ्गाय गृहं त्यक्त्वा व्रजन्त्यन्यत्र केचन ।
पश्यन्ति श्रीकृष्णरतिं स्वगृहेष्वरणाश्रयाः ॥ ३३ ॥

33. ஸத்ஸங்கத்திற்காக வீட்டைவிட்டு சிலர் வெளியேறுகின்றனர். அரணு சிஷ்யர்களோ தன் வீட்டிலேயே க்ருஷ்ணபக்தியைக் காண்கின்றனர்.

एवं त्वरणमाहात्म्यं प्रत्यक्षमिह दर्शितम् ।
जानन्त एव जानन्ति किं बहूक्त्या ममाधुना ॥ ३४ ॥

34. இவ்வாறு அரணுவின் மஹிமை ப்ரத்யக்ஷமாய் இங்கு காட்டப்பட்டது. பல சொல்லி என்ன பயன்? அறியக்கூடியவர்களே அறிவார்கள்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीअरणचरितं नाम
चतुर्दशोऽध्यायः ॥ १४ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையில் பத்தாவது பாகத்தில்
அரணு சரிதத்தில் பதினான்காம்
அத்தியாயம் முற்றும்.

॥ अथ पञ्चदशोऽध्यायः ॥

பதினைந்தாம் அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

नामदेवसमो भक्तो ज्ञानेश्वरसमो गुरुः ।
पाण्डुरङ्गसमो देवो नास्त्येव न हि संशयः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. நாமதேவருக்கு நிகரான பக்தரோ, ஞானேச்வரருக்கு நிகரான குருவோ, பாண்டுரங்கனுக்குச் சமமான தெய்வமோ இல்லவே இல்லை.

पण्डरीसदृशं क्षेत्रं तीर्थं भीमरथीसमम् ।
अभङ्गसदृशं शास्त्रं नास्त्येव न हि संशयः ॥ २ ॥

2. பண்டரிக்கு ஸமமான க்ஷேத்ரமோ, பீமரதிக்கு ஸமமான தீர்த்தமோ, அபங்கங்களுக்கு நிகரான சாஸ்த்ரமோ இல்லவே இல்லை.

लौकिकं वैदिकं कर्म विस्मृत्य प्रेमपूरितः ।
हरिं ध्यायति यो भक्तः स हि सर्वोत्तमः स्मृतः ॥ ३ ॥

3. லௌகிக வைதிக கர்மாக்களை மறந்து ப்ரேமை நிரம்பி எந்த பக்தன் ஹரியை த்யானிக்கிருனோ அவனே மிகவும் சிறந்தவன்.

हानिञ्च सर्वधर्माणां ज्ञात्वा दोषं कलेरपि ।
ददाति यो हरेर्नाम स हि सर्वोत्तमो गुरुः ॥ ४ ॥

4. கலியினுடைய தோஷத்தையோ, எல்லா தர்மங்களுடையவும் ஹானியையோ அறிந்து எவன் ஹரிநாமத்தை உபதேசிக்கிருனோ அவனே மிகவும் சிறந்த குரு.

वैकुण्ठपतिरप्येवमपि साक्षाच्छ्रियः पतिः ।
मोदते सह भक्तैर्यस्तस्य कः सदृशो हरेः ॥ ५ ॥

5. எவன் வைகுண்டபதியாயினும், லக்ஷ்மீபதி யாயினும், ப்ரத்யக்ஷமாக பக்தர்களுடன் கூடி ஆனந்தப்படுகிருனே அந்த பாண்டுரங்கனுக்கு நிகர் யார்?

वसन्ति वैष्णवा यत्र श्रूयते च हरिध्वनिः ।
तदेव पावनं क्षेत्रं परमं भुवनत्रये ॥ ६ ॥

6. எங்கு வைஷ்ணவர்கள் வஸிக்கிருர்களோ, எங்கு ஹரிநாபகீர்த்தனம் கேட்கிறதோ அதுவே மூவுலகிலும் சிறந்த தூய க்ஷேத்ரமாகும்.

नित्यश्च वैष्णवा यत्र हरिस्मरण पूर्वकम् ।
मज्जन्ति पावनं तीर्थं तदेव न हि संशयः ॥ ७ ॥

7. தினமும் வைஷ்ணவர்கள் 'ஹரி, ஹரி' என்று சொல்லிக்கொண்டு எங்கு நீராடுகின்றனரோ அதுவே தூய தீர்த்தமாகும்.

यस्मिन्नेव प्रतिपदं नृहरेर्नामवैभवम् ।
दृश्यते तस्य शास्त्रस्य तुल्यं शास्त्रं न विद्यते ॥ ८ ॥

8. எந்த சாஸ்த்ரத்தில் சொல்லுக்குச் சொல் நரஸிம்மனின் நாம மஹிமையே காணப்படுகிறதோ அதற்கு நிகரான சாஸ்த்ரம் வேறு இல்லே.

आसीत्पूर्वं चेन्नपुर्यां विरक्तो ब्राह्मणोत्तमः ।
नाम्ना कोदण्डरामार्यो विठ्ठलध्यानतत्परः ॥ ९ ॥

9. முன்பு சென்னையில் பாண்டுரங்க த்யானமே லக்ஷ்யமாகக் கொண்டவரும், விரக்தி உடையவருமான கோதண்டராமய்யர் என்னும் ஒரு பிராம்மணோத்தமர் இருந்தார்.

आषाढशुक्लैकादश्यां गन्तुं श्रीपण्डरीपुरम् ।
इच्छन् कार्यालयं गत्वा ययाचेऽनुमतिं महान् ॥ १० ॥

10. அந்த மஹான் ஆடிமாதத்து சுக்லபக்ஷத்து ஏகாதசியில் பண்டரிபுரம் போக விரும்பி கார்யாலயம் சென்று அனுமதியை வேண்டினார்.

पाश्चात्यः क्रैस्तवः स्वामी ददावनुमतिं न च ।
चिन्तामवाप भक्तश्च बहुधा दूनमानसः ॥ ११ ॥

11. வெள்ளையரும், கிறிஸ்தவருமான தலைவர் அனுமதி தரவில்லை. பக்தனோ மனம் வருந்தி பலவாறு சிந்திக்கலானார்.

अर्थसंपादनं त्यक्त्वा सुखं जीवन्ति पक्षिणः ।
यदृच्छालाभसन्तुष्टाः स्वच्छन्दं सञ्चरन्ति हि ॥ १२ ॥

12. இந்த பக்ஷிகள் பணம் ஈட்டுவதை விட்டு ஸுகமாக ஜீவிக்கின்றன. கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷமடைந்து, ஸ்வதந்திரமாய் ஸஞ்சரிக்கின்றன.

किन्तु मर्त्यमुपाश्रित्य मर्त्या दुःखसमाकुलाः ।
स्वातन्त्र्यरहिता लोके जीवन्ति किल दुर्भगाः ॥ १३ ॥

13. ஆனால் மனிதர்களோ மனிதனை ஆச்ரயித்து ஸ்வதந்திரத்தை இழந்து, துக்கத்தினால் கலங்கி, உலகில் துர்பாக்யசாலிகளாக ஜீவிக்கின்றார்கள் அன்றோ!

तथाहमपि निर्लज्जो व्यर्थमेवोदरंभरः ।
विस्मृत्य पाण्डुरङ्गं तु पाश्चात्यमिममाश्रितः ॥ १४ ॥

14. அவ்வாறே நானும் வெட்கமில்லாமல் வீணாய் வயிறு வளர்ப்பவனாய், பாண்டுரங்கனை மறந்து வெள்ளைக்காரனை அண்டியிருக்கிறேன்.

अनन्यनिष्ठं भक्तश्च निर्भयं निर्भरं तथा ।
शरण्यः सर्वलोकानां किं न रक्षति मां प्रभुः ॥ १५ ॥

15. வேறு கதியில்லை என்று சரணடைந்து, பயமும், பாரமும் அற்றவனாய், இருப்பேனாகில் யாவருக்கும் புகலிடமான ப்ரபு, பக்தனான என்னை ரக்ஷிக்க மாட்டானா என்ன?

श्वः करिष्यामि तद्भक्तिमिति केचिद्वदन्ति हि ।
पश्चादेवस्थितं मृत्युं ते न जानन्ति वञ्चकाः ॥ १६ ॥

16. நாளைக்கு அந்த பக்தியைச் செய்வேன் என்று சிலர் சொல்லுகின்றனர். அந்த வஞ்சகர்கள் பின்புறமாய் நிற்கும் யமனை நிச்சயம் அறியவில்லை.

तस्माद‌द्यैव सहसा निर्भयो निर्भरस्त्वहम् ।
सन्निधिं पाण्डुरङ्गस्य गमिष्यामि न संशयः ॥ १७ ॥

17. ஆகையால் நான் இப்பொழுதே உடனேயே பயமும், பாரமும் அற்று பாண்டுரங்கனின் ஸந்நதிக்குப் போகப்போகிறேன். ஸந்தேகமில்லை.

एवं निश्चित्य भक्तेन्द्रः स्वच्छन्दं प्रेमतत्परः ।
त्वरया पण्डरीं गत्वा पाण्डुरङ्गं ददर्श सः ॥ १८ ॥

18. சிறந்த பக்தரான அவர், இவ்வாறு நிச்சயித்து ஸ்வதந்த்ரமாய், ப்ரேமையுடன் விரைவில் பண்டரிபுரம் சென்று பாண்டுரங்கனை தரிசனம் செய்தார்.

साकं भागवतैस्तत्र कृत्वा सन्दर्शनं हरेः ।
विलुठन् प्राप चानन्दं तेषां पादाब्जरेणुषु ॥ १९ ॥

19. பாகவதர்களுடன் கூடி, ஹரியை தரிசனம் செய்து, அடியார்களின் பாததூளியில் புரண்டு, பேரானந்தம் அடைந்தார்.

महोत्सवे समाप्ते तु पुनश्चेन्नपुरीं गतः ।
कार्यालयं स्वमागत्य पाश्चात्यं तं ददर्श च ॥ २० ॥

20. உத்ஸவம் முடிந்ததும், சென்னைக்குத் திரும்பி வந்து தனது கார்யாலயத்திற்கு வந்து வெள்ளைக்காரரான தலைவரைக் கண்டார்.

कुपितः स च तं प्राह बहिर्याहीति निर्घृणः ।
कोदण्डरामदासोपि लेभे च परमां मुदम् ॥ २१ ॥

21. அவரும் வெகுண்டு 'வெளியே செல்' என்று இரக்கமில்லாமல் சொன்னார். கோதண்டராம தாஸரும் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

वीणामादाय सहसा पदशिञ्जितनूपुरः ।
अंशुकावेष्टितशिरास्तुलसीमणिभूषितः ॥ २२ ॥
कीर्तयन् हरिनामानि पुलकाङ्कितविग्रहः ।
आनन्दबाष्पपूर्णाक्षो वीथ्यां वीथ्यां चचार सः ॥ २३ ॥

22 - 23. உடனே வீணையைக் கையிலேந்தி கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு, தலையில் ப்ரபன்ன பாகை அணிந்து, துளஸிமணிமாலை தரித்து, மேனி சிலிர்த்தவராய், ஆனந்தக்கண்ணீர் நிரம்பியவராய், ஹரி நாம கிர்த்தனம் செய்துகொண்டு வீதி தோறும் அலைந்தார்.

शिलोञ्छवृत्त्या सन्तुष्टो विरक्तो विजितेन्द्रियः ।
गृहस्थोपि महाधीरो निश्चिन्तो निर्भरोऽभवत् ॥ २४ ॥

24. அவர் இல்லறத்திலிருந்தும் உஞ்ச வ்ருத்தியால் ஸந்தோஷப்படுகின்றவராகவும், விரக்தியுடையவராகவும், புலன்களை வென்றவராகவும், கவலையும் பாரமும் அற்ற தீரராகவும் இருந்தார்.

तन्नामकीर्तनानन्दमोहिता बहवो जनाः ।
तमेव पूजयामासुः शिष्यभूता दिने दिने ॥ २५ ॥

25. அவரது நாமகீர்த்தன ஆனந்தத்தில் மயங்கிய பல ஜனங்கள் சிஷ்யர்களாக ஆகி தினந்தோறும் அவரையே பூஜித்தனர்.

अयाचितधनोप्येष महाभागवतोत्तमः ।
निर्ममे पाण्डुरङ्गस्य चेन्नपुर्यां च मन्दिरम् ॥ २६ ॥

26. பிறரிடம் தனத்தை யாசிக்காதவராயும், மஹாபாகவதோத்தமரான இவர் சென்னையில் பாண்டுரங்கனுக்கு ஒரு கோயிலை அமைத்தார்.

तत्रापि स्थापयित्वा तं विठ्ठलं रुक्मिणीपतिम् ।
नित्योत्सवं तथा कुर्वंश्चकार सुखजीवनम् ॥ २७ ॥

27. அந்த கோவிலில் ருக்மணி ஸமேதனுன பாண்டுரங்கனை ப்ரதிஷ்டை செய்து அவ்வாறே நித்யோத்ஸவம் நடத்திக்கொண்டு ஸுகமாய் வாழ்ந்தார்.

नित्यं शिष्यसहस्रेण सञ्चरन् पृथिवीतले ।
जगदानन्दयामास हरिसङ्कीर्तनेन सः ॥ २८ ॥

28. அவர் தினமும் ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுடன் ஹரிநாமகிர்த்தனம் செய்துகொண்டு, பூமியில் ஸஞ்சரித்து உலகை ஆனந்தப்படுத்தினுர்.

रामचन्द्रहरिश्चैवं अरणो रसिकोत्तमः ।
श्रीभागवतवक्ता च श्रीनारायणपण्डितः ॥ २९ ॥
अन्ये च वैष्णवाश्चासन् सत्सङ्गे तस्य सुव्रताः ।
तैः सार्धं प्रेमभावेन कीर्तयामास विठ्ठलम् ॥ ३० ॥

29-30. ராமசந்திர ஹரி, ரஸிகோத்தமரான அரணு, ஸ்ரீ பாகவத வக்தாவான ஸ்ரீ நாராயண பண்டிதர், மற்றும் பல வைஷ்ணவர்கள், அவருடைய ஸத்ஸங்கத்தில் இருந்தனர். அவர்களுடன் கூடி ப்ரேமையுடன் பாண்டுரங்கனை கிர்த்தனம் செய்தார்.

कोदण्डरामचरितं यः पठेच्छ्रद्धया नरः ।
स प्राप्नुयात्परां भक्तिं विरक्तिं विषयेष्वपि ॥ ३१ ॥

31. எவனெருவன் கோதண்டராம சரிதத்தை ச்ரத்தையுடன் படிப்பானே அவன் சிறந்த பக்தியையும், விரக்தியையும் அடைவான்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे कोदण्डरामचरितं नाम
पञ्चदशोऽध्यायः ॥ १५ ॥

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
கோதண்டராம சரிதத்தில் பதினைந்தாம்
அத்யாயம் முற்றும்.

॥ अथ षोडशोऽध्यायः ॥

பதினாறும் அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

लोकेस्मिन्नन्नवस्त्राय यत्नं कुर्वन्ति सन्ततम् ।
न कोपि यतते हन्त कर्तुं श्रीकृष्णदर्शनम् ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1\. இவ்வுலகில் உணவிற்கும் உடைக்கும் எப்பொழுதும் முயற்சிக்கின்றனர். ஆனால் ஒருவன் கூட பகவானைக் காண முயற்சிப்பதில்லை. அந்தோ!

दृढविश्वासयुक्तानां भक्तिमार्गानुगामिनाम् ।
भगवान् सुलभो नूनमन्येषां दुर्लभोपि सः ॥ २ ॥

2\. அந்த பகவான் மற்றவர்களுக்கு துர்லபன். ஆயினும் திட நம்பிக்கையுடன் பக்திமார்கத்தில் செல்லுபவர்களுக்கு நிச்சயமாய் சுலபன்.

मन्दाः सुमन्दमतयो मन्दभाग्याः कलौ नराः ।
असमर्था हरिं द्रष्टुं प्राप्नुवन्ति हि संशयम् ॥ ३ ॥

3. மந்தபுத்தி உடையவர்களும், பாக்யஹீனர்களும், தாமஸகுணம் உடையவர்களுமான மக்கள் கலியில் பகவானைக்காண சாமர்த்திய மற்றவர்களாய் பகவானிடம் ஸந்தேஹமடைகின்றனர்.

किन्तु विश्वाससंयुक्ता महात्मानो जितेन्द्रियाः ।
वशीकुर्वन्ति गोविन्दं प्रेमभावेन केचन ॥ ४ ॥

4. ஆனால், திடநம்பிக்கை உடையவர்களும், புலன்களை வென்றவர்களுமான சில மஹான்கள் ப்ரேம பக்தியால் கோவிந்தனை வசப்படுத்துகின்றனர்.

अहीन्द्रनगरे कश्चिदासीद्वैष्णवपुङ्गवः ।
नाम्ना वेङ्कटरङ्गार्यो रामानुजकुलोद्भवः ॥ ५ ॥

5. திருவஹீந்திரபுரத்தில் ராமானுஜ குலத்தில் தோன்றிய 'வெங்கடரங்கய்யங்கார்' என்கிற ஒரு சிறந்த வைஷ்ணவர் இருந்தார்.

तस्य पद्मावती नाम भार्याऽऽसीत्सुगुणाकरा ।
साध्वी शान्तस्वभावा च सज्जनार्चनतत्परा ॥ ६ ॥

6. அவருக்கு நற்குணம் உடையவளும், நன்னடத்தை உடையவளும், சாந்தமான சுபாவம் உடையவளும், ஸாதுக்களைப் பூஜிப்பதில் ஊக்கமுடையவளுமான 'பத்மாவதி' என்கிற மனைவி இருந்தாள்.

तौ दम्पती पुत्रहीनौ हरिकैङ्कर्यतत्परौ ।
देवनाथं कृपासिन्धुं प्रार्थयामासतुः सदा ॥ ७ ॥

7. பகவானுக்குத் தொண்டு செய்யும் அந்த தம்பதிகள் புத்திரபாக்கிய மில்லாதவர்களாய் கருணைக்கடலான தேவநாதனை எப்பொழுதும் வேண்டி வந்தார்கள்.

आज्ञया देवदेवस्य जगन्नाथस्य चक्रिणः ।
अनयोः पुत्रभावेन जातः साक्षाद्भृगुर्मुनिः ॥ ८ ॥

8. தேவதேவனும் ஜகன்னாதனுமான சக்ர பாணியின் உத்தரவினால் ஸாக்ஷாத் பிருகு முனிவரே இவர்களுக்குப் புத்திரனாகத் தோன்றினார்.

गोपालदेशिक इति नाम चक्रे द्विजोत्तमः ।
परमानन्दसंयुक्तः पुत्रवात्सल्यमोहितः ॥ ९ ॥

9. அந்த அந்தணர் புத்திர வாத்ஸல்யத்தினால் பரமானந்த மடைந்து 'கோபாலதேசிகன்' என்று பெயரிட்டார்.

आजन्मवैष्णवः सोपि शठकोप इव स्वयम् ।
नित्यानित्यविवेकेन वैराग्यं प्राप निर्मलम् ॥ १० ॥

10. அந்த பாலகனும் நம்மாழ்வாரைப்போல் பிறவியிலிருந்தே வைஷ்ணவனாயிருந்ததால் தானாகவே நித்யம் எது அனித்யம் எது என்கிற விவேகத்தினால் குற்றமற்ற விரக்தியை அடைந்தான்.

सन्तत कीर्तयन् विष्णोर्नामानि मधुराणि सः ।
त्यक्तक्रीडनको बालश्चचार भुवि निर्भयम् ॥ ११ ॥

11. அந்த பாலகன் மதுரமான ஹரிநாமத்தை எப்பொழுதும் கீர்த்தனம் செய்துகொண்டு விளையாட்டுப் பொருள்களில் பற்றுதல் இல்லாமல் உலகில் பயமற்று ஸஞ்சரித்தான்.

कान्तारेपि श्मशानेपि पर्वतेपि नदीतटे ।
आसीनश्चिन्तयन् कृष्णं प्रललाप स बालकः ॥ १२ ॥

12. அந்த பாலகன் காட்டிலும், மயானத்தி லும், மலையிலும், ஆற்றங்கரையிலும் அமர்ந்து கிருஷ்ணனைத் தியானித்துப் புலம்புவான்.

श्रीगोपालदेशिक उवाच

देवनाथ जगन्नाथ मम नाथ श्रियःपते ।
शीघ्रमेव कृपासिन्धो देहि मे तव दर्शनम् ॥ १३ ॥

ஸ்ரீ கோபால தேசிகன்

13. தேவநாத! ஜகன்னாத! லக்ஷ்மீநாத! என் னுடைய நாத! சீக்கிரமாகவே எனக்கு உமது தரிசனந்தருவீராக.

त्वयैव सृष्टे भुवने रमन्ते जीवकोटयः ।
अहमेको भीतभीतः क्रन्दामि करुणार्णव ॥ १४ ॥

14. கருணைக்கடலே! உம்மால் படைக்கப் பட்ட உலகில் எல்லா ஜீவகோடிகளும் சுகப்படுகின் றனர். நான் ஒருவன் மட்டும் பயந்து பயந்து அழுகிறேன்.

नय मां तव पादाब्जमलं लीलारसेन ते ।
नाहमिच्छामि देहेऽस्मिन् वासं मलनिकेतने ॥ १५ ॥

15. என்னை உனது திருவடிக்கு அழைத்துச் செல். உனது திருவிளையாடல் போதும். மலத்திற்கு இருப்பிடமான இந்த உடலில் வசிக்க நான் விரும்ப வில்லை.

अथवा दर्शनानन्दमोहितं मां विधाय ते ।
सदा भक्तिरसोन्मत्तं कुरु मां कमलापते ॥ १६ ॥

16. லக்ஷ்மீநாத! அல்லது உமது தரிசனானந்தத்தினால் மயங்கியவனாய் என்னைச் செய்து எப்பொழுதும் பக்திரஸத்தினால் பித்தேறியவனாகச் செய்வீராக.

या कृपा कलिता पूर्वं प्रह्लादेपि ध्रुवेपि च ।
तां कृपां मयि दीनेपि कुरु देवशिखामणे ॥ १७ ॥

17. தெய்வங்களின் தலைவா! பிரஹ்லாதனிடமும், துருவனிடமும் முன்பு செய்த கிருபையை ஏழையான என்னிடமும் செய்வீராக.

सन्ततं जीवकोटीनां जन्मानि मरणानि च ।
विलोक्य भीतभीतोहं त्वामेव शरणं भजे ॥ १८ ॥

18. ஜீவகோடிகளின் ஓயாத ஜனன மரணங்களைப் பார்த்து மிகவும் பயந்த நான் உம்மையே சரணமடைகிறேன்.

कदा द्रक्ष्याम्यहं देव तवैव चरणाम्बुजम् ।
कदा विरहतापो मे शमनं प्राप्स्यति प्रभो ॥ १९ ॥

19. தேவா! உமது திருவடியை நான் எப்பொழுது பார்ப்பேன்? பிரபுவே! எனது விரஹ தாபம் எப்பொழுது அடங்கும்?

श्रीसद्गुरुरुवाच

एवं हि बहुधा बालः प्रललाप पुनः पुनः ।
एकान्तमनसा नित्यं हरिदर्शनकातरः ॥ २० ॥

20. இவ்வாறு அந்த பாலகன் தினந்தோறும் திடபக்தியுடையவனாய் ஹரியை தரிசனம் செய்யத் துடிப்பவனாய் பலதடவை பலவாறு புலம்புவான்.

पुत्रं वेङ्कटरङ्गार्यः सान्त्वयन् प्रेमपूर्वकम् ।
गृहमानीय भार्यायै तच्चरित्रं न्यवेदयत् ॥ २१ ॥

21. அவனுடைய தந்தை, தனயனை அன்புடன் ஸமாதானம் செய்து வீட்டிற்கு அழைத்துவந்து தன் மனைவியிடம் அவனது சரித்திரத்தை அறிவித்தார்.

तच्चित्तपरिपाकं तु सुराणामपि दुर्लभम् ।
अविज्ञायैव पुत्रे तौ दम्पती प्रेम चक्रतुः ॥ २२ ॥

22. தேவர்களுக்கும் துர்லபமான அவனுடைய சித்தத்தின் பரிபக்குவத்தை அறியாமலேயே புத்திரனிடம் அந்த தம்பதிகள் அன்பு காட்டினார்கள்.

ववृधे बालकोऽप्येवं गूढभावेन संयुतः ।
आनन्दयन् स्वपितरौ लोकसामान्यपुत्रवत् ॥ २३ ॥

23. இவ்வாறு ரஹஸ்யமான மனோநிலை உடைய பாலகனும், உலக சாதாரண புத்திரனைப் போல் தனது பெற்றோர்களை ஆனந்தப்படுத்திக் கொண்டு வளர்ந்தான்.

किन्तु शान्ति न लेभेऽयं भगवद्दर्शनं विना ।
मनसा चिन्तयन्नित्यं देवनाथं श्रियः पतिम् ॥ २४ ॥

24. ஆனால் இந்த பாலகன் லக்ஷ்மீநாதனான தேவநாதனை எப்பொழுதும் மனதினால் சிந்தித்த

வாறு பகவானின் தரிசனம் கிடைக்கப் பெருமல் சாந்தியடையவில்லை.

कदाचित्पितरौ त्यक्त्वा हरिदर्शनकांक्षया ।
गोपालदेशिको बालः श्रीरङ्गक्षेत्रमाप सः ॥ २५ ॥

25. குழந்தையான அந்த கோபால தேசிகன் ஒரு ஸமயம் பெற்ருேர்களைவிட்டு ஹரியை தரிசனம் செய்யும் ஆசையால் ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்தை அடைந்தான்.

कावेरीतटमागत्य बहुधा प्रललाप सः ।
अन्नपानादिरहितो विनिद्रो दुःखितो भृशम् ॥ २६ ॥

26. அவன் அன்னபானமில்லாமலும், தூக்கமில்லாமலும் மிகவும் துக்கித்தவனுய் காவேரிக் கரையை அடைந்து பலவாறு புலம்பினுன்.

किन्तु साक्षाद्दर्शनं तु न ददौ जगदीश्वरः ।
दिनत्रये गतेऽप्येवं तस्मात्तापमुपेयिवान् ॥ २७ ॥

27. ஆனுல் இவ்வாறு மூன்று நாட்கள் ஆகியும் பகவான் பிரத்தியக்ஷமாய் தரிசனந்தரவில்லை. எனவே அவன் தவித்துப்போனுன்.

विप्रो वेङ्कटरङ्गार्यः पुत्रान्वेषणतत्परः ।
पुत्रपुत्रेति विलपन्नितरां दुःखितोऽभवत् ॥ २८ ॥

28. பிராம்மணரான வேங்கடரங்கய்யங்காரும் புத்திரனைத் தேடுவதையே லக்ஷியமாகக்கொண்டு "புத்திர! புத்திர!!" என்று புலம்பி மிகவும் துக்கித்தவராக ஆனுர்.

एकपुत्रा च साध्वी सा नितरां प्रललाप ह ।
प्रियं पुत्रमपश्यन्ती राममाता यथा पुरा ॥ २९ ॥

29. ஒரே புத்திரனை உடைய அந்த பதிவிரதை யும் செல்லக் குழந்தையைக் காணுமல் முன்பு கௌஸல்யை புலம்பினதுபோல் மிகவும் புலம்பினாள்.

एतस्मिन्नन्तरे विप्रो यात्रिकस्य मुखेन तु ।
रङ्गक्षेत्रगतं पुत्रं ज्ञात्वा शान्तिमवाप सः ॥ ३० ॥

30. இதற்கிடையில் அந்த அந்தணர் யாத்ரிகரின் முகமாய் தனது புத்திரன் ஸ்ரீ ரங்கத்தில் இருப்பதை அறிந்து நிம்மதியடைந்தார்.

सद्यः श्रीरङ्गमागत्य कावेरीपुलिने स्थितम् ।
पुत्रं विलोक्य सानन्दं कृपया परिषस्वजे ॥ ३१ ॥

31. உடனே ஸ்ரீரங்கம் வந்து காவேரிக்கரையிலுள்ள புத்திரனைக்கண்டு ஆனந்தமடைந்து அவனைக் கட்டிக்கொண்டார்.

गोपालदेशिकं प्रेम्णा गृहमानीय वैष्णवः ।
बहुधा सान्त्वयामास भगवद्विरहाकुलम् ॥ ३२ ॥

32. அந்த வைஷ்ணவர் கோபாலதேசிகனை பிரேமையுடன் வீட்டிற்கு அழைத்துவந்து பகவானின் விரஹத்தினுல் வருந்திய அவனைப் பலவாறு ஸமாதானம் செய்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीराजगोपालदेशिकस्वामिचरितं
नाम षोडशोऽध्यायः ॥ १६ ॥

இவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீராஜகோபாலதேசிக ஸ்வாமிகள் சரிதம்
என்னும் பதினாறாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथ सप्तदशोऽध्यायः ॥

பதினேழாம் அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

गृहं सर्वात्मना त्यक्त्वा वनं गत्वा च केचन ।
साधनानि प्रकुर्वन्ति स्वात्मानं ज्ञातुमिच्छया ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. சிலர் முற்றிலும் வீட்டை விட்டு காட்டை அடைந்து ஆத்மக்ஞானத்திற்காக ஸாதனைகள் செய்கின்றனர்.

किन्तु भक्ताश्च बहवस्त्यक्तसंसारवासनाः ।
गृहस्था एव गोविन्दं भजन्ते प्रेमपूर्वकम् ॥ २ ॥

2. ஆனால் பக்தர்களோ ஸம்ஸாரவாஸனை நீங்கப் பெற்றவர்களாய் இல்லறத்தில் இருந்து கொண்டே பிரேமையுடன் கோவிந்தனை பஜிக்கின்றனர்.

अन्ये केचिदविद्वांसो मौढ्येनैव बलीयसा ।
अविचार्य गृहं त्यक्त्वा कामयन्ते पराङ्मुखाः ॥ ३ ॥

3. மற்றும் பல மூடர்கள் பலமான மூடத்தனத்தால் ஆலோசிக்காமலேயே வீட்டை விட்டு பிறர் மனைவியை விரும்புகின்றனர்.

गार्हस्थ्ये चापि सन्यासे भेदो नास्ति महात्मनाम् ।
माहात्म्यं कृष्णभक्त्यैव प्राप्यते लोकपूजितम् ॥ ४ ॥

4. பெரியோர்களுக்கு இல்லறத்திலோ, துறவறத்திலோ பேதமில்லை. உலகம் போற்றும் மஹிமை கிருஷ்ண பக்தியாலேயே அடையப்படுகிறது.

यथाकथञ्चिल्लोकेऽस्मिन्निवसन् विजितेन्द्रियः ।
गोविन्दमेव सततं भजेद्विश्वासपूर्वकम् ॥ ५ ॥

5. எப்படியாவது உலகில் வாழ்ந்துகொண்டு, புலன்களை அடக்கி, திடநம்பிக்கையுடன் எப்பொழுதும் கோவிந்தனையே பஜிக்க வேண்டும்.

इति निश्चित्य मनसा राजगोपालदेशिकः ।
लक्ष्मीनाम्न्यास्तु कन्यायाः पाणिं जग्राह पाणिना ॥ ६ ॥

6. இவ்வாறு மனதில் நிச்சயித்து ராஜகோபால தேசிகர் லக்ஷ்மி என்கிற கன்னிகையை கைபிடித்தார்.

पितरौ पूजयन्नित्यं भार्ययाप्यनुकूलया ।
धर्मान् गृहोचितान् धीमानाचचार यथाक्रमम् ॥ ७ ॥

7. அனுகூலமான மனைவியுடன் தினமும் பெற்றோர்களைப் பூஜித்துக்கொண்டு ஞானியாகிய அவர் முறைப்படி இல்லறத்தை நடத்தி வந்தார்.

भगवद्दर्शने नित्यं दाहोपि ववृधे तथा ।
न सुखं प्राप धीरोऽसौ लौकिकेष्वपि कर्मसु ॥ ८ ॥

8. ஆயினும் பகவானைக் காணும் தாகம் தின மும் வளர்ந்துகொண்டே வந்தது. தீரனுகிய இவர் லௌகிக வேலைகளில் சுகமடையவில்லை.

सन्ततं कीर्तयन् ध्यायन् कथयन् प्रलपन् हरिम् ।
भार्यया सह सानन्दं कालक्षेपश्चकार सः ॥ ९ ॥

9. அவர் எப்பொழுதும் ஹரியை தியானம் செய்துகொண்டும், கீர்த்தனம் செய்துகொண்டும் புலம்பிக் கொண்டும், மனைவியுடன் ஆனந்தமாய் ஹரி கதையைப் பேசிக்கொண்டும் பொழுது போக் கினுர்.

तथापि प्रेमदाहेन भार्यां त्यक्त्वापि बान्धवान् ।
श्रीवेङ्कटगिरिं प्राप विरक्तो वैष्णवोत्तमः ॥ १० ॥

10. அப்படிக்கிருந்த போதிலும் வைஷ்ண வோத்தமரான இவர் ப்ரேமதாகத்தினுல் மனைவியை யும், பந்துக்களையும் விட்டு, விரக்தி அடைந்தவராய், திருப்பதிமலைக்குச் சென்ருர்.

धृत्वा कौपीनमेकं तु त्यक्त्वा सर्वं धनादिकम् ।
विवेश काननं घोरं सिंहव्याघ्रवृकाकुलम् ॥ ११ ॥

11. பணம் முதலியவைகளை எறிந்து விட்டு, ஒரு கௌபீனம் மட்டும் அணிந்து, சிங்கம், புலி, நரி இவைகள் நடமாடும் கோரமான வனத்தில் பிர வேசித்தார்.

तत्रैकस्मिन् मण्टपे तु निषण्णो दुःखितो भृशम् ।
बहुधा चिन्तयामास राजगोपालदेशिकः ॥ १२ ॥

12. ராஜகோபால தேசிகன் அங்கு ஒரு மண்டபத்தில் அமர்ந்து, மிகவும் வருந்தி பலவாறு சிந்திக்கலானார்.

केन सृष्टं जगदिदं केन वा परिपाल्यते ।
केन वा ह्रियतेऽप्यन्ते कोऽसौ कुत्र वसत्ययम् ॥ १३ ॥

13. இவ்வுலகைப் படைத்தவர் யார்? இவ்வுலகைக் காப்பவர் யார்? இவ்வுலகை அழிப்பவர் யார்? அவர் எங்கு வஸிக்கிறார்?

तमेव द्रष्टुमिच्छामि बाल्यात्प्रभृति दुःखितः ।
तथापि मे नेत्रपथं नायाति भगवान् किल ॥ १४ ॥

14. பால்யம் முதற்கொண்டு துயரத்துடன் அவரையே காண விரும்புகிறேன். ஆனாலும் அந்த பகவான் என் கண்ணெதிரில் வரவில்லை அல்லவா?

अस्ति चेदीश्वरो विष्णुरायात्वस्मिन् दिने स्वयम् ।
नास्ति चेदिह सिंहस्य भक्ष्यत्वमस्तु मे वपुः ॥ १५ ॥

15. ஈச்வரனாகிய விஷ்ணு இருப்பாரேயானால் இன்று தானாகவே வரட்டும். இல்லாவிடில் இப்பொழுது என் உடல் சிங்கத்திற்கு இரையாகட்டும்.

अनीश्वरे तु लोकेऽस्मिन् जीवनान्मरणं परम् ।
इति निश्चित्य मनसा निषसाद महावने ॥ १६ ॥

16. ஈச்வரன் இல்லாவிடில் இவ்வுலகில் ஜீவித்திருப்பதைக் காட்டிலும் மரணமே சிறந்தது. இவ்வாறு மனதால் நிச்சயித்து பெருங்காட்டில் உட்கார்ந்திருந்தார்.

गर्जन्ति स्म मृगास्तत्र सर्पन्ति च भुजङ्गमाः ।
नदन्त्युलूकगृध्राद्याः पक्षिणश्च महावने ॥ १७ ॥

17. அங்கு மிருகங்கள் கர்ஜிக்கின்றன; பாம்புகள் ஓடுகின்றன; கோட்டான், கழுகு முதலிய பக்ஷிகள் கத்துகின்றன.

घोरेण तमसा व्याप्ते नरसञ्चारवर्जिते ।
द्रष्टुकामो हरिं भक्तः प्ररुरोद सुदुःखितः ॥ १८ ॥

18. மனித ஸஞ்சாரமற்ற கோரமான இருள் சூழ்ந்த பெரிய காட்டில் ஹரியைக் காணவேண்டி பக்தன் துயரத்துடன் அழுதார்.

श्रीगोपालदेशिक उवाच

प्रतिज्ञा तव गोविन्द न मे भक्तः प्रणश्यति ।
इति संस्मृत्य संस्मृत्य प्राणान् सन्धारयाम्यहम् ॥१९॥

ஸ்ரீ கோபாலதேசிகர்

19. கோவிந்தா! 'எனது பக்தன் நாசமாக மாட்டான்' என்று உனது ப்ரதிக்ஞை. அதை நினைத்து, நினைத்து நான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

श्रीनिवास दयासिन्धो भक्तं मां सान्त्वय प्रभो ।
सत्यं वदामि गोविन्द त्वमेव शरणं मम ॥ २० ॥

20. கருணைக்கடலே! ப்ரபுவே! ஸ்ரீநிவாஸ! கோவிந்த! பக்தனுகிய என்னை ஸமாதானம் செய். ஸத்தியமாகச் சொல்லுகிறேன். நீரே எனக்கு கதி.

यथाग्नौ पतितः कीटो दुःखं प्राप्नोति दुःसहम् ।
तथाहमस्मिल्लोकेपि दुःखितोस्मि विना त्वया ॥ २१ ॥

21. தீயில் விழுந்த புழு ஸஹிக்கமுடியாத துக்கமடைவதைப்போல் நானும் உம்மை விட்டுப் பிரிந்து இவ்வுலகில் துக்கப்படுகிறேன்.

न गमिष्यामि भवनं त्वामनालोक्य केशव ।
मरणं जीवनं वास्तु सङ्कल्पेन तवैव मे ॥ २२ ॥

22. கேசவ! உன்னைக் காணுமல் வீடு திரும்ப மாட்டேன். உனது திருவுள்ளத்தால் நான் பிழைத்தாலும் ஸரி, இறந்தாலும் ஸரி.

श्रीसद्गुरुरुवाच

गोपालदेशिकश्चैवं प्रलपन् मूर्च्छितोऽभवत् ।
निशान्तरे वने तस्मिन् हरिदासोऽप्यनाथवत् ॥ २३ ॥

ஸ்ரீ ஸத்குரு

23. கோபாலதேசிகர் நள்ளிரவில் அந்தக் காட்டில் ஹரிதாஸராயினும், அனுதைபோல் இவ்வாறு புலம்பி மூர்ச்சை அடைந்தார்.

तदैव करुणासिन्धुर्वेङ्कटेशः श्रियःपतिः ।
भक्तस्य कस्यचित्स्वप्नेप्याविर्भूय जगाद च ॥ २४ ॥

24. அப்பொழுதே, 'கருணைக்கடலும், லக்ஷ்மீ பதியுமான வேங்கடேசன், ஒரு பக்தனின் கனவில் தோன்றி சொன்னுர்'.

श्रीभगवानुवाच

अस्मिन्निशान्तरे घोरे वने चास्मिंश्च मण्टपे ।
अत्यन्तप्रेमभक्तो मे कश्चिदस्ति विमूर्च्छितः ॥ २५ ॥

ஸ்ரீ பகவான்

25. இந்த நள்ளிரவில் கோரமான காட்டில் இந்த மண்டபத்தில் எனது ப்ரேமபக்தன் ஒருவன் மூர்ச்சை அடைந்திருக்கிறான்.

तमानीय महात्मानं प्रेमभक्तिरसोन्मदम् ।
सान्त्वय क्षिप्रमेव त्वं श्रद्धया च ममाज्ञया ॥ २६ ॥

26. எனது ஆக்ஞையால் ப்ரேமபக்தி ரஸத்தினால் மயங்கிய அந்த மஹாத்மாவை சீக்கிரமாக சிரத்தையுடன் நீ அழைத்து வந்து ஸமாதானம் செய்.

श्रीसद्गुरुरुवाच

इति स्वप्नगतस्यास्य गोविन्दस्यानुशासनम् ।
ययौ सद्यो वनं विप्रः सानन्दं शिरसा वहन् ॥ २७ ॥

ஸ்ரீ ஸத்குரு

27. இவ்வாறு கனவில் தோன்றிய கோவிந்தனின் நியமனத்தை தலைமேற்கொண்டு, ஆனந்தமாக அந்த அந்தணர் உடனே காட்டை அடைந்தார்.

तत्र तस्मिन् मण्टपे तं दृष्ट्वा गोपालदेशिकम् ॥
उत्थाप्य श्रद्धया भक्त्या सान्त्वयामास वैष्णवः ॥२८॥

28. அங்கு அந்த மண்டபத்தில் கோபாலதேசிகரைக்கண்டு சிரத்தையுடனும், பக்தியுடனும் எழுப்பி ஸமாதானம் செய்தார்.

तथापि गृहमागन्तुं नानुमेने दृढव्रतः ।
हरिमेव द्रष्टुकामो विरक्तो देहधारणे ॥ २९ ॥

29. தேகத்தை வைத்துக்கொண்டிருப்பதில் விரக்தி அடைந்தவரும், ஹரியையே காண விரும்புகிறவரும், த்ருட சித்தமுடையவருமான அவர் வீட்டிற்கு வர ஒப்புக்கொள்ளவில்லை.

गोविन्ददर्शनं स्वप्ने तस्यैवमनुशासनम् ।
निवेदयामास भक्त्या ब्राह्मणोपि ससंभ्रमम् ॥ ३० ॥

30. ப்ராம்மணரும், பரபரப்புடனும், பக்தியுடனும் கனவில் கோவிந்தனைக் கண்டதையும் அந்த பகவானின் நியமனத்தையும் அறிவித்தார்.

तच्छ्रुत्वा राजगोपालः परमाश्चर्यसंयुतः ।
तमाश्लिष्यापि पप्रच्छ भगवद्विषयं मुहुः ॥ ३१ ॥

31. அதைக்கேட்டு ராஜகோபால தேசிகர் மிகவும் வியப்படைந்து, அவரைக் கட்டிக்கொண்டு அடிக்கடி பகவானின் விஷயத்தைக் கேட்டார்.

अहैतुकीं कृपां विष्णोरात्मन्यपि महामतिः ।
चिन्तयन् परमां शान्तिं लेभे गोपालदेशिकः ॥ ३२ ॥

32. சிறந்த ஞானியான கோபாலதேசிகர் தன் னிடமும், பகவானின் காரணமற்ற கருணையை நினைத்து மிகவும் நிம்மதி அடைந்தார்.

सान्त्वयन्नात्मनात्मानमनुज्ञाप्य च तं द्विजम् ।
गृहमेव पुनः प्राप संस्मरन् भगवत्कृपाम् ॥ ३३ ॥

33. தனக்குத்தானே ஸமாதானம் செய்து கொண்டு, அந்த ப்ராமணரை அனுப்பிவிட்டு, பகவானின் கிருபையை நினைத்தவாறு வீட்டிற்கே திரும்பினார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे राजगोपालदेशिकस्वामिचरितं नाम
सप्तदशोऽध्यायः ॥ १७ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ராஜகோபால தேசிக ஸ்வாமி சரித்திரத்தில்
பதினேழாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथ अष्टादशोऽध्यायः ॥

பதினெட்டாவது அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

गुरोरनुग्रहेणैव लभ्यते हरिदर्शनम् ।
तस्माद्गुरुं दीनबन्धुं पूजयेत्सर्वथा नरः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. குருவின் அனுக்கிரஹத்தாலேயே ஹரி தரிசனம் கிட்டும். ஆகையால் மனிதன் தீனபந்துவான குருவை எவ்விதத்திலும் பூஜிக்க வேண்டும்.

गुरुरेव हरिः साक्षाद्धरिरेव गुरुः परः ।
एवं ह्यनन्यभावेन भजेदाचार्यपुङ्गवम् ॥ २ ॥

2. குருவே பிரத்தியக்ஷமான ஹரி. பரம்பொருளான ஹரியே குரு. இவ்வாறு பேதமில்லாமல் குருதேவரிடம் பக்தி செய்யவேண்டும்.

प्राप्तुमिच्छति यो विष्णुं भवबन्धविमोचनम् ।
दृढविश्वाससंयुक्तो गुरुमेव भजेत्सदा ॥ ३ ॥

3. ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்கும் விஷ்ணுவை எவன் அடைய விரும்புகிருனே அவன் திட நம்பிக்கையுடன் எப்பொழுதும் குருவையே பஜிக்க வேண்டும்.

गुरुर्माता गुरुस्तातो गुरुर्बन्धुर्गुरुः सखा ।
गुरुरेव परं दै गुरुरेवचं परा गतिः ॥ ४ ॥

4. குருவே தாய்; குருவே தந்தை; குருவே பந்து; குருவே நண்பன்; குருவே சிறந்த தெய்வம்; குருவே பரகதி,

घोरे संसारकान्तारे भ्रमतामविवेकिनाम् ।
सन्मार्गदर्शको बन्धुर्गुरुरेव परा गतिः ॥ ५ ॥

5. கோரமான ஸம்ஸாரக்காட்டில் அலையும் அக்ஞானிகளுக்கு நல்வழி காட்டும் பந்துவான குருவே சிறந்த கதி.

श्रीकृष्णचक्रवर्तीति नाम्ना वैष्णवपुङ्गवः ।
आसीन्महाभागपुरे राघवध्यानतत्परः ॥ ६ ॥

ज्ञानवैराग्यसंयुक्तः सर्वशास्त्रविशारदः ।
शान्तो दान्तो महाभागः सदाचारसमन्वितः ॥ ७ ॥

6-7. பெரும்பாக்கம் என்னும் ஊரில் ராமத்தியானமே லக்ஷியமாகக் கொண்டவரும், ஞானமும் வைராக்யமும் உடையவரும், ஸகல சாஸ்திரங்களும் அறிந்தவரும், கோபத்தை அடக்கியவரும், புலன்களை அடக்கியவரும், ஆசாரசீலரும், மஹாபாக்யவானுமான 'ஸ்ரீ கிருஷ்ண சக்ரவர்த்தி ஸ்வாமிகள்' என்னும் ஒரு வைஷ்ணவர் இருந்தார்.

गोपालदेशिको भक्त्या तमाश्रित्य सतां वरम् ।
शिष्यभावेन कैङ्कर्यं कुर्वन् प्राप परं सुखम् ॥ ८ ॥

8. கோபாலதேசிகர் ஸாதுக்களில் சிறந்த அவரை சிஷ்யனாக அண்டி பக்தியுடன் கைங்கரியம் செய்துகொண்டு பேரின்பம் பெற்றார்.

रहस्यत्रयसारञ्च वेदान्तगुरुकीर्तितम् ।
एवञ्च भगवद्गीतां शुश्राव स दिने दिने ॥ ९ ॥

9. வேதாந்த தேசிகர் இயற்றிய ரஹஸ்யத்ரய ஸாரத்தையும், பகவத்கீதையையும் தினந்தோறும் அவரிடம் பாடங்கேட்டார்.

प्रवृद्धभक्तिनिष्ठोऽयं राजगोपालदेशिकः ।
प्रबन्धान् दिव्यसूरीणां गायन् गायन् रुरोद ह ॥ १० ॥

10. பக்திநிஷ்டை வளர்ந்த ராஜகோபாலதேசிகர் ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களைப் பாடிப் பாடிக் கதறுவார்.

तस्य भक्तिप्रभावेण स महात्मा वशीकृतः ।
गोपालदेशिकायापि राममन्त्रमुपादिशत् ॥ ११ ॥

11. கோபாலதேசிகரின் பக்திப் பிரவாஹத்தி னல் வசமான அந்த மஹான் அவருக்கு ராம மந்தி ரத்தை உபதேசித்தார்.

गुरोरनुज्ञया नित्यं समाहितमना भृशम् ।
विविक्तस्थानसेवी च जजाप दृढनिष्ठया ॥ १२ ॥

12. குருவின் அனுமதிபெற்று தினமும் தனி மையில் நன்ருக மனதை அடக்கி திடநிஷ்டையுடன் ஜபம் செய்து வந்தார்.

फलमूलाशनो नित्यं रामदर्शनकाङ्क्षया ।
राममन्त्रं जजापायं पुरा प्राचेतसो यथा ॥ १३ ॥

13. ராமதரிசனத்தை விரும்பி காய்கிழங்கு களையே சாப்பிட்டுக்கொண்டு தினமும் இவர் வால் மீகி முனிவரைப்போல் ராமமந்திரத்தை ஜபித்து வந்தார்.

गृहचिन्तां परित्यज्य वनान्तरमुपागतः ।
जजाप कोटिशो नित्यं राममन्त्रं दृढव्रतः ॥ १४ ॥

14. வீட்டுக்கவலையை விட்டு காட்டை அடைந்து தினமும் திடநம்பிக்கையுடன் ராமமந் திரத்தை கோடிக்கணக்காக ஜபித்தார்.

तथापि राजगोपालो न लेभे रामदर्शनम् ।
अवाप दुःसहं तापं सीताऽशोकवने यथा ॥ १५ ॥

15. ஆயினும் அவர் ராமதரிசனம் பெறவில்லை. அசோகவனத்தில் ஸீதைபோல் தாளமுடியாத தாபத்தை அடைந்தார்.

कदाचिद्विपिने घोरे सर्वत्र तमसाकुले ।
भगवद्विरहाक्रान्तो मरणे कृतनिश्चयः ॥ १६ ॥
विस्मृत्य पत्नीं पितरौ शरीरं जीवितं तथा ।
विषञ्चजग्धुमारेभे राम रामेति कीर्तयन् ॥ १७ ॥

16- 17. ஒரு ஸமயம் எங்கும் இருள் சூழ்ந்த கோரமான காட்டில் ராமவிரஹத்தினல் ஆக்ரமிக்கப்பட்டவராய் மரணத்தில் நிச்சயங்கொண்டு உயிர், உடல், பெற்ருேர், மனைவி எதையும் மறந்து 'ராம ராம' என்று கீர்த்தனம் செய்துகொண்டே விஷத்தையும் குடிக்கத் தொடங்கினர்.

तदा तत्रैव भगवान् काकरूपधरो हरिः ।
आगत्य त्वरया तस्य हस्ताद्गरलमग्रहीत् ॥ १८ ॥

18. அப்பொழுது அங்கே பகவானுகிய ஹரி ஒரு காக்கைபோல் விரைவில் வந்து அவரது கையிலுள்ள விஷத்தைக் கொத்திக்கொண்டு ஓடினர்.

विज्ञायेश्वरसङ्कल्पमेवं गोपालदेशिकः ।
सान्त्वयन्नात्मनात्मानं पुनः प्राप गृहं स्वकम् ॥ १९ ॥

19. கோபாலதேசிகர் ஈசுவர ஸங்கல்பத்தை இவ்வாறு அறிந்து தனக்குத்தானே ஸமாதானம் செய்துகொண்டு தன் வீட்டிற்குத் திரும்பி விட்டார்.

अर्चावताररूपं तु प्रतिष्ठाप्य रघूत्तमम् ।
पूजयन् भार्यया नित्यं चकार सुखजीवनम् ॥ २० ॥

20. ஒரு ராமவிக்கிரஹத்தைப் பிரதிஷ்டை செய்து மனைவியுடன் தினமும் பூஜை செய்துகொண்டு ஸுகமாய் காலங்கழித்து வந்தார்.

येनकेन प्रकारेण कुटुम्बमपि पालयन् ।
कालक्षेपं चकारासौ रामकैङ्कर्यतत्परः ॥ २१ ॥

21. எவ்விதத்திலோ குடும்பத்தையும் நடத்திக்கொண்டு ராமகைங்கரியமே லக்ஷியமாய் காலங் கழித்தார்.

श्रीराम राम रामेति कीर्तयन् प्रलपन् रुदन् ।
पठन् रामकथाश्चैव रामभक्तिं चकार सः ॥ २२ ॥

22. 'ஸ்ரீ ராம ராம ராம' என்று கீர்த்தனம் செய்துகொண்டும், புலம்பி அழுதுகொண்டும், ராம கதையைப் படித்துக்கொண்டும், ராமபக்தி செய்து வந்தார்.

कदाचिद्रामपूजां तु कुर्वति श्रद्धया प्रभुः ।
ददौ यदृच्छया तस्मै श्रीरामो दिव्यदर्शनम् ॥ २३ ॥

23. ஒரு ஸமயம் சிரத்தையுடன் ராமபூஜை செய்யும் பொழுது பிரபுவான ஸ்ரீ ராமர் எதிர்பாராமல் அவருக்கு திவ்ய தரிசனம் தந்தார்.

देवं मरकतश्यामं दिव्यक्षौमोत्तरीयकम् ।
विशालवक्षसं रामं पीनायतभुजं प्रभुम् ॥ २४ ॥

पुण्डरीकविशालाक्षं लक्ष्मणेनापि सेवितम् ।
अंसे निषङ्गं हस्तेपि कोदण्डं शरमद्भुतम् ॥ २५ ॥

दधानं वामपार्श्वेपि सीतयालिङ्गितं तथा ।
किरीटकुण्डलधरं त्रिभङ्गिललिताकृतिम् ॥ २६ ॥

गोपालदेशिको दृष्ट्वा दर्शनानन्दमोहितः ।
पपात चरणोपान्ते जानकीरमणस्य सः ॥ २७ ॥

24- 27. மரகத மணிபோல் நீலமானவரும், திவ்யமான பீதாம்பரம் அணிந்தவரும், விசாலமான மார்பு உடையவரும், பருத்த நீண்ட புஜங்கள் உடையவரும், பிரபுவும், தேவனும், தாமரை போன்ற கண்கள் உடையவரும், லக்ஷ்மணரால் ஸேவிக்கப்படுகின்றவரும், தோளில் அம்பறுத் தூணி யும், கையில் கோதண்டமும், பாணமும் தரிப்பவரும், இடது பக்கத்திலுள்ள ஸீதையால் ஆலிங்கனம் பண்ணப் பட்டவரும், கிரீடம் குண்டலம அணிந்த வரும், மூன்று வளைவுடன் நிற்பவருமான ராமரை தரிசனம் செய்து அந்த கோபாலதேசிகர் ஆனந்தத் தினல் மோஹித்து ஜானகிரமணனின் திருவடிகளில் விழுந்தார்.

भक्तमुत्थाप्य सानन्दमालिङ्ग्य च पुनः पुनः ।
सान्त्वयामास भगवान् प्रेमपूर्वं रघूत्तमः ॥ २८ ॥

28. பகவானுகிய ராமர் பக்தனை எழுப்பி ஆனந்தமாகப் பலதடவை ஆலிங்கனம் செய்து கொண்டு பிரேமையுடன் ஸமாதானம் செய்தார்.

भक्तिमेव परां वव्रे श्रीरामचरणाम्बुजे ।
वराय चोदितो देव्या राजगोपालदेशिकः ॥ २९ ॥

29. ஸீதாதேவியால் வரன் பெற்றுக்கொள் ளும்படி தூண்டப்பட்ட ராஜகோபால தேசிகர் ஸ்ரீ ராமனின் பாதாரவிந்தத்தில் சிறந்த பக்தியையே வேண்டினர்.

एवं कामवरं दत्त्वा जानक्या लक्ष्मणेन च ।
अन्तर्दधे कृपासिन्धुः कोसलाधिपतिर्हरिः ॥ ३० ॥

30. இவ்வாறு விரும்பிய வரன் தந்து கருணைக் கடலும், கோஸலாதிபதியுமான ராமர் ஜானகியுடனும் லக்ஷ்மணருடனும் மறைந்தார்.

गोपालदेशिकोप्येवं लब्ध्वा श्रीरामदर्शनम् ।
प्रेमोन्मत्तो बभूवैष लोकवेदपराङ्मुखः ॥ ३१ ॥

31. கோபாலதேசிகரும் இவ்வாறு ஸ்ரீ ராமதரிசனம் பெற்று லௌகிக வைதிகக் கடமைகளை மறந்து பிரேமபக்தியால் பித்தரானார்.

सीता सीतेति सततं कीर्तयत्यादरेण सः ।
क्वचिद्रोदिति रामेति भूमौ विलुठति क्वचित् ॥ ३२ ॥

32. அவர் ஓயாமல் 'ஸீதே ஸீதே' என்று ஆர்வத்துடன் கீர்த்தனம் செய்வார். ஒருகால் ராம நாமத்தைச் சொல்லிக்கொண்டும் அழுவார். ஒருகால் பூமியில் புரளுவார்.

अन्नपानं विसृज्याथ निद्रां त्यक्त्वापि सर्वथा ।
रामध्यानपरो भूत्वा चचार भुवने महान् । ३३ ॥

33. அந்த மஹான் அன்னபானங்களையும் விட்டு நித்திரையையும் விட்டு எப்பொழுதும் ராமத்தியானமே லக்ஷியமாகக்கொண்டு உலகில் ஸஞ்சரித்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीराजगोपालदेशिकस्वामिचरितं
नामाष्टादशोऽध्यायः ॥ १८ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீ ராஜகோபாலதேசிக ஸ்வாமி சரிதம் என்னும்
பதினெட்டாவது அத்யாயம் முற்றும்.

॥ अथैकोनविंशोऽध्यायः ॥

பத்தொன்பதாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

यस्मै ददाति भगवान् कृपया निजदर्शनम् ।
स जहाति मतिं लोके वेदे चैकान्तमानसः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. யாருக்கு பகவான் கருணையுடன் தனது தரிசனம் தருகிறானோ அவனே ஒருமுகப்பட்ட மனமுடையவனாகி லௌகிக வைதிக விஷயங்களில் புத்தியை விட்டு விடுகிறான்.

साक्षात्कृत्य हरिं सद्यो जहाति विषये रतिम् ।
सुधायामेव पीतायां किं क्षुद्रैः प्राकृतैः रसैः ॥ २ ॥

2. ஹரியை ஸாக்ஷாத்கரித்தவன் உடனே உலகில் விரக்தியை அடைகிறான். அமிர்தபானம் செய்த பிறகு அல்பமான சாதாரண ரஸங்களால் என்ன பயன்?

मया तु योगसिद्धेन भगवद्दर्शनं कृतम् ।
इत्युक्त्वा वञ्चयन्त्येव बहवः पामरान्नरान् ॥ ३ ॥

3. யோகியான என்னுல் பகவானின் தரிசனம் செய்யப்பட்டதென்று சொல்லி பலர் பாமரமக்களை ஏமாற்றுகின்றனர்.

यदि साक्षात्कृतो विष्णुः परमानन्दविग्रहः ।
किं ततश्चान्नपानाद्यैः कामिनीकाञ्चनादिभिः ॥ ४ ॥

4. பரமானந்த மூர்த்தியான விஷ்ணு நேரில் வந்தது உண்மையாகில் பிறகும் அன்னபானங்களாலும், காமினீ காஞ்சனங்களாலும் என்ன பயன்?

प्रेमभक्तिरसोन्मत्तो दृढवैराग्यसंयुतः ।
लोकवेदविमुक्तः स्यात्तस्मिन् दृष्टे परावरे ॥ ५ ॥

5. ஞானஸ்வரூபனுன அந்த பகவானைக்கண்டு விட்டால் ப்ரேமபக்திரஸத்திஞல் பித்தனுகவும், திட வைராக்கியம் உடையவனுகவும், லௌகிக வைதீக கடமைகளிலிருந்து விடுபட்டவனுகவும் ஆவான்.

गोपालदेशिको योगी जपयोगेन केशवम् ।
साक्षात्कृत्य परानन्दरसोन्मत्तो बभूव ह ॥ ६ ॥

6. யோகியான கோபாலதேசிகர் ஜபயோகத்தினுலேயே கேசவனை ஸாக்ஷாத்கரித்து, பேரின்பத்தில் திளைத்துப் பித்தன்போல் ஆனுர்.

योगक्षेमं न जानाति कुटुम्बस्य कदापि सः ।
सदा श्रीरामरामेति ध्यानमग्नो बभूव ह ॥ ७ ॥

7. அவர் ஒருகாலும் குடும்பயோக க்ஷேமத்தை கவனிக்கவில்லை. எப்பொழுதும் 'ஸ்ரீ ராம ராம' என்று தியானத்திலேயே மூழ்கி இருந்தார்.

सर्वं गृहं परित्यज्य दृढवैराग्यसंयुतः ।
प्रतस्थे राजगोपालः साकेतनगरं शुभम् ॥ ८ ॥

8. ராஜகோபாலதேசிகர் திடவைராக்கியமுடையவராய் வீட்டையும் யாவையும் விட்டு சுபமான அயோத்திக்குப் புறப்பட்டார்.

अयोध्यां प्रस्थितं दृष्ट्वा लक्ष्मीः सापि पतिव्रता ।
तमेवानुजगामापि बालैः सार्धं मनस्विनी ॥ ९ ॥

9. அயோத்திக்குப் புறப்பட்ட கணவனைக் கண்டு, பதிவ்ரதையும், நல்ல மனமும் உடையவளான லக்ஷ்மி அம்மாளும் குழந்தைகளுடன் கூட அவரையே பின் தொடர்ந்தாள்.

पत्नीपुत्रादिभिः साकं बहुभिर्वैष्णवोत्तमैः ।
प्रतस्थे राघवपुरीं निर्भयो निर्भरो महान् ॥ १० ॥

10. பயமோ, பொறுப்போ இல்லாத அந்த மஹான் பல வைஷ்ணவர்களுடனும், மனைவி, மக்களுடனும் அயோத்திக்குப் புறப்பட்டார்.

शिबिकायां तु रम्यायां निधाय रघुनन्दनम् ।
कीर्तयन् रामरामेति प्रतिग्रामं ययौ महान् ॥ ११ ॥

11. அழகான சிபிகையில் ராமனை எழுந்தருளச் செய்துகொண்டு, ராமநாமகீர்த்தனம் செய்துகொண்டு, ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றார்.

तस्य दर्शनमात्रेण ग्रामे ग्रामे महाजनाः ।
अभूवन् सहसा भक्ता नामकीर्तनतत्पराः ॥ १२ ॥

12. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஜனங்கள் அவருடைய தரிசனம் பெற்ற மறுகணம் நாம கீர்த்தனத்தில் ஊக்கமுடைய பக்தர்களாக ஆனார்கள்.

ग्रामे ग्रामे जनाः सर्वे पूर्णकुंभं प्रादय च ।
विविधैरुपचारैश्च पूजयामासुरादरात् ॥ १३ ॥

13. ஒவ்வொரு கிராமத்திலும் ஜனங்கள் யாவரும் பூர்ணகும்பம் தந்து, அன்புடன் பல உபசாரங்கள் செய்து பூஜித்தனர்.

श्रीरङ्गक्षेत्रमागत्य ददर्श पुरुषोत्तमम् ।
बालगोपालरूपेण ज्योतिरभ्यन्तरस्थितः ॥ १४ ॥
दर्शनं प्रददौ तस्मै राजगोपालयोगिने ।
श्रीरङ्गनाथो भगवान् कृपया भक्तवत्सल ॥ १५ ॥

14-15. ஸ்ரீரங்கக்ஷேத்திரம் வந்து ரங்கநாதனை தர்சனம் செய்தார். பக்தவத்ஸலனாகிய பகவான் ரங்கநாதன் க்ருபையுடன் அந்த ராஜகோபால யோகிக்கு ஜோதிவட்டத்தின் நடுவில் பாலகோபாலனாய் தரிசனம் தந்தார்.

ततश्चापपुरीं गत्वा परमानन्दपूरितः ।
पुष्पवाटीञ्च गोदाया ददर्श मुनिपुङ्गवः ॥ १६ ॥

16. பிறகு முனிவர் பெரும் மகிழ்ச்சியுடன் ஸ்ரீ வில்லிப்புத்தூர் சென்று கோதையின் நந்தவனத்தை தரிசனம் செய்தார்.

वृषभाद्रिञ्च तोताद्रिं मधुरामपि वैष्णवः ।
क्रमेण पश्यन् सानन्दं रामसेतुमवाप सः ॥ १७ ॥

17. அந்த வைஷ்ணவர் திருமாலிருஞ்சோலை, வானமாமலை, மதுரை இவைகளை முறையே தரிசனம் செய்துகொண்டு ஆனந்தமாக ராம ஸேதுவிற்கு வந்தார்.

तत्रैव निवसन् भक्तो दिनानि दश पञ्च च ।
अखण्डरामभजनं चकार दृढनिष्ठया ॥ १८ ॥

18. ராமபக்தராகிய அவர் அங்கேயே பதினைந்து நாட்கள் தங்கி திடசித்தமுடன் அகண்டராம பஜனை நடத்தினார்.

अथ केरलदेशेषु सञ्चरन् वैष्णवोत्तमः ।
अनन्तशयनं विष्णुं ददर्श प्रेमपूर्वकम् ॥ १९ ॥

19. வைஷ்ணவோத்தமர் கேரள தேசங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு, திருவனந்தபுரம் வந்து ப்ரேமையுடன் பத்மநாபனை தரிசனம் செய்தார்.

गुरुवायुपुरं गत्वा यादवाद्रिमवाप सः ।
पुण्डरीकपुरं गत्वा पाण्डुरङ्गं ददर्श च ॥ २० ॥

20. பிறகு அவர் குருவாயூர் சென்று யதுகிரியை அடைந்தார். பண்டரிபுரம் சென்று பாண்டுரங்கனை தரிசித்தார்.

ततश्च द्वारकां गत्वा प्रभासक्षेत्रमेव च ।
कुरुक्षेत्रमतो गत्वा काशीं प्राप महामुनिः ॥ २१ ॥

21. அந்த மாமுனிவர் பிறகு த்வாரகைக்குச் சென்று ப்ரபாஸ க்ஷேத்திரமும், குருக்ஷேத்திரமும் சென்று காசியை அடைந்தார்.

तीर्थराजमथो गत्वा चित्रकूटमवाप च ।
तत्रैव निवसन्नित्यं वाल्मीकीयं पपाठ च ॥ २२ ॥

22. பிறகு ப்ரயாகை சென்று சித்திரகூடம் வந்தார். அங்கேயே தங்கி தினமும் வால்மீகி ராமாயணத்தைப் படித்தார்.

कृत्वा पट्टाभिषेकञ्च रामस्य प्रेमपूर्वकम् ।
भक्तैश्च बन्धुभिः साकमयोध्यानगरीमगात् ॥ २३ ॥

23. ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்த பிறகு, பந்துக்களுடனும், பக்தர்களுடனும் கூடி அயோத்தியை அடைந்தார்.

अयोध्येयमयोध्येयमयोध्येयमिति स्मरन् ।
उन्मत्तवन्ननर्तासौ रामभक्तशिखामणिः ॥ २४ ॥

24. ராமபக்த சிகாமணியான அவர் "திருவயோத்தி; திருவயோத்தி; திருவயோத்தி" என்று சொல்லிக்கொண்டே பித்தனைப்போல் நர்த்தனமாடினார்.

सरयूसलिले स्नात्वा कुर्वन् श्रीरामचिन्तनम् ।
प्रदक्षिणं चकारापि साकेतं कीर्तयन् हरिम् ॥ २५ ॥

25. ஸரயூ நதியில் நீராடி ஸ்ரீ ராமத்யானம் செய்துகொண்டும், ராம நாம கீர்த்தனம் செய்துகொண்டும் அயோத்தியைப் பிரதக்ஷிணம் செய்தார்.

तत्रैव निवसन् भक्तो बहूनि च दिनानि सः ।
राममाराधयामास नानाभावकुतूहलः ॥ २६ ॥

26. குதூஹலமடைந்த அந்த பக்தர் அங்கேயே பல நாட்கள் வஸித்து ராமனை ஆராதித்து வந்தார்.

अथ वृन्दावनं गत्वा गोवर्धनगिरिं तथा ।
स्नात्वा च यमुनातीर्थे नैमिशारण्यमाययौ ॥ २७ ॥

27. பிறகு பிருந்தாவனமும், கோவர்த்தனமும் சென்று யமுனையில் நீராடி, நைமிசாரண்யம் வந்தார்.

ततश्च पुष्करे स्नात्वा गयाक्षेत्रमुपागतः ।
पितृश्राद्धं विधायाथ जगन्नाथपुरं ययौ ॥ २८ ॥

28. பிறகு புஷ்கரத்தில் தீர்த்தமாடி, கயா க்ஷேத்திரம் வந்து பித்ருக்களுக்கு சிரார்த்தம் செய்து, ஜகன்னாதபுரிக்கு வந்தார்.

अथ भद्राचले रामं दृष्ट्वा श्रीकूर्ममागतः ।
अहोबिलं ततो गत्वा नृसिंहञ्च ददर्श सः ॥ २९ ॥

29. பிறகு பத்ராசலத்தில் ராமதரிசனம் செய்துவிட்டு ஸ்ரீ கூர்மக்ஷேத்திரம் சென்று, அஹோபிலம் வந்து நரஸிம்மனை தரிசித்தார்.

ततः शेषाचलं गत्वा वेङ्कटेशं ददर्श च ।
तत्रैवोवास सानन्दं ध्यायन्नेव श्रियःपतिम् ॥ ३० ॥

30. பிறகு திருமலை வந்து வேங்கடேசனை தரிசித்தார். ஸ்ரீநிவாஸனைத் தியானம் செய்துகொண்டு ஆனந்தமாக அங்கேயே தங்கினார்.

भगवान् वेङ्कटेशोऽपि प्रददौ दिव्यदर्शनम् ।
अष्टलक्ष्मीसहचरः सञ्चरन् गिरिकानने ॥ ३१ ॥

31. பகவானுகிய வேங்கடேசரும் மலைகளிலும், காடுகளிலும், அஷ்டலக்ஷ்மிகளுடன் ஸஞ்சரிப்பவ ராய் திவ்ய தரிசனம் தந்தார்.

ततः काञ्चीपुरं गत्वा वरदञ्च विलोक्य सः ।
ग्राममेव पुनः प्राप स्वकीयं वैष्णवोत्तमः ॥ ३२ ॥

32. அந்த வைஷ்ணவோத்தமர் காஞ்சிபுரம் சென்று வரதனை தரிசித்துவிட்டு தனது கிராமத் திற்கே திரும்பினர்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीराजगोपालदेशिकस्वामिचरितं
नामैकोनविंशोऽध्यायः ॥ १९ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையில் பத்தாவது பாகத்தில் ஸ்ரீ ராஜகோபாலதேசிக ஸ்வாமி சரிதம் என்னும் பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथ विंशोऽध्यायः ॥

இருபதாவது அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

न तीर्थयात्रया नृणां न च श्रीमूर्तिदर्शनात् ।
साधूनां सङ्गमादेव मनःशुद्धिः प्रजायते ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. ஸாது ஸங்கமத்தாலேயே சித்த சுத்தி உண் டாகிறது. தீர்த்த யாத்திரையாலோ, ஸ்ரீ மூர்த்தி தரிசனத்தாலோ மட்டிலும் இல்லை.

यदा सर्वेश्वरो यं यमात्मन्याक्रष्टुमिच्छति ।
तदैव तस्मै तस्मै च साधुसङ्गं प्रयच्छति ॥ २ ॥

2. எவனெவனை எப்பொழுது ஸர்வேச்வரன் தன்னிடம் இழுத்துக்கொள்ள விரும்புகிறானோ அவனவனுக்கு அப்பொழுதே ஸாதுஸங்கத்தைத் தருகிறான்.

अन्यथा दुर्लभो लोके श्रीपतेः कृपया विना ।
वैष्णवोत्तमसङ्गस्तु नृणां संसारिणामिह ॥ ३ ॥

3. ஸம்ஸாரிகளான மக்களுக்கு இவ்வுலகில் ஸ்ரீபதியின் கருணையின்றி ஸாதுஸங்கம் வேறுவழியில் துர்லபமானது.

तदेव गण्यं मन्येहं नृणामपि शतायुषाम् ।
क्षणार्धमपि सत्सङ्गो लभ्यते यदि संसृतौ ॥ ४ ॥

4. ஒரு மனிதன் நூறு ஆண்டு வாழ்ந்தாலும் ஸம்ஸாரத்தில் அரைக்ஷணமாகிலும் ஸாதுஸங்கம் கிடைக்குமாகில் அதுவே மதிக்கத்தக்கதென என் கருத்து.

यदृच्छयैव सत्सङ्गं लब्ध्वा सांसारिको नरः ।
कामक्रोधविमुग्धोपि लभते नवजीवनम् ॥ ५ ॥

5. காம கோபங்களில் மயங்கினவனாயினும் ஒரு ஸம்ஸாரியான மனிதன் எதிர்பாராமல் ஸாதுஸங்கத்தைப்பெற்று புதிய வாழ்க்கையைப் பெறுகிறான்.

यदृच्छया महात्मायं राजगोपालदेशिकः ।
अत्राजगाम कृष्णस्य कृपयैव प्रचोदितः ॥ ६ ॥

6. மஹாத்மாவான ராஜகோபால தேசிகர் க்ருஷ்ணகிருபையால் தூண்டப்பட்டு எதிர்பாராமல் இங்கு வந்தார்.

अहो भाग्यं ममैवेदं महान्मेऽनुग्रहः कृतः ।
अन्यथा दुर्लभो नूनं सङ्गस्तु महात्मनाम् ॥ ७ ॥

7. எனது பாக்கியமே பாக்கியம்! பகவான் சிறந்த அனுக்ரஹம் செய்தான். இல்லாவிடில் மஹான்களின் ஸங்கம் கிடைக்காது.

अत्रैव निवसन्नित्यं सानन्दं प्रेमपूर्वकम् ।
स्वस्यानुभूतिं निखिलां स्वयमेव जगाद मे ॥ ८ ॥

8. இங்கேயே தங்கி தினமும் ஆனந்தமாக தனது அனுபூதி யாவையும் தானே எனக்குச் சொன்னார்.

दिने दिने रहस्येवं कुर्वतोः प्रेमभाषणम् ।
अन्योन्यं परमा प्रीतिर्ववृधे सर्वथैव नौ ॥ ९ ॥

9. தினந்தோறும் தனிமையில் ப்ரேமையுடன் ஸம்பாஷணம் செய்யும் எங்களுக்கு எல்லா விதத்திலும் பரஸ்பரம் சிறந்த ப்ரீதியே வளர்ந்தது.

एकान्तरामभक्तोयं राजगोपालदेशिकः ।
भक्तकोलाहलं कृष्णं न ददर्श कदापि च ॥ १० ॥

10. ஏகாந்த ராமபக்தரான இந்த ராஜ கோபால தேசிகர் பக்தகோலாஹல க்ருஷ்ணனை ஒருகாலும் தரிசிக்கவில்லை.

भक्तकोलाहलः कृष्णोऽप्येवं विमुखमात्मनि ।
गोपालदेशिकं गत्वा प्रार्थयामास च स्वयम् ॥ ११ ॥

11. பக்தகோலாஹல க்ருஷ்ணனே தன்னிடத்தில் பாராமுகமாயுள்ள கோபாலதேசிகரிடம் சென்று தானே வேண்டினான்.

पुण्डरीकविशालाक्षः पूर्णचन्द्रसमाननः ।
कुटिलालकसंयुक्तः केकिपिञ्छावतंसकः ॥ १२ ॥
कज्जलालिप्तनयनश्चलन्मकरकुण्डलः ।
मञ्जुलालापसंयुक्तो मन्दस्मितमनोहरः ॥ १३ ॥
मुरलीभूषितकरो मुनिचित्तापहारकः ।
त्रिभङ्गिललिताकारस्त्रिजगन्मोहनः प्रभुः ॥ १४ ॥
क्वणत्किङ्किणिपादश्च कटिन्यस्तकराम्बुजः ।
गोपालदेशिकस्याग्रेऽप्याविरासीत्कृपानिधिः ॥ १५ ॥

12-15. தாமரை போன்ற கண்கள் உடையவனும், பூர்ண சந்திரனை ஒத்த முகமுடையவனும், சுருண்டகேசம் உடையவனும், மயிலிறகணிந்தவனும், மைதீட்டிய கண்கள் உடையவனும், அசைகின்ற மகரகுண்டல முடையவனும், மதுரமாய்ப் பேசுகின்றவனும், மந்தஹாஸத்தால் உள்ளம் கவருபவனும், குழல்தாங்கிய கை உடையவனும், முனிவர்களின் உள்ளத்தைத் திருடுகின்றவனும், மூன்று வளைவான தோற்றம் உடையவனும், மூவுலகையும் மயக்குகின்ற ப்ரபுவும், கிங்கிணி ஒலிக்கும் திருவடி உடையவனும், கைகளை இடுப்பில் வைத்துக்கொண்டிருப்பவனும், கருணைக்கடலுமான பக்தகோலாஹலன் கோபால தேசிகரின் எதிரில் தோன்றினான்.

तात तातेति चाहूय मां पश्येति पुनः पुनः ।
समाधिस्थं समुत्थाप्य जगाद मधुरं वचः ॥ १६ ॥

16. "தாத்தா! தாத்தா!!! என்னைப் பார்!" என்று மறுபடியும், மறுபடியும் கூப்பிட்டு, ஸமாதியில் உள்ளவரை எழுப்பி, தித்திப்பாய்ப் பேசினான்.

श्रीभक्तकोलाहल उवाच

आराधय महाभाग श्रीकृष्णं मामुपस्थितम् ।
पत्रं पुष्पं फलं दत्वा प्रेमपूर्वं दृढव्रत ॥ १७ ॥

ஸ்ரீ பக்தகோலாஹலன்

17. திடபக்தி உடைய பாக்கியவானே! உன் னருகில் வந்துள்ள கண்ணனாகிய என்னைப் பத்ரமோ, புஷ்பமோ, பழமோ ப்ரேமையுடன் தந்து ஆராதிப்பாயாக.

भक्तश्रेष्ठस्त्वमेवासि तथाहं भक्तवत्सलः ।
न कदापि त्यजामि त्वां तथा मामपि मा त्यज । १८ ॥

18. நீயோ பக்தச்ரேஷ்டன். நானோ பக்தவத் ஸலன். உன்னை ஒருகாலும் விடமாட்டேன்; என்னையும் நீ ஒருகாலும் விடாதே.

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वान्तर्दधे कृष्णो भक्तकोलाहलः प्रभुः ।
रामभक्तं महात्मानं राजगोपालदेशिकम् ॥ १९ ॥

ஸ்ரீ ஸத்குரு

19. ராமபக்தரும், மஹாத்மாவுமான ராஜ கோபால தேசிகரைப் பார்த்து இவ்வாறு சொல்லி,

ப்ரபுவான பக்தகோலாஹல க்ருஷ்ணன் மறைந்தான்.

परमं विस्मयं प्राप्य स महात्मा तपोनिधिः ।
पूजयामास गोविन्दं राधिकारमणं हरिम् ॥ २० ॥

20. தபோநிதியான அந்த மஹான் மிகவும் ஆச்சர்யமடைந்து, ராதாஸமேதனான கோலாஹல க்ருஷ்ணனைப் பூஜித்தான்.

अर्घ्यपाद्यादिकं दत्वा यथाशास्त्रं सतां वरः ।
रामनामसहस्रेण पूजयामास केशवम् ॥ २१ ॥

21. ஸாதுக்களில் சிறந்த அவர் முறைப்படி அர்க்யம், பாத்யம் முதலியவைகள் தந்து, கேசவனை ராமஸஹஸ்ர நாமத்தால் பூஜித்தார்.

तद्भावमनुसृत्यैव भक्तकोलाहलः प्रभुः ।
श्रीरामचन्द्ररूपेण प्रददौ निजदर्शनम् ॥ २२ ॥

22. அவருடைய மனோபாவத்தை அனுஸரித்து பக்தகோலாஹலப்ரபுவும் ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியாக காட்சி தந்தார்.

ददर्श हस्ते कोदण्डं मुरलीं न ददर्श सः ।
ददर्श मकुटं हैमं शिखण्डं न ददर्श च ॥ २३ ॥

23. அவர் கையில் கோதண்டத்தைக் கண்டாரேயன்றி, குழலைக் காணவில்லை. தங்கமயமான மகுடத்தைக் கண்டாரேயன்றி மயிலிறகைக் காணவில்லை.

ददर्श पार्श्वे सीताञ्च राधिकां न ददर्श सः ।
ददर्श वक्त्रे गाम्भीर्यं वैदग्ध्यं न ददर्श च ॥ २४ ॥

24. அவர் பக்கத்தில் ஸீதையைக் கண்டாரே யன்றி, ராதையைக் காணவில்லை. முகத்தில் காம் பீர்யத்தைக் கண்டாரேயன்றி. ரஸிக ஸ்வபாவத் தைக் காணவில்லை.

एवं श्रीरामरूपेण दृष्ट्वा राधामनोहरम् ।
परमं संशयं लब्ध्वा ददर्श च पुनः पुनः ॥ २५ ॥

25. இவ்வாறு ராதாரமணனை க்ருஷ்ணனை ராமனாய்க் கண்டு மறுபடியும், மறுபடியும் உற்றுப் பார்த்தார்.

भक्तकोलाहलोऽप्येवं दर्शनानन्दविस्मितम् ।
प्रेमपूर्वं जगादैनं राजगोपालदेशिकम् ॥ २६ ॥

26. பக்தகோலாஹலனும் இவ்வாறு தர்சனம் செய்து ஆனந்தமும், ஆச்சர்யமும் அடைந்த ராஜ கோபால தேசிகரைப் பார்த்துப் பிரேமையுடன் சொன்னான்.

श्रीभक्तकोलाहल उवाच

एवञ्च विस्मयं मा गा भक्तकोलाहलोऽस्म्यहम् ।
भक्तानां भावमादाय दर्शनं प्रददामि हि ॥ २७ ॥

ஸ்ரீ பக்தகோலாஹலன்

27. இவ்வாறு ஆச்சர்யப்பட வேண்டாம்; நான் பக்த கோலாஹலன்; பக்தர்களின் மனோபாவத்திற் கேற்றபடி தரிசனம் தருவேன்.

अहमेव हि रामोऽस्मि रामभक्तिमतां तथा ।
अहमेव हि कृष्णोऽस्मि कृष्णभक्तिमतामपि ॥ २८ ॥

28. நானே ராமபக்தர்களுக்கு ராமன்; நானே க்ருஷ்ண பக்தர்களுக்கு க்ருஷ்ணன்.

भेदभावो न कर्तव्यः साधुभिर्वैष्णवैर्मयि ।
प्रेमभावेन मां नित्यं भज त्वं दृढनिष्ठया ॥ २९ ॥

29. ஸாதுக்களான வைஷ்ணவர்கள் என்னிடம் பேதம் பார்க்கக்கூடாது. எனவே, நீர் திடநிஷ்டையுடனும், ப்ரேமையுடனும் தினமும் என்னை பஜிப்பீராக.

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वा तं महात्मानं तोषयामास माधवः ।
असीमकरुणासिन्धुः श्रीमान् भक्तकुतूहलः ॥ ३० ॥

ஸ்ரீ ஸத்குரு

30. எல்லையற்ற கருணைக்கடலான ஸ்ரீ பக்த கோலாஹல க்ருஷ்ணன் அந்த மஹானை ஸந்தோஷப் படுத்தினன்.

भक्तकोलाहलं देवं नित्यमाराधयन् महान् ।
अत्रैव चक्रे वासञ्च भक्तानानन्दयन् स्वकान् ॥ ३१ ॥

31. அந்த மஹான் பக்தகோலாஹல தேவனை தினமும் ஆராதித்துக்கொண்டும், தனது பக்தர்களை ஆனந்தப் படுத்திக்கொண்டும் இங்கேயே வஸித்து வந்தார்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीराजगोपालदेशिकस्वामिचरितं
नाम विंशोऽध्यायः ॥ २० ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையில் பத்தாவது பாகத்தில் ஸ்ரீராஜகோபாலதேசிக ஸ்வாமி சரிதம் என்னும் இருபதாவது அத்தியாயம் முற்றும்.

॥ अथैकविंशोऽध्यायः ॥

இருபத்தொன்றாவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

नीत्वायं दशमासांश्च जीवो मूत्रपुरीषयोः ।
योनिद्वाराद्बहिर्याति तस्माद्दुःखतरं नु किम् ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. இந்த ஜீவன் பத்து மாதங்களை மலமூத்திரங்களின் மத்தியில் கழித்து, கர்ப்பத்திலிருந்து வெளி வருகிறான். அதை விட துக்கம் வேறு என்ன?

त्वङ्मांसरुधिरस्नायुमेदोमज्जास्थिसंयुतम् ।
कलेवरं वहत्यत्र ततो दुःखतरं नु किम् ॥ २ ॥

2. தோல், மாமிசம், ரத்தம், எலும்பு இவைகளால் கட்டப்பட்ட சரீரத்தை தூக்கிக்கொண்டு அலைகிறான். அதை விட துக்கம் வேறு என்ன?

वातरोगैः पित्तरोगैः कफरोगैश्च पीडितः ।
क्षुत्पिपासाकुलश्चास्ति ततो दुःखतरं नु किम् ॥ ३ ॥

3. வாதரோகம், பித்தரோகம், கபரோகம், பசி, தாஹம் இவைகளாலும் பீடிக்கப்பட்டிருக்கிறான். அதை விட துக்கம் வேறு என்ன?

दुःखानाञ्च सहस्राणि सहस्राणि तथाऽऽपदाम् ।
सर्वदाऽनुभवत्यत्र ततो दुःखतरं नु किम् ॥ ४ ॥

4. ஆயிரக்கணக்கான துக்கங்களேயும், ஆயிரக்கணக்கான விபத்துக்களேயும் எப்பொழுதும் இங்கு அனுபவிக்கிருன். அதைவிட துக்கம் வேறு என்ன ?

राज्ञा चोरैश्च दुष्टैश्च पत्नीपुत्रादिबन्धुभिः ।
पीडितो निवसत्यत्र ततो दुःखतरं नु किम् ॥ ५ ॥

5. அரசனுலும், திருடனுலும், துஷ்டர்களாலும், மனைவி, மக்கள் முதலிய பந்துக்களாலும் பிடிக்கப்பட்டவனுய் இங்கு வசிக்கிருன். அதைவிட துக்கம் வேறு என்ன ?

निन्दितो बन्धुभिश्चापि वार्धक्येनापि दुःखितः ।
गृहे वसत्यन्धकोऽपि ततो दुःखतरं नु किम् ॥ ६ ॥

6. பந்துக்களால் நிந்திக்கப்பட்டவனுகவும், மூப்பினுல் துன்பப்படுகின்றவனுகவும், குருடனுகவுமாகி வீட்டில் வசிக்கிருன். அதைவிட துக்கம் வேறு என்ன ?

लोकेऽस्मिन् मरणं नूनमनिवार्यं स्वबन्धुभिः ।
एवं ज्ञात्वापि रमते ततो दुःखतरं नु किम् ॥ ७ ॥

7. இவ்வுலகில் தனது பந்துக்களால் நிச்சயமாய் மரணத்தைத் தடுக்க முடியாது என்று அறிந்தும் ஸந்தோஷமாய் வாழ்கிருன், அதைவிட துக்கம் வேறு என்ன ?

एतत्सर्वं विचार्यैव विवेकेनामलाशयाः ।
वैकुण्ठं प्राप्तुमिच्छन्ति शाश्वतं तमसः परम् ॥ ८ ॥

8. இவை யாவையும் விசாரித்து விவேகத்தி ஞல் மனத்தூய்மை பெற்றவர்கள் ப்ரக்ருதிக்கு அப் பாலுள்ள அழிவற்ற வைகுண்டத்தை அடைய விரும்புகின்றனர்.

गोपालदेशिकोऽप्येवं सञ्चरन् जगतीतले ।
विरक्तिं परमां प्राप नानादुःखसमाकुले ॥ ९ ॥

9. இவ்வாறு பலவித துக்கங்களால் கலங்கிய உலகில் அலைந்து கோபாலதேசிகரும் மிகவும் விரக்தி அடைந்தார்.

सद्यो मुक्तिमवाप्तुञ्च महात्मा कृतनिश्चयः ।
आर्तिमान् शरणं भेजे वेङ्कटेश्वरमच्युतम् ॥ १० ॥

10. அந்த மஹான் உடனே முக்தி அடைய நிச்சயித்து துக்கத்துடன் வேங்கடேச்வரனை அச்சு தனை சரணடைந்தார்.

दर्शयामास वैकुण्ठमक्रूरस्य यथा पुरा ।
गोपालदेशिकस्यापि योगीन्द्रस्य श्रियःपतिः ॥ ११ ॥

11. ஸ்ரீநிவாஸனும் முன்பு அக்ரூரருக்குக் காட் டியதுபோல் கோபாலதேசிகருக்கும் வைகுண்டத் தைக் காட்டினார்.

इतः परं क्षणार्धञ्च न सहेयमिति स्मरन् ।
तमेव वेङ्कटाधीशं मुमुक्षुः शरणङ्गतः ॥ १२ ॥

12. இனிமேல் அரைக்ஷணமும் தாளமாட் டேன் என்று நினைத்து அந்த வேங்கடேசரையே மோக்ஷத்தைவேண்டி சரணடைந்தார்.

तदापि करुणासिन्धुराविरासीच्छ्रियःपतिः ।
गोपालदेशिकस्याग्रे शङ्खचक्रगदाधरः ॥ १३ ॥

अतसीपुष्पसच्छायः सरसीरुहलोचनः ।
निष्ककङ्कणकेयूरकौस्तुभादिविभूषणः ॥ १४ ॥

दिव्यपीताम्बरधरो दिव्यमङ्गलविग्रहः ।
ज्योतिर्मण्डलमध्यस्थः श्रीमान् श्रीवत्सलाञ्छनः ॥ १५ ॥

13-15. அப்பொழுது கருணைக்கடலும், சங்க சக்ரகதாதாரியும், காயாம்பூவண்ணனும், தாமரைக் கண்ணனும், கண்டிகை, கங்கணம், தோள்வளை, கௌஸ்துபம் முதலிய பூஷணங்களை அணிந்தவனும், திவ்ய பீதாம்பரதாரியும், திவ்யமங்களரூபனும், ஸ்ரீவத்ஸம் என்கிற மச்சம் உடையவனும், ஸ்ரீமானு மாகிய வேங்கடேச்வரர் ஜோதிவட்டத்தின் நடுவில் இருப்பவனாய் கோபாலதேசிகரின் எதிரில் தோன்றினான்.

आलिङ्ग्य राजगोपालमेकहस्तेन वक्षसा ।
प्रिय क्षणं प्रतीक्षस्व ते ददामि परं पदम् ॥ १६ ॥

इत्युक्त्वाप्यन्यहस्तेन दर्शयामास चादरात् ।
सुरासुरगणैः सेव्यं स्वकीयं परमं पदम् ॥ १७ ॥

16-17. ராஜகோபாலதேசிகரை ஒரு கையால் மார்புடன் அணைத்துக்கொண்டு, "நண்பா! காத்திரு! உனக்குப் பரமபதம் தருகிறேன்" என்று சொல்லி, மற்றொரு கையால் அன்புடன் தேவாஸுரர்களுக்கும் ஸேவிக்கத்தக்க தனது பரமபதத்தைக் காட்டினான்.

श्रीपतेरानुकूल्येन किञ्चिद्धैर्यमवाप्य सः ।
पुनश्च प्रार्थयामास वेङ्कटेशं कृताञ्जलिः ॥ १८ ॥

18. அவர் ஸ்ரீநிவாஸனின் அன்பினால் கொஞ்சம் தைர்யமடைந்து, கைகுவித்து வேங்கடேசரை மறுபடியும் வேண்டினார்.

श्रीराजगोपालदेशिक उवाच

अस्यां नाटकशालायां नृत्यन्नृत्यंश्च सन्ततम् ।
परं श्रमसवाप्याद्य विश्रान्तिमभिरोचये ॥ १९ ॥

ஸ்ரீ ராஜகோபாலதேசிகர்

19. இந்த நாடகசாலையில் ஓயாமல் ஆடி ஆடி களைத்து இப்பொழுது ஓய்வை விரும்புகிறேன்.

अपि ब्रह्मादिलोकेषु विश्रान्तिर्न हि लभ्यते ।
इति निश्चित्य गोविन्द त्वामेव शरणं भजे ॥ २० ॥

20. கோவிந்தா! ப்ரும்மாதி லோகத்திலும் விச்ராந்தி கிடைக்கவில்லை என்று நிச்சயித்து உம்மையே சரணடைகிறேன்.

संसारसागरे मग्नं स्वयमुद्धृत्य मां प्रभो ।
पुनरावृत्तिरहिते वैकुण्ठे स्थापयाच्युत ॥ २१ ॥

21. ப்ரபுவே! அச்சுதா! ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கிய என்னைத் தானாகவே தூக்கி மறுபிறவி இல்லாத வைகுண்டத்தில் வைப்பாயாக.

प्रपन्नरक्षणे त्वं तु दीक्षितोसि कृपानिधे ।
भवदावानले तप्तं प्रापयाद्यैव ते पदम् ॥ २२ ॥

22. கருணாநிதியே! நீரோ சரணாகதர்களை ரக்ஷிப்பதாக தீக்ஷை கொண்டிருக்கிறீர். ஸம்ஸார மாகிய காட்டுத்தீயில் கொளுத்தப்பட்ட என்னை இப்பொழுதே உனது பதத்தில் சேர்ப்பீராக.

श्रीसद्गुरुरुवाच

इति संप्रार्थितो देवो भगवान् वेङ्कटेश्वरः ।
गोपालदेशिकं भक्तं सान्त्वयन् प्राह माधवः ॥ २३ ॥

ஸ்ரீ ஸத்குரு

23. இவ்வாறு வேண்டப்பட்ட தேவனும், பகவானும், ஸ்ரீநிவாஸனுமான வேங்கடேச்வரர், பக்தனாகிய கோபாலதேசிகரை ஸமாதானம் செய்து சொன்னான்.

श्रीभगवानुवाच

तव भक्तिं वर्धयितुं कृपयैव मया प्रिय ।
प्रदर्शिता हि वैकुण्ठे ममेयं शाश्वती स्थितिः ॥ २४ ॥

ஸ்ரீ பகவான்

24. நண்பா! உனது பக்தியை வளர்ப்பதற்காக கருணையினால் வைகுண்டத்தில் என்னுடைய சாச்வதமான நிலை காட்டப்பட்டது.

तव पादाब्जचिह्नेन लाञ्छितं मुनिपुङ्गव ।
मम वक्षःस्थलं स्पृष्ट्वा त्वामवेहि च तत्वतः ॥ २५ ॥

25. முனிவரே! உமது அடிச்சுவட்டால் அடையாளம் செய்யப்பட்ட எனது மார்பை தொட்டுப் பார்த்து, உமது ரகஸியத்தை அறிவீராக.

तत्र भक्तपुरीक्षेत्रे निवस त्वं यथासुखम् ।
भक्तकोलाहलस्यैव सन्निधौ मोक्षमाप्नुहि ॥ २६ ॥

26. நீர் அங்கு பக்தபுரி க்ஷேத்திரத்திலேயே ஸுகமாய் வஸிப்பீராக. பக்தகோலாஹலன் ஸன்னிதியில் முக்தி பெறுவீராக.

श्रीसद्गुरुरुवाच

इत्युक्त्वा देवदेवेशः करुणारसवारिधिः ।
स्वप्नोपलब्धार्थ इव सहसान्तरधात्प्रभुः ॥ २७ ॥

ஸ்ரீ ஸத்குரு

27. இவ்வாறு சொல்லி கருணைக்கடலும், தேவ தேவனுமாகிய பிரபு கனவில் கிடைத்த பொருள் போல் உடனே மறைந்தார்.

यथा नष्टधनो दीनो नष्टचक्षुर्यथान्धकः ।
सुस्वरं प्ररुदन् दीनं पुनर्भक्तपुरीमगात् ॥ २८ ॥

28. ஏழை தனத்தைப்பெற்று இழந்ததைப் போலவும், குருடன் கண்ணைப்பெற்று இழந்தது போலும், கூச்சலிட்டு தீனமாய் அழுதுகொண்டு திரும்பி பக்தபுரிக்கு வந்தார்.

सर्वेभ्यश्चात्र भक्तेभ्यः स्वानुभूतिं पुनः पुनः ।
कथयन् कथयन् शान्तिमवाप च महामुनिः ॥ २९ ॥

29. அந்த முனிவர் எல்லா பக்தர்களிடமும் பலதடவை தனது அனுபூதியை சொல்லிச் சொல்லி சாந்தி அடைந்தார்.

उन्मत्तवत्सदा नृत्यन् प्रलपन् विलुठन् भुवि ।
कालक्षेपञ्चकारात्र वैकुण्ठ गन्तुमिच्छया ॥ ३० ॥

30. பித்தன்போல் எப்பொழுதும் ஆடிக் கொண்டும், புலம்பிக்கொண்டும், பூமியில் புறண்டு கொண்டும் வைகுண்டம் செல்லும் விருப்பத்துடன் காலம் கழித்து வந்தார்.

पुष्यमासे शुक्लपक्षे चतुर्दश्यां तथाहनि ।
भक्तकोलाहलस्यापि सन्निधौ करुणानिधेः ॥ ३१ ॥
महोपनिषदश्चापि द्वयञ्चापि महामनुम् ।
पठतां भक्तवर्याणां मध्ये चापि महात्मनाम् ॥ ३२ ॥
ध्यानमीलितनेत्राब्जः प्राणानायम्य च क्रमात् ।
नारायणं हृदि ध्यायन् प्रशान्तवदनाम्बुजः ॥ ३३ ॥
भीष्माचार्यो यथापूर्वं यथा नाथमुनिस्तथा ।
प्राप वै योगमार्गेण तद्विष्णोः परमं पदम् ॥ ३४ ॥

31-34. தை மாதம் சுக்லபக்ஷம் சதுர்தசி அன்று பகலில் கருணாநிதியான பக்தகோலாஹலன் ஸன்னிதியில் மஹோபநிஷத்தையும், மஹாமந்த்ர மான த்வயத்தையும் படிக்கும் பக்தர்களான மஹான்களின் மத்தியில் முறைப்படி ப்ராணாயாமம் செய்து, கண்களைமூடி, நாராயணனை ஹ்ருதயத்தில் தியானம் செய்து, சாந்தமான முகமுடையவராய், முன்பு பீஷ்மாசார்யரும், நாதமுனியும் போல் யோக மார்கத்தினால் விஷ்ணுவின் அந்த பரம பதத்தை அடைந்தார்.

अथ सर्वे वैष्णवाश्च पुण्ये वेणानदीतटे ।
ब्रह्ममेधविधानेन संस्कारश्चक्रिरे क्रमात् ॥ ३५ ॥

35. பிறகு வைஷ்ணவர்கள் யாவரும் புண்ணிய மான பெண்ணையாற்றங்கரையில் ப்ரும்மமேத விதிப் படி முறையாக ஸம்ஸ்காரம் செய்தார்கள்.

इदं क्षेत्रं महापुण्यमियं पुण्या महानदी ।
अत्रैव प्राप वैकुण्ठं महान् गोपालदेशिकः ॥ ३६ ॥

36. இந்த க்ஷேத்திரம் மஹாபுண்ணியமானது; இந்த மஹாநதியும் புண்ணியமானது; இங்குதான் மஹான் கோபாலதேசிகர் வைகுண்ட மடைந்தார்.

गोपालदेशिकस्यैतन्महाप्रस्थानमुत्तमम् ।
यः पठेच्छ्रद्धया तस्य पुनर्जन्म न विद्यते ॥ ३७ ॥

37. கோபாலதேசிகரின் உத்தமமான வைகுண்ட யாத்திரையை எவன் ச்ரத்தையுடன் படிப்பானோ அவனுக்கு மறு பிறவி இல்லை.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीराजगोपालदेशिकस्वामिचरितं
नामैकविंशोऽध्यायः ॥ २१ ॥

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸ்ரீ கோபாலதேசிக ஸ்வாமிகள் சரிதம் என்னும்
இருபத்தொன்றும் அத்யாயம் முற்றும்.

॥ अथ द्वाविंशोऽध्यायः ॥

இருபத்திரண்டாவது அத்தியாயம்

भागवता ऊचुः

अहो भाग्यमहो भाग्यमस्माकं देशिकोत्तम ।
यद्वयं त्वन्मुखाम्भोजमकरन्दमधुव्रताः ॥ १ ॥

பாகவதர்கள்

1. எங்கள் குருநாதரே! எங்கள் பாக்கியமே பாக்கியம்! ஏனெனில் நாங்கள் தங்கள் முககமலத்திலிருந்து பெருகும் தேனைப் பருகும் வண்டுகளாக ஆனோம்.

पादच्छायामुपाश्रित्य तवैवाचार्यसत्तम ।
सुखं जीवाम भुवने पीत्वा कृष्णकथामृतम् ॥ २ ॥

2. ஆசார்யதேவ! தங்கள் திருவடி நிழலை அண்டி க்ருஷ்ண கதாம்ருதத்தைப் பருகி உலகில் ஸுகமாய் ஜீவிக்கிறோம்.

माता पिता त्वमेवासि मित्रं बन्धुस्त्वमेव हि ।
त्वमेव सद्गुरुश्चासि त्वमेव कुलदैवतम् ॥ ३ ॥

3. நீரே மாதா; நீரே பிதா; நீரே நண்பன்; நீரே பந்து; நீரே ஸத்குரு; நீரே குலதெய்வம்.

अव्याजकरुणासिन्धो सर्वसद्गुण संयुत ।
संसारसागरादस्मान् सद्गुरो क्षिप्रमुद्धर ॥ ४ ॥

4. ஸகல நற்குணமும் பொருந்தியவரே! காரணமற்ற கருணைக்கடலே! ஸத்குருவே! இந்த ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து சீக்கிரமாய் கரையேற்றுவீராக.

साक्षात्कृष्णस्त्वमेवासि गुरुरूपेण दृश्यसे ।
जगदुद्धारणाय त्वं चरस्येवं महीतले ॥ ५ ॥

5. தாங்களே ஸாக்ஷாத் க்ருஷ்ணன்; குருவாகக் காணப்படுகிறீர். உலகை உத்தாரணம் செய்ய நீர் உலகில் இவ்வாறு ஸஞ்சரிக்கிறீர்.

परित्यज्य स्वयं वेणुं तुम्बवीणां प्रगृह्य च ।
कृष्णसङ्कीर्तनं कुर्वंश्चरसि त्वं हरिर्ननु ॥ ६ ॥

6. குழலை விட்டு விட்டு தானாகவே தம்பூராவைத் தூக்கிக்கொண்டு க்ருஷ்ண ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு ஸஞ்சரிக்கின்றீர். நீர் ஹரி அல்லவா?

यथा कृष्णेन गोपाला यथा रामेण वानराः ।
तथा वयं त्वया सार्धं सञ्चराम महीतले ॥ ७ ॥

7. கண்ணனுடன் ஆயர்கள் போலும், ராமனுடன் வானரர்கள் போலும், தங்களுடன் கூடி நாங்கள் உலகில் ஸஞ்சரிக்கிறோம்.

गूढं मनुष्यभावेन तव माहात्म्यमद्भुतम् ।
प्रकाशय महाबुद्धे लोकेस्मिन् मङ्गलाय हि ॥ ८ ॥

8. மஹாபுத்திமானே! மனிதத் தன்மையால் மறைக்கப்பட்ட உமது அத்புதமான மஹிமையை க்ஷேமத்திற்காக இவ்வுலகில் வெளிப்படுத்துவீராக.

सारं संगृह्य शास्त्राणां सद्गुरो करुणानिधे ।
अस्माकं श्रोतुकामानामुपदेशं कुरु प्रभो ॥ ९ ॥

9. கருணாநிதியே! ப்ரபுவே! ஸத்குருவே! சாஸ்திரங்களின் ஸாரத்தைச் சுருக்கி கேட்க விரும்பும் எங்களுக்கு உபதேசிப்பீராக.

श्रीसद्गुरुरुवाच

शृणुध्वं साधवः सर्वे सर्वशास्त्रार्थ संग्रहम् ।
सर्वत्र सर्वदा नित्यं कीर्तनीयो व्रजात्मजः ॥ १० ॥

ஸ்ரீ ஸத்குரு

10. எல்லா சாஸ்திரங்களின் சுருக்கத்தை ஸாதுக்கள் யாவரும் கேளுங்கள். எங்கும், எப்பொழுதும், தினமும், க்ருஷ்ணகீர்த்தனமே செய்ய வேண்டும்.

श्रीकृष्णात्परमं दैवं शास्त्रेषु न हि दृश्यते ।
आलोड्य सर्वशास्त्राणि सत्यमेव वदाम्यहम् ॥ ११ ॥

11. க்ருஷ்ணனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் சாஸ்திரங்களில் காணக்கிடைக்கவில்லை. எல்லா சாஸ்திரங்களையும் கிளறிப்பார்த்து ஸத்தியமாய்ச் சொல்லுகிறேன்.

न योगेन न सांख्येन न च श्रौतेन कर्मणा ।
भगवान् भक्तभावज्ञा भक्त्या तुष्यति केवलम् ॥ १२ ॥

12. பக்தர்களின் எண்ணத்தை அறிந்த பகவான் பக்தியினுல் மட்டிலும் ஸந்தோஷப்படுகிருன். யோகத்தினுலோ, ஸாங்க்யத்தினுலோ, வைதீக கர்மாவினுலோ இல்லை.

सन्त्यज्य संशयं सर्वं भक्तिमान् दृढनिश्चयः ।
कृष्णसङ्कीर्तनं कुर्यात्कि वृथा शास्त्रचर्चया ॥ १३ ॥

13. எல்லா ஸந்தேஹத்தையும் விட்டு திட நிச்சயமுடைய பக்திமான் க்ருஷ்ண ஸங்கீர்த்தனமே செய்ய வேண்டும். வீண் சாஸ்த்ர சர்ச்சையால் என்ன பயன்?

आलोड्य सर्वशास्त्राणि विचार्य च पुनः पुनः ।
इदमेकं सुनिष्पन्नं ध्येयो नारायणः सदा ॥ १४ ॥

14. எல்லா சாஸ்திரங்களையும் கிளறி பல தடவை விசாரித்துப் பார்த்ததில் இது ஒன்றே தேறிற்று. அது யாதெனில் 'எப்பொழுதும் நாரா யணனையே தியானம் செய்ய வேண்டும்'.

भक्तिरेव परा नृणां हरिसान्निध्यदायिनी ।
तस्मात्समाचरेद्भक्तिं किमन्यैः क्षुद्रसाधनैः ॥ १५ ॥

15. சிறந்த பக்தியே மக்களுக்கு ஹரியின் தரிசனத்தைத் தரக்கூடியது. ஆகையால் பக்தி செய்ய வேண்டும். மற்ற அல்ப ஸாதனைகளால் என்ன பயன்?

अर्जुनोद्धवयोरग्रे भगवानिदमब्रवीत् ।
अहं भक्त्यैव सुलभो मां भक्त्यैव वशीकुरु ॥ १६ ॥

16. அர்ஜுனனிடமும், உத்தவனிடமும் பகவான் "நான் பக்திக்கே ஸுலபமானவன், என்னை பக்தியாலேயே வசம் செய்" என்று சொன்னான்.

नैव योगेन तपसा ज्ञानेन न च कर्मणा ।
भक्त्यैव लभ्यते कृष्णः परमात्मा सनातनः ॥ १७ ॥

17. யோகத்தாலோ, தவத்தாலோ, ஞானத்தாலோ, கர்மாவினுலோ இல்லை. அழிவற்ற க்ருஷ்ண பரமாத்மா பக்தியாலேயே அடையத் தக்கவன்.

भगवान्नारदो व्यासः प्रह्लादो ध्रुव एव च ।
वाल्मीकिरम्बरीषश्च मारुतिश्च विभीषणः ॥ १८ ॥
गजेन्द्रो गोपकन्याश्च पाञ्चाली पाण्डवास्तथा ।
पुण्डलीको बलिर्भीष्मः सनकाद्य एव च ॥ १९ ॥
येऽन्ये भागवता लोके विष्णुचित्तादयः कलौ ।
ते सर्वे भक्तियोगेन स्वाधीनश्चक्रिरे हरिम् ॥ २० ॥

18-20. பகவானுகிய நாரதர், வ்யாஸர், ப்ரஹ்லாதன், த்ருவன், வால்மீகி, அம்பரீஷன், ஹனுமான், விபீஷணன், கஜேந்திரன், கோபிகைகள், பாஞ்சாலீ, பாண்டவர்கள், புண்டரீகன், மஹாபலி, பீஷ்மர், ஸனகாதிகள், மற்றும் கலியில் தோன்றிய விஷ்ணுசித்தர் முதலிய பாகவதர்கள் யாவரும் பக்தியோகத்தாலேயே ஹரியை வசம் செய்து கொண்டனர்.

कर्मयोगो ज्ञानयोगो भक्तियोग इति स्फुटम् ।
योगत्रयं पुराणेषु प्रोक्तं वैकुण्ठसाधनम् ॥ २१ ॥

21. கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் இம்மூன்றும் புராணங்களில் வைகுண்டமடைய வழியாகச் சொல்லப்பட்டது.

तत्र विष्णुं वशीकर्तुं भक्तिरेव गरीयसी ।
सङ्कीतो भक्तिरत्नेन स्वभक्तं भजति प्रभुः ॥ २२ ॥

22. அவைகளில் விஷ்ணுவை வசம் செய்ய பக்தியே சிறந்தது. பக்திரத்தினத்தினுல் விலைக்கு வாங்கப்பட்ட ப்ரபு தனது பக்தனை பஜிக்கிருன்.

प्रह्लादोक्तप्रकारेण भक्तिस्तु नवलक्षणा ।
तत्रापि कीर्तनं मुख्यं कलिकल्मषनाशनम् ॥ २३ ॥

23. ப்ரஹ்லாதன் சொன்னபடி பக்தி ஒன்பது விதம். அதிலும் கலிகல்மஷத்தை ஒழிக்க கீர்த்தனமே முக்கியம்.

कीर्तनं त्रिविधं प्रोक्तं नामरूपगुणाश्रयम् ।
तत्रापि सुलभं नृणां श्रीपतेर्नामकीर्तनम् ॥ २४ ॥

24. அதுவும் நாமகீர்த்தனம், ரூபகீர்த்தனம், குணகீர்த்தனம் என்று மூன்று விதப்படும். அதிலும் ஸ்ரீபதியின் நாமகீர்த்தனமே மக்களுக்கு ஸுலபம்.

तस्मादहर्निशं भक्तः कुर्यात्तन्नामकीर्तनम् ।
न देशकालनियमः कीर्तनीयः सदा हरिः ॥ २५ ॥

25. எனவே இரவு பகலாக பக்தன் நாமகீர்த்தனமே செய்யவேண்டும். தேசகால நியமமில்லை. எப்பொழுதும் ஹரிகீர்த்தனம் செய்யலாம்.

निसर्गबन्धुं गोविन्द त्यक्त्वा मर्त्यस्य सर्वथा ।
अन्यथा शरणं नास्ति सत्यं सत्यं वदाम्यहम् ॥ २६ ॥

26. பிரியாத பந்துவான கோவிந்தனை விட்டு எவ்விதத்திலும் மரணமடையப்போகும் மனிதனுக்கு வேறு கதி இல்லை. ஸத்தியமாய்ச் சொல்லுகிறேன்.

माता पिता पतिः पत्नी पुत्रो मित्रश्च बन्धवः ।
शरीरपोषकाः सर्वे भगवानात्मपोषकः ॥ २७ ॥

27. பெற்றோர்கள், மனைவி, மக்கள், நண்பன், பந்துக்கள் யாவரும் சரீரத்தைப் போஷிப்பவர்கள்; பகவானே ஆத்மாவைப் போஷிப்பவன்.

बन्धुभिः पोषितो देहो मरणायैव कल्पते ।
अमृतत्वमवाप्नोति जीवो गोविन्दपोषितः ॥ २८ ॥

28. பந்துக்களால் போஷிக்கப்பட்ட தேஹம் மரணமடைகிறது. கோவிந்தனுல் போஷிக்கப்பட்ட ஜீவன் முக்தி பெறுகிறுன்.

कालक्षेपो न कर्तव्यो विना गोविन्दकीर्तनम् ।
अन्तकाले विना कृष्णमभयं कः प्रदास्यति ॥ २९ ॥

29. கோவிந்தகிர்த்தனம் செய்யாமல் பொழுது போக்க வேண்டாம். அந்திம காலத்தில் கிருஷ்ணனைத் தவிர யார் அபயம் தருவார்?

भागवता ऊचुः

नमस्ते गुरुराजेन्द्र नमस्ते शिष्यवत्सल ।
नमस्ते वैष्णवश्रेष्ठ नमस्ते कृष्णरूपिणे ॥ ३० ॥

பாகவதர்கள்

30. குருராஜேந்த்ர! உமக்கு வந்தனம். சிஷ்ய வத்ஸல! உமக்கு வந்தனம். வைஷ்ணவச்ரேஷ்டரே! உமக்கு வந்தனம். க்ருஷ்ணஸ்வரூபியான உமக்கு வந்தனம்.

लोकवेदविमुक्तेभ्यो वैष्णवेभ्यो नमो नमः ।
माहात्म्यं हरिदासानां ये शृण्वन्ति पठन्ति च ॥ ३१ ॥

31. லோகவேதங்களைக் கடந்த ஹரிதாஸர்களின் மஹிமையைப் படிக்கும், கேட்கும் வைஷ்ணவர்களுக்கு நமோ நமः.

श्रीसद्गुरुस्तवान्त

भगवन्नामबोधेन्द्रस्वामिने गुरवे मम ।
समर्प्यते भक्तिपूर्वं श्रीमद्वैष्णवसंहिता ॥ ३२ ॥

ஸ்ரீ ஸத்குரு

32. எனது குருவான ஸ்ரீபகவந்நாம போதேந்த்ர ஸ்வாமிகளுக்கு இந்த ஸ்ரீ வைஷ்ணவஸம்ஹிதை பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

निमित्तीकृत्य मां देवः स्वयं बोधेन्द्रदेशिकः ।
कारयन् संहितामेनां सुप्रीतो भवति प्रभुः ॥ ३३ ॥

33. போதேந்த்ர குருதேவர் என்னை நிமித்தமாகக்கொண்டு, தானே இந்த ஸம்ஹிதையைச் செய்வித்து ப்ரீதி அடைகிறார்.

क्वाहं मन्दमतिर्दीनः क्वेयं वैष्णवसंहिता ।
विना गुरुप्रसादेन मयेयं कथ्यते कथम् ॥ ३४ ॥

34. மந்தபுத்தி உடைய நான் எங்கே! இந்த வைஷ்ணவ ஸம்ஹிதை எங்கே! குருவின் அனுக்ரஹம் இல்லாவிடில் எப்படிச் சொல்ல முடியும்!

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे गुरुगीता नाम
द्वाविंशोऽध्यायः ॥ २२ ॥

இவ்வாறு ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
குருகீதை சரிதம் என்னும் இருபத்திரண்டாம்
அத்தியாயம் முற்றும்.

॥ अथ त्रयोविंशोऽध्यायः ॥

இருபத்துமூன்றாவது அத்யாயம்

श्रीसद्गुरुरुवाच

अत्र सङ्कीर्तितः कृष्णः शरणागतवत्सलः ।
प्रतिश्लोकं प्रतिपदं प्रत्यक्षरमपि प्रियाः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. இங்கு ஒவ்வொரு ச்லோகத்திலும், ஒவ்வொரு பதத்திலும், ஒவ்வொரு அக்ஷரத்திலும், சரணாகதவத்ஸலனான கிருஷ்ணன் கீர்த்தனம் செய்யப்படுகிறான்.

श्रुति स्मृतीतिहासानां पुराणानाञ्च वैष्णवाः ।
सारभूतेयमाभाति श्रीमद्वैष्णवसंहिता ॥ २ ॥

2. வைஷ்ணவர்களே! இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதை ச்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் இவைகளின் ஸாரமாக விளங்குகிறது.

नष्टे सनातने धर्मे नास्तिकप्रचुरे जने ।
प्रतिष्ठापयितुं लोके धर्मं भागवतं कलौ ॥ ३ ॥
अवतीर्णा महात्मानः श्रीविष्णोराज्ञयैव ते ।
सहस्रशः सदाचार्याः संप्रदायप्रवर्तकाः ॥ ४ ॥

3-4. கலியில் ஸனாதனதர்மம் நஷ்டமாகி மக்கள் பெரும்பாலும் நாஸ்திகர்களாகிவிடவே, பாகவத தர்மத்தை உலகில் நிலைநாட்டுவதற்கு ஸ்ரீவிஷ்ணுவின் ஆக்ஞையால் ஸம்ப்ரதாய ப்ரவர்த்த

ர்களும், ஸதாசார்யர்களுமான அந்த மஹான்கள் ஆயிரக்கணக்காக அவதரித்தார்கள்.

तेषां दिव्यचरित्रेषु वैष्णवानां महात्मनाम् ।
दृश्यते वैष्णवो धर्मः कृष्णसङ्कीर्तनात्मकः । ५ ॥

5. வைஷ்ணவப் பெரியோர்களின் திவ்ய சரித்திரங்களில் க்ருஷ்ணஸங்கீர்த்தன ரூபமான வைஷ்ணவதர்மமே காணப்படுகிறது.

साध्यं विष्णुपदं नित्यं साधनं नामकीर्तनम् ।
सर्वेषां संप्रदायानां सारोऽयं न हि संशयः ॥ ६ ॥

6. அழிவற்ற விஷ்ணுபதமே ஸாத்தியம். நாமகீர்த்தனமே ஸாதனம். எல்லா ஸம்ப்ரதாயங்களுடையவும் ஸாரம் இதுவே. ஸந்தேகமில்லை.

तस्मात्सङ्कीर्तयेत्कृष्णं सदा सर्वत्र सर्वथा ।
संप्रदायान्तरद्वेषं विनैव दृढनिष्ठया ॥ ७ ॥

7. ஆகையால் எப்பொழுதும், எங்கும், எவ்விதத்திலும் வேறு ஸம்ப்ரதாயங்களில் த்வேஷம் இல்லாமல் திடநிஷ்டையுடன் க்ருஷ்ணஸங்கீர்த்தனம் செய்யவேண்டும்.

इत्युक्तवन्तं सुगुणं सद्गुरुं वैष्णवोत्तमाः ।
सर्वे प्राञ्जलयः प्रोचुः प्रणम्य च पुनः पुनः ॥ ८ ॥

8. இவ்வாறு சொன்ன நற்குணமுடைய ஸத்குருவை எல்லா வைஷ்ணவோத்தமர்களும் பலதடவை வணங்கி, கைகுவித்தவாறு சொன்னார்கள்.

भागवता ऊचुः

सर्वसद्गुणसंपन्न सद्गुरो करुणानिधे ।
व्यासपीठस्याधिपते पुराणाचार्य ते नमः ॥ ९ ॥

பாகவதர்கள்

9. எல்லா நற்குணமும் நிரம்பியவரே! கருணை நிதியே! வ்யாஸபீடாதிபதியே! புராணாசார்யரே! ஸத்குருவே! உமக்கு வந்தனம்.

यो व्यासः कथयामास पुरा विष्णोः कथां शुभाम् ।
स एव वैष्णवानाञ्च कथां वक्तुमिहागतः ॥ १० ॥

10. எந்த வ்யாஸர் முன்பு விஷ்ணுவின் சுபமான கதையைச் சொன்னாரோ, அவரே இப்பொழுது வைஷ்ணவர்களின் கதையைச் சொல்லுவதற்கு வந்திருக்கிறார் என்று நினைக்கின்றோம்.

एवं मन्यामहे देव तस्मात्करुणया विभो ।
अध्यारोह व्यासपीठं सुप्रसन्नो जगद्गुरो ॥ ११ ॥

11. ஆகையினால் ப்ரபோ! குருதேவ! கருணையுடன் வ்யாஸபீடத்தில் எழுந்தருள வேண்டும்.

अभिषिक्तो वैष्णवैस्त्वं दिव्यसिंहासने स्थितः ।
आज्ञापय कृपासिन्धो शिष्यानस्मान् जगद्गुरो ॥ १२ ॥

12. கருணைக்கடலே! ஜகத்குரோ! நீர் வைஷ்ணவர்களால் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டு, திவ்ய ஸிம்மாஸனத்தில் அமர்ந்து சிஷ்யர்களான எங்களை நியமிக்கவேண்டும்.

कलिसाम्राज्यनाशाय नामसाम्राज्यवृद्धये ।
श्रीमन् सद्गुरुराजेन्द्र लोके दिग्विजयं कुरु ॥ १३ ॥

13. ஸ்ரீமானே! ஸத்குரு ராஜேந்த்ர! கலி ஸாம்ராஜ்யத்தை நாசம் செய்ய வேண்டியும், நாம ஸாம்ராஜ்யத்தை வளர்க்க வேண்டியும் உலகில் திக்விஜயம் செய்வீராக.

इत्युक्तः सद्गुरुः सद्यः साधुभिर्विमलाशयैः ।
आरुरोह व्यासपीठं पूर्णचन्द्रसमाननः ॥ १४ ॥

14. தூய உள்ளம் படைத்த ஸாதுக்களால், இவ்வாறு சொல்லப்பட்ட ஸத்குரு, பூர்ணசந்த்ரனை ஒத்த முகம் உடையவராய் வ்யாஸபீடத்தில் ஏறினார்.

व्यासपीठस्थितं देवं सुप्रसन्नं जगद्गुरुम् ।
अभ्यषिञ्चन् महात्मानः हरिकीर्तनपूर्वकम् ॥ १५ ॥

15. வ்யாஸபீடத்தில் அமர்ந்து ப்ரஸன்னமாய் இருக்கும் குருதேவரை ஹரிகீர்த்தனம் செய்து கொண்டே பெரியோர்கள் அபிஷேகம் செய்தனர்.

चक्रुः पुष्पाञ्जलिं सर्वे साधवो ननृतुर्जगुः ।
छत्रञ्च चामरयुगं जगृहुः शिष्यसत्तमः ॥ १६ ॥

16. எல்லா ஸாதுக்களும் புஷ்பாஞ்ஜலி செய்தார்கள். ஆடினார்கள், பாடினார்கள். சிஷ்யர்கள் இரண்டு வெண்சாமரமும், வெண்குடையும் பிடித்தார்கள்.

विजयी भव लोकेऽस्मिन् सदा सर्वत्र सद्गुरो ।
इति सर्वेऽपि सानन्दं जगर्जुः प्रेममोहिताः ॥ १७ ॥

17. ஸத்குருவே! இவ்வுலகில் எப்பொழுதும், எங்கும் வெற்றியே பெருவீராக! என்று யாவரும் பக்திபரவசமாகி ஆனந்தமாக கர்ஜனை செய்தார்கள்.

पट्टाभिषिक्तो भगवान् सद्गुरुः प्रेमपूर्वकम् ।
शिष्यैः सर्वैश्च संयुक्तश्चकार हरिकीर्तनम् ॥ १८ ॥

18. பட்டாபிஷேகம் செய்யப்பட்ட பகவானாகிய ஸத்குரு எல்லா சிஷ்யர்களுடன்கூடி, ப்ரேமையுடன் ஹரிகீர்த்தனம் செய்தார்.

कृष्णसङ्कीर्तनं तेषां दिक्षु व्याप्तमभूत्तदा ।
कलिर्नष्टोऽभवत्सद्यो नामकीर्तनवैभवात् ॥ १९ ॥

19. அப்பொழுது அவர்களின் க்ருஷ்ணஸங்கீர்த்தனம் திசை எங்கும் பரவிற்று. நாமகீர்த்தன மஹிமையால் உடனேயே கலி நஷ்டமாயிற்று.

मङ्गलारातिकञ्चक्रुर्वैष्णव्यः प्रेमपूर्वकम् ।
गायन्त्यो हरिगीतञ्च मधुरं मङ्गलप्रदम् ॥ २० ॥

20. வைஷ்ணவிகள் ப்ரேமையுடன் ஹரி நாமங்களை மதுரமாய்ப் பாடிக்கொண்டு மங்களஹாரதி செய்தனர்.

इति श्रीकृष्णप्रेमिप्रणीतायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे श्रीसद्गुरुपट्टाभिषेको नाम
त्रयोविंशोऽध्यायः ॥ २३ ॥

இவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதையின் பத்தாவது பாகத்தில்
ஸத்குரு பட்டாபிஷேகமென்னும் இருபத்துமூன்றும்
அத்தியாயம் முற்றும்.

॥ अथ चतुर्विंशोऽध्यायः ॥

இருபத்துநான்காவது அத்தியாயம்

श्रीसद्गुरुरुवाच

ततो दशमभागस्य कथासङ्ग्रह उच्यते ।
यत्र सङ्कीर्त्यते स्वामी भक्तकोलाहलो हरिः ॥ १ ॥

ஸ்ரீ ஸத்குரு

1. பிறகு ஸ்வாமியும், பக்தகோலாஹலனுமான ஹரியை ஸங்கீர்த்தனம் செய்யக்கூடிய பத்தாவது பாகத்தின் கதைச்சுருக்கம் சொல்லப்படுகிறது.

प्रथमे क्षितिरामस्तु हिंसितोऽपि च लोभिना ।
सत्यं तु नैव तत्याज रामभक्तो महामनाः ॥ २ ॥

2. முதல் அத்தியாயத்தில் ராமபக்தரும், பெரியமனது படைத்தவருமான க்ஷிதிராமர், லோபியால் ஹிம்ஸிக்கப் பட்டபோதிலும் ஸத்தியத்தைக் கைவிடவில்லை.

द्वितीये रामकृष्णस्तु वैष्णवोपि स्वभावतः ।
महाकाल्या प्रार्थितस्तु पूजयामास तामपि ॥ ३ ॥

3. இரண்டாமத்தியாயத்தில் இயற்கையாகவே வைஷ்ணவரான ராமகிருஷ்ணரோவென்றால் மஹாகாளியினால் பிரார்த்திக்கப்பட்டவராக அவளை பூஜித்தார்.

तृतीये ब्राह्मणी काचिद्रामकृष्णे महात्मनि ।
वात्सल्यभावसम्युक्ता लेभे श्रीरामदर्शनम् ॥ ४ ॥

4. மூன்றமத்தியாயத்தில் ஒரு ப்ராம்மணி மஹாத்மாவான ராமக்ருஷ்ணரிடத்தில் வாத்ஸல்ய பாவத்துடன் கூடியவளாய் ஸ்ரீராம தர்சனம் பெற்றாள்.

चतुर्थे रामकृष्णस्तु पुरीन्द्राय महात्मने ।
लीलया दर्शयामास भक्तिमाहात्म्यमद्भुतम् ॥ ५ ॥

5. நான்காமத்தியாயத்தில் ராமக்ருஷ்ணர் மஹாத்மாவான தோதாபுரிக்கு அற்புதமான பக்தியின் மாஹாத்மியத்தை விளையாட்டாகக் காட்டினார்.

पञ्चमे रामकृष्णस्य कृपया केशवो महान् ।
सनातनमतस्यास्य वेत्ति तत्वार्थमुत्तमम् ॥ ६ ॥

6. ஐந்தாமத்தியாயத்தில் ராமகிருஷ்ணருடைய கிருபையால் மஹானான கேசவசந்த்ரஸேனர் உத்தமமான இந்த ஸனாதன மதத்தின் தத்துவத்தை அறிந்தார்.

षष्ठे गदाधरस्यास्य प्रेमभक्तिमलौकिकीम् ।
दृष्ट्वापि मधुरानाथः सुप्रसन्नो बभूव ह ॥ ७ ॥

7. ஆறாமத்தியாயத்தில் இந்த கதாதரருடைய அலௌகிகமான ப்ரேமபக்தியைக் கண்டும், மதுரா நாதர் ஸுப்ரஸன்னராக ஆனார்.

सप्तमे शारदादेवी पातिव्रत्यपरायणा ।
बन्धून् सर्वान् परित्यज्य रामकृष्णमुपागता ॥ ८ ॥

8. ஏழாமத்தியாயத்தில் பதிவ்ரதையான சாரதாதேவி ஸகல பந்துக்களையும் விட்டுவிட்டு ராமக்ருஷ்ணரை வந்தடைந்தாள்.

अष्टमेऽपि नरेन्द्रस्तु सत्यदर्शनतृष्णया ।
रामकृष्णामृतं प्राप्य प्रशान्तहृदयोऽभवत् ॥ ९ ॥

9. எட்டாமத்தியாயத்தில் நரேந்த்ரன் ஸத்தியத்தைக் காணும் தாஹத்தினுல், ராமக்ருஷ்ணராகிய அமிர்தத்தை அடைந்து சாந்தியை அடைந்தான்.

नवमे भारतं देशं पाश्चात्यजनपीडितम् ।
महान् मोहनदासस्तु पालयामास सुव्रतः ॥ १० ॥

10. ஒன்பதாமத்தியாயத்தில் நல்ல வ்ரதமுடையவரும், மஹானுமான மோஹனதாஸர் மேல் நாட்டவர்களால் பிடிக்கப்பட்ட பாரத தேசத்தைக் காப்பாற்றினுர்.

दशमे ब्रह्मचर्येण तपसा यमुनावने ।
कैवल्यारामयोगीन्द्रो लेभे श्रीकृष्णदर्शनम् ॥ ११ ॥

11. பத்தாமத்தியாயத்தில் கைவல்யாராமயோகிந்த்ரர் ப்ருஹ்மசர்யத்தினுலும், தவத்தினுலும் ப்ருந்தாவனத்தில் க்ருஷ்ணதர்சனத்தைப் பெற்ருர்.

एकादशे वैष्णवस्य यतीनाञ्च शिरोमणेः ।
कीर्त्यते चरितं पुण्यमानन्दगिरियोगिनः ॥ १२ ॥

12. பதினொன்றுமத்தியாயத்தில் வைஷ்ணவரும், யதிகளில் சிறந்தவருமான ஆனந்தகிரியோகியினுடைய புண்ணியமான சரித்திரம் சொல்லப்படுகிறது.

द्वादशे परमं पुण्यं भक्तश्रोत्रसुखावहम् ।
स्वयंप्रकाशयोगीन्द्रचरितञ्चानुवर्ण्यते ॥ १३ ॥

13. பன்னிரண்டாமத்தியாயத்தில் மிகவும் புண்ணியமானதும், பக்தர்களுடைய காதுகளுக்கு ஸுகத்தைத் தரக்கூடியதுமான ஸ்வயம்ப்ரகாச யோகீந்த்ரருடைய சரிதம் வர்ணிக்கப்படுகிறது.

त्रयोदशे कीर्तितञ्च कृष्णभक्तशिखामणेः ।
श्रीमन्नटनगोपालदासस्य चरितं शुभम् ॥ १४ ॥

14. பதிமூன்றுமத்தியாயத்தில் கிருஷ்ணபக்தசிரோமணியான நடனகோபாலதாஸருடைய சுபமான சரிதம் சொல்லப்படுகிறது.

चतुर्दशेपि भक्तस्य रसिकानां शिखामणेः ।
अरणस्यापि चरितं मधुरं परिकीर्त्यते ॥ १५ ॥

15. பதினான்காமத்தியாயத்தில் பக்தரும், சிறந்த ரஸிகருமான அரணருடைய சரிதம் மதுரமாய்ச் சொல்லப்படுகிறது.

ततः पञ्चदशे प्रोक्तं वैष्णवानन्दवर्धनम् ।
कोदण्डरामचरितं कलिकल्मषनाशनम् ॥ १६ ॥

16. பதினைந்தாமத்தியாயத்தில் வைஷ்ணவர்களுக்கு ஆனந்தத்தைத் தரக்கூடியதும், கலிகல்

மஷங்களைப் போக்கக்கூடியதுமான கோதண்டராம சரிதம் சொல்லப்படுகிறது.

षोडशे राजगोपालदेशिकस्य महामुनेः ।
भगवद्विरहो व्यक्तं रङ्गयात्रा च गीयते ॥ १७ ॥

17. பதினாறுமத்தியாயத்தில் மஹாமுனிவரான ராஜகோபால தேசிகரின் பகவத்விரஹமும், ரங்க யாத்திரையும் தெளிவாகச் சொல்லப்படுகிறது.

अथ सप्तदशे शैलं प्राप्य गोपालदेशिकः ।
दृढविश्वाससम्युक्तः प्रपेदे शरणं हरिम् ॥ १८ ॥

18. பதினேழாமத்தியாயத்தில் கோபாலதேசிகர் திருமலையை அடைந்து, திடமான விச்வாசத்துடன் கூடியவராய் ஹரியை சரணமடைந்தார்.

अष्टादशे रामचन्द्रः सीतया भक्तवत्सलः ।
गोपालदेशिकस्यास्य कृपया दर्शनं ददौ ॥ १९ ॥

19. பதினெட்டாமத்தியாயத்தில் க்ருபையால் பக்தவத்ஸலனான ராமசந்த்ரன் சீதையுடன் கோபால தேசிகருக்கு தரிசனம் தந்தார்.

एकोनविंशाध्याये तु राजगोपालदेशिकः ।
भुवनं पावयामास निजपादाब्जरेणुना ॥ २० ॥

20. பத்தொன்பதாமத்தியாயத்தில் ராஜகோபாலதேசிகர் தன்னுடைய பாததூளியால் உலகைப் பாவனமாக்கினார்.

विंशेपि राजगोपालं रामभक्तं दृढव्रतम् ।
कृपयाऽऽनन्दयामास भक्तकोलाहलो हरिः ॥ २१ ॥

21. இருபதாமத்தியாயத்தில் திடமான விரத முடைய ராமபக்தரான ராஜகோபாலதேசிகரை பக்தகோலாஹலனை ஹரி க்ருபையால் ஸந்தோஷப் படுத்தினன்.

एकविंशतमेऽध्याये राजगोपालदेशिकः ।
भक्तकोलाहलस्यैव सन्निधौ प्राप तत्पदम् ॥ २२ ॥

22. இருபத்தொன்றுமத்தியாயத்தில் ராஜ கோபாலதேசிகர் பக்தகோலாஹலனுடைய ஸன்னிதியிலேயே அவன் பாதத்தை அடைந்தார்.

द्वाविंशतितमेऽध्याये गुरुगीता प्रकीर्तिता ।
यस्मिन्नखिलशास्त्राणां सारं सङ्गृह्य दीयते ॥ २३ ॥

23. இருபத்திரண்டாமத்யாயத்தில் எல்லா சாஸ்த்திரங்களுடையவும் ஸாரம் சேகரிக்கப்பட்டு குரு கீதையாகச் சொல்லப்படுகிறது.

त्रयोविंशे सद्गुरोश्च सर्वैर्भागवतैः कृतः ।
पट्टाभिषेकः सरसं सानन्दमभिवर्ण्यते ॥ २४ ॥

24. இருபத்திமூன்றுமத்தியாயத்தில் எல்லா பாகவதர்தளாலும் ஸ்ரீ ஸத்குருவிற்குச் செய்யப் பட்ட பட்டாபிஷேகம் ஸரஸமாகவும், ஆனந்தமாக வும் வர்ணிக்கப்படுகிறது.

एवं दशमभागस्य प्रोक्तश्चाध्यायसङ्ग्रहः ।
पठतां शृण्वताञ्चापि स्मरणाय पुनः पुनः ॥ २५ ॥

25. படிப்பவர்களும், கேட்பவர்களும் நினைவில் வைத்துக்கொள்வதற்காக இவ்வாறு பத்தாவது பாகத்தின் கதைச்சுருக்கம் சொல்லப்பட்டது.

यः पठेच्छ्रद्धया नित्यमिमां वैष्णवसम्हिताम् ।
स याति परमं धाम शाश्वतं श्रीपतेर्ध्रुवम् ॥ २६ ॥

26. எவனொருவன் சிரத்தையுடன் தினமும் இந்த வைஷ்ணவ ஸம்ஹிதையைப் படிப்பானே அவன் அழிவற்ற பரமபதத்தை அடைவான்.

मङ्गलं सद्गुरुभ्योस्तु वैष्णवेभ्योस्तु मङ्गलम् ।
मङ्गलं माधवायास्तु प्रेमिकायास्तु मङ्गलम् ॥

27. ஸத்குருநாதனுக்கும், வைஷ்ணவர்களுக்கும், மாதவனுக்கும், ப்ரேமிகனுக்கும் மங்களம்.

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य सर्वप्राणिसंरक्षक
जगद्गुरु श्रीभगवन्नामबोधेन्द्रचरणारविन्द
मकरन्दरसिकेन श्रीकृष्णप्रेमिमहाप्रभुणा
विरचितायां श्रीवैष्णवसंहितायां
दशमभागे कथासंग्रहो नाम
चतुर्विंशोऽध्यायः ॥ २४ ॥

॥ इति दशमभागः समाप्तः ॥

இவ்வாறு ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய
ஸர்வப்ராணிஸம்ரக்ஷகராய் எழுந்தருளி இருக்கும்
ஸ்ரீ பகவந்நாமபோதேந்த்ர ஸ்வாமிகளின் திரு
வடி ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண
ப்ரேமி ஸ்வாமிகளால் அருளிச்செய்யப்
பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஸம்ஹிதையின்
பத்தாவது பாகத்தில் இருபத்து
நான்காமத்தியாயம்
முற்றும்.

பத்தாவது பாகம் முற்றிற்று

॥ श्रीभक्तकोलाहल समर्पणमस्तु ॥